REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 டிசம்பர் 11 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 89 இல. 294
Saturday 11, December, 2021
16 பக்கங்கள்
30/-

பலியான இந்திய படைத்தளபதியின்

## இறுதி சடங்கில் பங்கேற்க இராணுவ தளபதி பயணம்



ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த இந்திய பாதுகாப்பு முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக பாதுகாப்புப் படைகளின் பிரதானியும்

06

பண்டிகை காலத்தில் கொவிட் பரவலை தடுக்குமுகமாக

# அடுத்த இரு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலை முழுமைப்படுத்தவும்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை



- தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத எவரும் பொது இடங்களுக்குச் செல்லத் தடை
- கொவிட்19 தொற்றாளர்களில் அதிக–மானோர் தடுப்பூசிகளைப் பெறாவர்களே
- 16 – 19 வயதுடைய பிள்ளைகளுக்கு இரண்டாவது டோஸ்
- 12– 15 வயதுடைய பிள்ளைகளுக்கு முதல் டோஸ் வழங்க நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் கொவிட்19 தொற்றுப் பரவல் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக, அடுத்த இரு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலை முழுமைப்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொவிட்19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.


நேற்று (10) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 03 மாதங்கள் நிறைவடைந்த அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவர். அதன்படி, தடுப்பூசி வழங்கப்படும் எந்தவோர் இடத்திலும்

06

## சவால்களை வெற்றி கொள்ள நிலையான பொருளாதார கொள்கை

விரைவில் அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் நிலையான பொருளாதார கொள்கையை உருவாக்கவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமைச்சின் மூலமாக அதனை

06

## யுத்தக் குற்றச்சாட்டுகள் சர்வதேசம் செல்ல பொன்சேகாவே காரணம்

இன்று அவர் இராணுவம் தொடர்பில் பேசுவது வேடிக்கை

பாராளுமன்றில் மக்கள் பாதுகாப்புஅமைச்சர் சரத் வீரசேகர

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**




இலங்கை தொடர்பில் சர்வதேசத்தின் யுத்தக்குற்றச் சாட்டுக்கான சந்தேக விதையை விதைத்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இன்று இராணுவத்தினர் தொடர்பில் பேசுவது வேடிக்கையானது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இந்தியா போன்ற

06

# 2/3 பெரும்பான்மையுடன் பட்ஜட் நிறைவேறியது

## ஆதரவாக 157; எதிராக 64



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஸ்ரீல. மு.கா, அ.இ.ம.கா, ஐ.ம.ச, த.மு. கூட்டணி எம்.பிக்கள் 09 பேர் ஆதரவாக வாக்களிப்பு

அரசாங்கத்தின் 2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 03 ஆம் மதிப்பீடு 93 மேலதிக வாக்குகளினால் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும் தரப்புடன் பொதுஜன பெரமுன எம்.பிக்களும் கூட்டணி கட்சி எம்.பிக்களும் எதிரணியை சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்கள் வாக்களித்தனர்.

06

அனுராதபுரம் – புத்தளம் வீதியில் கோர விபத்து

## மணமகளை அலங்கரிப்பதற்காக சென்ற இருவர் ஸ்தலத்தில் பலி

வேனுடன் பஸ் மோதியதில் மேலும் அறுவருக்கு படுகாயம்



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அனுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். நொச்சியாகமையிலிருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த வான் ஒன்று அநுராதபுரத்திலிருந்து நொச்சியாகம நோக்கி பயணித்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.வேனில் பயணித்த 06 பேர் படுகாயமடைந்து அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

06



## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பு

03 பக்கம்

முழுமையான விசாரணை செய்யுமாறு பேராயர் குழு CID யில் முறைப்பாடு

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண பூரண ஒத்துழைப்பு

தயாராக இருப்பதாக சபையில் சஜித் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாடு எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நிலையை நிவர்த்தி செய்யும் வகையில் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுக் கொள்வதற்கு உச்ச அளவு

06

## இராதாகிருஷ்ணன் MP க்கு நேரம் வழங்கிய அரச தரப்பு

எதிரணி நேரம் வழங்காது புறக்கணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வி.இராதாகிருஷ்ணன் உரையாற்ற எதிரணி போதிய நேரம் ஒதுக்காததால் ஆளும் தரப்பினால் அவருக்கு மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டது.

நிதி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய இராதாகிருஷ்ணன் எம்.பி, தனக்கு

06

IMFஅதிகாரிகளை சந்திக்க நேரம் ஒதுக்காது

## அரசுக்கு ஒத்துழைப்பதாக கூறும் சஜித்தின் கூற்றில் நம்பிக்கையில்லை



பலமான நாட்டை கட்டியெழுப்ப பசில் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

எமக்கு ஒத்துழைக்க தயாரென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தாலும் இங்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கு சந்திக்க அவர் இதுவரை நேரம் வழங்கவில்லெயன நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ

06

## பல்கலைக்கழக பதிவுக்கான கால எல்லை நீடிப்பு




2020 க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் படி பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களை பதிவு செய்யும் செயற்பாடுகளுக்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

06

## 57 நாடுகளுக்கு பரவிய ஒமிக்ரோன் வைரஸ்

உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் 57 நாடுகளுக்குள் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

உருமாறிய ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் பரவல் பல்வேறு நாடுகளில் கண்டறியப்பட்டு வருகிறது. தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த தீவிரமான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவரும் இச்சந்தர்ப்பத்தில், அமெரிக்கா, அவுஸ்திரேலியா

06

## தடுப்பூசி பெறுவது கட்டாயமாக்கப்படும்

சட்ட ஏற்பாடுகள் விரைவில் வருகிறது



கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக 02 தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதை கட்டாயப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 02 அல்லது 03 மாதங்களில் மேற்கொள்ளப்படுமென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். எத்தகைய தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாத பெண் ஒருவர் நாட்டுக்கு

06

நுரைச்சோலை மின் நிலையம் வழமைக்கு

## மின்வெட்டு எனும் பேச்சுக்கு இடமில்லை

மின்சக்தி அமைச்சு அறிவிப்பு




நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் முழுமையாக இயங்கி வருவதால் நேற்று முதல் மின்வெட்டை நிறுத்த தீர்மானித்ததாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின்நிலையத்திலுள்ள மூன்று ஜெனரேட்டர்களில் இரண்டில் கோளாறு ஏற்பட்டிருந்தது. இதில் ஒன்றில் கோளாறு சரி செய்யப்பட்டதுடன்

06

## மரக்கறி விலைகள் சிலவற்றின் விலை திடீரென அதிகரிப்பு



சந்தையில் மரக்கறி விலைகள் சிறிதளவு குறைந்துள்ள போதிலும் கறி மிளகாய் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றின் விலைகள் உயர்வாகவே காணப்படுவதாக விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப

06

## கொழும்பிலிருந்து யாழ். சென்ற பஸ் கோர விபத்து

பல்கலைக்கழக மாணவி பலி; – பலருக்கு காயம்



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் சொகுசு பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தின் போது பஸ் பாதையைவிட்டு விலகி அருகிலுள்ள வயலுக்குள் பாய்ந்துள்ளது. மதவாச்சிக்கும் இகிரிகொல்லாவுக்கும் இடையில்

06

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

## காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் நேற்று போராட்டம்



சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு நேற்று (10) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நீதி வேண்டி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம்

06

படகுப் பாதை விபத்து சம்பவம்

## கிண்ணியா நகரசபை தவிசாளருக்கு பிணை

16ஆம் திகதி ஆஜராகப் பணிப்பு



**ரொட்டவெவ குறூப் நிருபர்**

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீமுக்கு திருகோணமலை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று (10) வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு

06

**விக்கல் வீராச்சாமி**



தோட்டத் தொழிலாளரது சம்பளத்தை 2,500 ஆக்கணும் எண்டு வடிவேல் MP காமெடி பண்ணியிருக்கிறார் பாத்தியலே....

அஞ்சு வருஷமா ஆட்சியிலிருந்து 50 ரூபாவ கூட்ட முடியாதவர் இப்ப இப்படி சொன்னா அது உண்மையில காமெடி–தான்...!!!

# சர்வதேச செய்திகள்

## மெக்சிகோவில் குடியேறிகளை ஏற்றிய டிரக் வண்டி கவிழ்ந்ததில் 53 பேர் பலி



தெற்கு மெக்சிகோவில் டிரக் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த குறைந்தது 53 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

சியாபாஸ் மாநிலத்தில் அந்த டிரக் வண்டி விபத்துக்குள்ளாகி கவிழ்ந்தபோது அதற்குள் மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த குடியேறிகள் என்று கூறப்படும் 100க்கும் அதிகமானவர்கள் இருந்துள்ளனர்.

கவிழ்ந்த டிரக் வண்டிக்கு அருகில் வீதி எங்கும் பாதிக்கப்பட்டவர்கள் சிதறி இருப்பது அங்கு பிடிக்கப்பட்ட படங்களில் பார்க்க முடிகிறது. வெள்ளை நிற உறைகளில் சடலங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருப்பதையும் காண முடிகிறது.

இவ்வாறான விபத்துகளில் மெக்சிகோவில் இடம்பெற்ற மோசமான விபத்துகளில் ஒன்றாக இது உள்ளது. இதில் குறைந்தது 58 பேர் காயமடைந்திருப்பதோடு சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று சியாபாஸ் சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின தலைவர் மனுவேல் கார்சியா தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களும் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதி செய்யப்படவில்லை. பெரும்பாலானவர்கள் ஹொன்டுராஸ் மற்றும் குவாதமாலாவில் இருந்து இந்த டிரக்கில் ஏற்றப்பட்டுள்ளனர்.

வேகமாக வந்த டிரக் வண்டி வளைவு ஒன்றில் வைத்து திருப்ப முயன்றபோது பாதசாரிகளுக்கான தடுப்பில் மோதி இருப்பதாக கூறப்படுகிறது. சியாபாஸ் தலைநகர் டுக்ஸ்லா குட்டியரஸை நோக்கி இந்த டிரக் பயணித்துள்ளது.

உள்ளிருப்பவர்களின் எடை தாங்காமல் டிரக் வண்டி கவிழ்ந்ததாக விபத்தில் சிக்கிய ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

“அது வளைவு ஒன்றை எடுத்த போது எமது எடை காரணமாக அதனோடு சேர்ந்து நாமும் சாய்ந்தோம்” என்று சம்பவ இடத்தில் அதிர்ச்சியுடன் இருந்த குவாதமாலா நாட்டைச் சேர்ந்த ஆடவர் ஒருவர் சமூக ஊடகத்தில் இடம்பெற்ற நேரடி ஒளிபரப்பு ஒன்றில் குறிப்பிட்டார். “டிரக்கிற்கு உள்ளே இருக்கும் ஆட்களின் எடையை சமாளிக்க முடியாமல் போனது” என்றும் அவர் கூறினார்.

குவாதமாலாவின் அண்டை மாநிலமான சியாபாஸ், ஆவணங்களற்ற குடியேறிகளின் பிரதான இடமாற்று புள்ளியாக உள்ளது.

வறுமை மற்றும் வன்முறைகள் காரணமாக ஆண்டுதோறும் மத்திய அமெரிக்காவில் இருந்து ஆயிரக்கணக்கான குடியேறிகள் மெக்சிகோ வழியாக அமெரிக்காவை அடைய முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் பலரும் ஆட்கடத்தல்காரர்களுக்கு பணம் செலுத்தும் நிலையில், அவர்கள் ஆபத்தான நீண்ட டிரக் பயணத்தில் அழைத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா மற்றும் மெக்சிகோ எல்லை உலகில் அதிக உயிரிழப்பு நேரும் ஒற்றை எல்லைக் கடவை என குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பு தரவுகள் காட்டுகின்றன. இந்த எல்லையை கடக்கும் முயற்சியில் இந்த ஆண்டில் மாத்திரம் குறைந்தது 650 பேர் உயிரிழந்துள்ளனர். இது வேறு எந்த ஆண்டுகளையும் விட அதிகமான எண்ணிக்கையாக உள்ளது.

இதில் எல்லையை நோக்கிய ஆபத்தான பயணங்களிலும் பல உயிரிழப்புகள் இடம்பெறுகின்றன. எனினும் இது பற்றி துல்லியமான தரவுகளை சேகரிப்பது கடினமாக உள்ளது என்று குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த விபத்து வருத்தம் அளிப்பதாக மெக்சிகோ ஜனாதிபதி அன்ட்ரெஸ் மனுவேல் லோபஸ் தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். ‘இந்த சோகத்திற்கு ஆழ்ந்து வருந்துகிறேன்’ என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒமிக்ரோன் திரிபில் மிதமான அறிகுறிகள்



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு மிதமான அறிகுறிகளையே ஏற்படுத்தக்கூடும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும் கூடுதல் புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென அது குறிப்பிட்டது.

அதன் மூலம், ஒமிக்ரோன் திரிபின் சீற்றம், இதுவரை பரவியிருக்கும் கொரோனா வைரஸ் வகைகளுடன் ஒப்பிடுகையில், வேறுபட்டதா என்பதை நிர்ணயிக்க முடியும் என்று கூறப்பட்டது.

இதுவரை சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, ஒமிக்ரோன் திரிபு, டெல்டா வகை வைரஸை விட மேலும் எளிதில் பரவக்கூடியது என்று நம்பப்படுகிறது.

இருப்பினும், அது டெல்டா வைரஸ் பரவலை விஞ்சிவிடுமா என்பதை உறுதியாகக் கூறமுடியாது என்று அமைப்பு கூறியது.

கொவிட்19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஒமிக்ரோன் திரிபினால் மீண்டும் பாதிக்கப்படும் சாத்தியம் அதிகம் என்று உலக சுகாதார அமைப்பு அண்மையில் கூறியிருந்தது.

ஒமிக்ரோன் திரிபு, டெல்டா திரிபை விட, குறைவான பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதற்கு ஆதாரம் ஓரளவு உள்ளதாகவும் அது குறிப்பிட்டது.

## சிறை சென்ற செய்தியாளர் எண்ணிக்கை புதிய உச்சம்



இந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை புதிய உச்சத்தைத் தொட்டுள்ளதாக செய்தியாளர்களைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

டிசம்பர் முதலாம் திகதி வரை, உலகம் முழுவதும் மொத்தம் 293 செய்தியாளர்கள் சிறையில் இருந்ததாக அது வெளியிட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 280ஆக இருந்தது.

மிக அதிகமாக சீனா 50 செய்தியாளர்களை இந்த ஆண்டு சிறையில் அடைத்துள்ளது. அதற்கு அடுத்த நிலையில் மியன்மார் 26 செய்தியாளர்களைச் சிறையில் வைத்தது.

25 பேர் எகிப்திலும், 23 பேர் வியட்நாமிலும், 19 பேர் பெலரஸிலும் சிறையில் இடப்பட்டனர்.

தொடர்ந்து 6ஆவது ஆண்டாக சிறையில் அடைக்கப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் குழுவின் நிர்வாக பணிப்பாளர் ஜோவல் சைமன் கூறினார்.

வருடா வருடம் பட்டியலில் பல நாடுகள் இடம் பெறுவது வேதனை அளிப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்த ஆண்டு 24 செய்தியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் குழு தெரிவித்தது.

மெக்சிகோவில் 9 செய்தியாளர்களும் இந்தியாவில் நால்வரும் கொல்லப்பட்டனர். உலகெங்கும் செய்தியாளர்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருவதை அறிக்கை சுட்டியது.

## தடுப்பு மருந்துகளை பதுக்க வேண்டாம்



தடுப்பு மருந்துகளைப் பதுக்கி வைக்க வேண்டாம் என்று உலக நாடுகளிடம் உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறு செய்வது வைரஸ் தொற்றுச் சூழலை இன்னும் அதிக காலத்திற்கு நீட்டிக்கும் என்று அந்த அமைப்பு எச்சரித்தது.

செழிப்புமிக்க நாடுகள் தங்கள் மக்களைப் பாதுகாக்க தடுப்பு மருந்துகளை அதிக அளவில் சேகரித்து வைக்கும் அபாயம் இருப்பதாக அமைப்பு கூறியது. அதனால் தடுப்பு மருந்துகளைப் பெற ஏழை நாடுகள் சிரமப்படலாம் என்று அது குறிப்பிட்டது.

ஆபிரிக்கக் கண்டத்தில் ஓமிக்ரோன் வைரஸால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாக அமைப்பு கூறியது.

ஆனால் கடந்த ஒரு வாரத்தில் புதிய வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை ஒரு மடங்கு அதிகரித்து 100,000க்கும் மேல் பதிவானதாக அது தெரிவித்தது.

## தாய்வான் உறவை ஆரம்பிக்க அமெரிக்காவில் புது சட்டமூலம்



ஒரு சீனா கொள்கையை முடிவுக்குக் கொண்டுவந்து தாய்வானுடனான இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஆரம்பிக்கும் அமெரிக்க பாராளுமன்ற சட்டமூலம் ஒன்றுக்கு 18 உறுப்பினர்கள் ஆதரவு அளித்துள்ளனர்.

இந்த சட்டமூலம் கடந்த ஒன்பது மாதங்களில் 16 மேலதிக இணை அனுசணையாளர்களை பெற்றிருப்பதோடு அவர்கள் அனைவரும் குடியரசு கட்சியை சேர்ந்தவர்களாவர். இது பற்றிய செய்தி தாய்வான் நியூஸ் செய்தி நிறுவனத்தில் வெளியாகியுள்ளது.

கடந்த மார்ச் முதலாம் திகதி டொம் டிப்பனி மற்றும் ஸ்கொட் பெர்ரி ஆகிய இரு கொங்கிரஸ் உறுப்பினர்களாலும் இது கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றத்தில் தாய்வான் மற்றும் அமெரிக்க கொள்கை மாற்றத்திற்கு ஆதரவு அதிகரித்து வருவதாக டிப்பனியின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஒரு சீனா கொள்ளை சீனாவின் கீழான ஒரே இறைமை கொண்ட நாட்டை வலியுறுத்துவதாக உள்ளது. அது தாய்வானின் அங்கீகாரத்தை மறுப்பதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.


## திபெத் நிலைமை குறித்து ஐ.நா பேரவையில் கருத்து



திபேத்தில் தற்போது நிலவும் மனித உரிமை நிலைமை தொடர்பில் ஜெனீவாவில் சிறுபான்மையினர் பிரச்சினைக்கான ஐ.நா பேரவையில் திபெத் பணியகம் கலந்துகொண்டதோடு, திபெத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சீர் செய்ய சீனாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

திபெத்தில் போதிய தொழில் வாய்ப்புகள் இல்லாததோடு திபேத்தியர்கள் சமூக மற்றும் மக்கள்தொகை சவால்களுக்கு முகம் கொடுப்பதாக அந்தப் பேரவையில் ஐ.நா சட்ட அதிகாரி கால்டன் ட்சோமோ தெரிவித்தார். திபெத் மொழி பாடசாலைகள் மற்றும் ஏனைய திபெத் மொழி வகுப்புகள் பல அண்மையில் மூடப்பட்டது பற்றியும் ட்சோமோ சுட்டிக்காட்டினார். சீனாவால் சிச்சுவான் மாகாணம் என்று அழைக்கப்படும் கார்ட்சே அதிகார எல்லையில் உள்ளூர் அரசினால் நடத்தப்படும் டிரகன் மடாலயத்துடன் இணைக்கப்பட்ட பாடசாலை ஒன்று இரண்டு மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டதையும் அவர் குறிப்பிட்டு கூறினார்.

## சீனாவுக்கு ஆதரவு: தாய்வானுடன் உறவைத் துண்டித்தது நிகரகுவா



சுயாட்சி புரியும் ஜனநாயக தீவான தாய்வானுடனான இராஜதந்திர உறவுகளை நிகரகுவா துண்டித்துள்ளது. தாய்வானை தனது நாட்டின் ஓர் அங்கமாகக் கூறிவரும் சீனாவின் அழுத்தத்திற்கு மத்தியில் தாய்வானுடன் இராஜதந்திர உறவை தொடர்ந்து பேணும் நாடுகள் எண்ணிக்கை தற்போது 14 ஆக குறைந்துள்ளது.

சீனாவின் ‘ஒரே நாடு’ கொள்கையை மேற்கோள் காட்டி மத்திய அமெரிக்க நாடான நிகரகுவாவின் வெளியுறவு அமைச்சு கடந்த வியாழக்கிழமை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

‘உலகில் ஒற்றை சீனா மாத்திரமே உள்ளது என்பதை நிகரகுவா குடியரசின் அரசாங்கம் அங்கீகரிக்கிறது’ என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. ‘அனைத்து சீனாவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே அதிகாரபூர்வ அரசாக சீன மக்கள் குடியரசு இருப்பதோடு சீன ஆட்புலத்தின் ஒரு பிரிக்கமுடியாத அங்கமாக தாய்வான் உள்ளது. தாய்வானுடனான இராஜதந்திர உறவுகளை நிகரகுவா குடியரசின் அரசாங்கம் இன்று முறித்துக்கொள்வதோடு எந்த ஒரு தொடர்பு அல்லது உத்தியோகபூர்வ உறவுகளை நிறுத்துகிறது’ என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

நிகரகுவாவின் இந்த அறிவிப்பு வெளியான மூன்று மணி நேரத்தின் பின், நிகரகுவாவுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் கூட்டு அறிக்கை ஒன்றில் இரு தரப்பும் கைச்சாத்திட்டதாக சீனாவின் தேசிய தகவல் சபை அலுவலகம் அறிவித்தது.

ஐ.நாவுக்கான சீனாவின் நிரந்தர பிரதிநிதி சாங் ஜுன் இந்த முடிவை வரவேற்றுள்ளார்.

‘நிகரகுவா அரசினால் எடுக்கப்பட்ட இந்த சரியான முடிவை நாம் மிகவும் பாராட்டுகிறோம். இது காலத்தின் போக்கு மற்றும் மக்கள் அபிலாஷைகளுக்கு ஏற்ப உள்ளது’ என்று ட்விட்டரில் பதிவிட்டிருக்கும் அவர், பீஜிங்கின் ஒரே சீனா கொள்கை ஒருமித்து பரந்த அளவில் ஏற்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இதற்கு பதிலளித்திருக்கும் தாய்வான் வெளி விவகார அமைச்சு, தாய்வான் மக்களின் நட்புறவை புறக்கணிப்பதற்கு நிகரகுவா ஜனாதிபதி டானியேல் ஓர்டெகா எடுத்த முடிவை இட்டு வருந்துகிறோம் என்று குறிப்பிட்டுள்ளது.

நிகரகுவாவுடனான உறவை கைவிடுவதாக தாய்வானும் அறிவித்துள்ளது. எனினும் இது நிகரகுவாவின் தன்னிச்சையான முடிவாகவே பார்க்கப்படுகிறது.

சீனா குடியரசாக முன்னர் அறியப்பட்ட தாய்வான், சீன சிவில் யுத்தத்தின் முடிவில் தனி நிர்வாகமாக விலகிச் சென்றது. அது இரண்டாம் உலகப் போர் முடிவில் இருந்து 1970களின் ஆரம்பம் வரை சீனாவை பிரதிநிதித்துவப்படுத்தியது.

எனினும் 2000கள் தொடக்கம் கரீபியன், தென் அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகளைச் சேர்ந்த பெரும்பாலும் சிறிய நாடுகளான தாய்வானின் எஞ்சிய நட்பு நாடுகளை சீனா படிப்படியாக தன் பக்கம் இழுத்து வருகிறது.

2016 ஆம் ஆண்டு தாய்வான் ஜனாதிபதியாக ட்சாய் இங் வென் தேர்வானது தொடக்கம் சீனா தனது செயற்பாடுகளை தீவிரப்படுத்தி வருகிறது. இதற்கு முன் கடைசியாக 2019இல் கிரிபிட்டி மற்றும் சொலொமன் தீவுகள் தாய்வானுடனான இராஜதந்திர உறவுகளை துண்டித்தன.

ஜனாதிபதி ட்சாய் இங் வென் பதவிக்கு வந்தது தொடக்கம் தாய்வானுடன் இராஜதந்திர உறவைக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 21 இல் இருந்து தற்போது 14 ஆக குறைந்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 டிசம்பர் 11 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN


**தொழுகை நேரம்**
10 முதல் 11 வரை
சுபஹ் - 04.50
லுஹர் - 12.05
அஸர் - 03.26
மஃரிப் - 05.56
இஷா - 07.11

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் கார்த்திகை 25
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: மரணசித்த யோகம்
திதி: அஷ்டமி





## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பு

### முழுமையான விசாரணை செய்யுமாறு பேராயர் குழு CID யில் முறைப்பாடு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பு என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்த கருத்து தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு கொழும்பு பேராயர் குழுவொன்று நேற்று (10) குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி காரணம் என்பது தெரிய வந்தால், தராதரம் பாராமல் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

பேராயர் ஜூட் கிறிசாந்த, வெகுஜன தொடர்பாடல் பணிப்பாளர், கொழும்பு செத் சரண நிறுவனத்தின் பணிப்பாளர், லோரன்ஸ் இராமநாயக்க மற்றும் பல குருமார்கள், சட்டத்தரணிகள் இணைந்தே இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்துக்குத் தெரிந்தே குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அருட்தந்தை ஜூட் கிறிசாந்த தெரிவித்தார்.

## கொவிட் தடுப்பூசிகளை பதுக்கி வைக்காதீர்கள்

### செல்வந்த நாடுகளிடம் WHO கோரிக்கை

புதிய ஒமிக்ரோன் திரிபு பரவல் காரணமாக, செல்வந்த நாடுகள், கொவிட்19 தடுப்பூசிகளைப் பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரியுள்ளது.

ஒமிக்ரொன் திரிபு பரவல் காரணமாக, சில செல்வந்த நாடுகள், பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலைத் துரிதப்படுத்துகின்றன. பெருமளவிலான மக்களுக்கு இதுவரையில் தடுப்பூசி செலுத்தாதுள்ள நாடுகளுக்கான விநியோகத்தில் இது தாக்கம் செலுத்தமென உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய ஒமிக்ரோன் திரிபிலிருந்து பாதுகாப்பு பெற, மேலதிக கொவிட்19 தடுப்பூசி அவசியமா? என்பது இதுவரையில் தெளிவாகத் தெரியவில்லை. எனவே, செல்வந்த நாடுகள் தடுப்பூசிகளைப் பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரியுள்ளது.

## பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது

### இறக்குமதியாளர் சங்கம் எச்சரிக்கை



பால் மா இறக்குமதிக்கு தேவையான டொலரை நிதியமைச்சு பெற்றுத் தராவிடின் எதிர்வரும் நாட்களில் பால் மா தட்டுப்பாடு தீவிரமடையுமென பால் மா இறக்குமதியாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் டொலர் நெருக்கடி காரணமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவிக்க முடியாத நிலை

06

## பொருளாதாரத்தில் வளர்ச்சி காண இனப்பிரச்சினைக்கு தீர்வு அவசியம்

### பாராளுமன்றத்தில் சித்தார்த்தன் MP சுட்டிக்காட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைய முடியும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி. தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த இராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அரசின் நிதி விடயத்தில் மட்டுமல்லாது ஏனைய விடயங்களிலும் சிறப்பாக செயல்படும் அமைச்சர்தான் பஷில் ராஜபக்ச. யுத்த காலத்தில் வடக்கு,கிழக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாக சென்று அந்தப் பகுதிகளுக்குத்தேவையான அபிவிருத்திகள் தொடர்பில் அங்கு பேச்சுவார்த்தை நடத்தி செயற்பட்ட சிறந்த அமைச்சர் அவர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் கடந்த 40 வருடங்களாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களாகும். அந்த மாகாணங்களில் சுமார் ஒரு இலட்சம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளன. நிரந்தர வருமானமற்ற நிலையில் இந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மிக கஷ்டத்தில் வாழ்கின்றனர். அவர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். குடிசைக் கைத்தொழில், ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்ற செயற்பாடுகளுக்கு அவர்களுக்கு உதவ முடியும்.

06

## உயர்நிலை கல்வி முறைமையில் சீர்த்திருத்தங்கள் பல அவசியம்

### அந்நியச் செலாவணியை பெற்றுத்தரும் வழிமுறையாக கல்வித்துறையை மாற்றவேண்டும்



எமது நாட்டின் கல்வி முறைமை, தற்போதைய உலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் காணப்படவில்லையென்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விசேடமாக மூன்றாம் நிலைக்கல்வி முறைமையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் காணப்படுகின்றதென சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (09) நடைபெற்ற சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 2021ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, பல்கலைக்கழக மாணவர்கள் எந்தப் பட்டப் படிப்பைத் தொடர்ந்தாலும், அவர்கள் அனைவரும் குறைந்தது தகவல் தொழில்நுட்பத்திலேனும் ஓரளவு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதோடு, தற்கால உலகை வெற்றி கொள்வதற்கு அவசியமான ஏனைய திறன்களையும் பெற்றிருக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

நமது பல்கலைக் கழகங்களால், ஏற்கெனவே பல்வேறு புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நாடுமுழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர் தொகையைப் பத்தாயிரத்தால் அதிகரித்தமை தற்போதைய அரசாங்கம் அடைந்த பாரிய வெற்றியாகுமென்றும், அவ்வாறு அதிகரித்தாலும் கூட, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும், பல்கலைக்கழகக் கல்வியைப் பெறமுடியாத ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்னமும் இருக்கின்றனரெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதற்குக் காரணம்,தகுதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் இடமளிப்பதற்கு அரச பல்கலைக்கழக கட்டமைப்பில் போதுமான கொள்ளளவின்மையாகும். இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு எமது இளைஞர்களுக்கு அதிகவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இந்தப் பல்கலைக்கழகம் அரச

06

## புத்தளத்தில் தெய்வீக கிராம நிகழ்வு

இந்து சமய கலாசார திணைக்களத்தினால் தெய்வீக கிராம நிகழ்வு புத்தள மாவட்டம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 9.00 மணியளவில் புத்தளம் மாவட்ட அறநெறி பாடசாலை மாணவர்களினால் கலை,கலாசார நிகழ்வுகள் இடம்பெறும். ஆசியுரையை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வெங்கட சுந்தர ராம குருக்கள் நிகழ்த்துவார். பிரதம அதிதியாக புத்தசாசன மத விவகார அமைச்சரான, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா மற்றும் இந்து கலாசார திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பவானி முகுந்தனும் கலந்து சிறப்பிப்பார்கள்.


கைத்தொழில் அமைச்சு

அனைத்து நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்,
அனைத்து தொழிலதிபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு
உள்ளூர் மற்றும் சர்வதேச வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குதல்

தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை

"Made In Sri Lanka - e - Trade Portal"
இலங்கையின் முதலாவது ஒரே அரச துறை இலத்திரனியல் வர்த்தக இணையதளம்

தேசிய பொருளாதாரத்தின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும் முகமாக
தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையால் தொடங்கப்பட்டது
கைத்தொழில் அமைச்சின் கீழ் செயல்படுகிறது...

கௌரவ. கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின்
கருதுகோளின்படி அவரால் 11 டிசம்பர் 2021 அன்று மக்களிடம் ஒப்படைக்கப்படும்

நாட்டிலுள்ள அனைத்து தொழில்முயற்சியாளர்களும் www.madeinsrilanka.org என்ற இலத்திரனியல் வர்த்தக இணையதளத்தின் ஊடாக தம்மைப் பதிவுசெய்து உள்நாட்டிலும் உலகளவிலும் தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு, வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. அந்த இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தரத்திற்கமைய இலங்கைப் பிரஜைகளும் சர்வதேச சமூகத்தினரும் தங்களின் தயாரிப்புகளின் விபரங்களையும் புகைப்படங்களையும் தரவேற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உள்ளூர் தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்துவதற்காக எமது வர்த்தக போர்டல் மூலம் உயர்தர இலங்கை தயாரிப்புகளை இணையத்தில் கொள்வனவு செய்ய சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால்,
0115 922 980 / 0717 002 581 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரிகளில் ஒருவரைத் தொடர்பு கொள்ளவும்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 25ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 06

## குறள் தரும் சிந்தனை



மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து

நல்ல உறுதியான உள்ளம் படைத்த உயர்ந்தோராக இருந்தாலும் அவர் சார்ந்த இனத்தின் உறுதியும் அவருக்கு வலிமையான துணையாக அமையக் கூடியதாகும்.

# கொவிட் தொற்று பாதிப்பு தாக்கத்தில் அரசியல் ஆதாயம் பெறுவதற்கு முயற்சி!

நாட்டில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பானது எமது நாட்டில் மாத்திரம்தான் என்று கூற முடியாது. இன்றைய சூழ்நிலையில் உலக நாடுகள் அனைத்திலுமே இந்த அதிகரிப்பைக் காண முடிகின்றது. எமது அயல்நாடான இந்தியாவிலும் கூட இவ்வாறான நிலைமைதான் காணப்படுகின்றது.

உலக நாடுகள் அனைத்திலும் கொவிட் தொற்று பரவலில் அடுத்தடுத்து உருவான அலைகள்தான் இதற்கான பிரதான காரணம் ஆகும். உலகப் பெருந்தொற்றான கொரோனா உலகின் பொருளாதார அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்து விட்டது எனலாம். விவசாயத்துறையிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி விட்டது கொரோனா என்பதே உண்மை.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த ஒன்றரை வருட காலத்துக்கு மேலாக விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. அடுத்தடுத்து உருவான கொவிட் அலைகளால் நாட்டில் நிலவிய அச்சம் நிறைந்த சூழல், முடக்க நிலைமை, போக்குவரத்துக் கட்டுப்பாடு, பொருட்களின் போக்குவரத்தில் உள்ள தடை, உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் நிலவிய இடர்பாடுகள் போன்ற பலவிதமான காரணங்களால் விவசாயத்தை மேற்கொள்வதில் பாதிப்புகள் ஏற்பட்டன.

நெற்செய்கை மாத்திரம் பாதிக்கப்படவில்லை. உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதேசமயம், கொவிட் தொற்றின் மூன்றாம் அலையானது ஓரளவு வீழ்ச்சி நிலைமைக்கு வந்த பின்னர் விவசாய உற்பத்தி ஓரளவு முன்னேற்றமடைந்து கொண்டு வந்த வேளையில் அடைமழை தொடங்கியது.

நாடெங்கும் பல வாரங்களாக பெய்த அடைமழையினால் காய்கறி உற்பத்தியானது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. காய்கறிப் பயிர்கள் பெருமளவில் வெள்ளத்தினால் அழிந்து போயுள்ளன. மலையத்திலும் இந்தப் பாதிப்பு அதிகளவில் ஏற்பட்டது. காய்கறித் தோட்டங்கள் பலவற்றை செய்கையாளர்கள் கைவிட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. மரக்கறி வகைகள் தற்போது சந்தையில் விலை அதிகரித்திருப்பதற்கு தொடர்ச்சியான மழையும் ஒரு காரணம் எனலாம்.

எமது நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தனை உணவுப் பொருட்களும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதில்லை. அதிகளவான உணவுப் பொருட்களை நாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். அவ்வாறான பொருட்களின் விலைகளும் தற்போது அதிகரித்துள்ளன. கொவிட் தொற்று தாக்கத்தின் விளைவுதான் அதுவாகும். நமது நாட்டில் மாத்திரமன்றி அனைத்து நாடுகளிலும் உணவுப் பொருட்களின் உற்பத்தி இப்போது வீழ்ச்சியடைந்து விட்டது.

எனவேதான் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களின் விலைகளும் தற்போது அதிகரித்து விட்டன. கொவிட் தாக்கமானது உலகை விட்டு எப்போது முற்றாக நீங்கப் போகின்றதோ அப்போதுதான் உணவுப் பொருட்களின் உற்பத்தியும் வழமை நிலைமைக்குத் திரும்புமென்பதுதான் உண்மை.

உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றபோது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் ஏற்படுகின்றது. இதன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனரென்பதை மறுப்பதற்கில்லை. இந்த நெருக்கடியான நிலைமையில் இருந்து மக்கள் மீள்வதாயின் உள்நாட்டு உணவு உற்பத்தியானது அதிகரிக்கப்பட வேண்டும். கொவிட் தொற்று பரவலும் அதற்கு இடம் கொடுக்க வேண்டும். அடுத்தடுத்து கொரோனா அலைகள் உருவெடுக்குமானால் உணவு உற்பத்தி மேலும் பாதிக்கப்படவே செய்யும். எனவே உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் போய் விடும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு அரசாங்கத்தின் மீது எதிரணி தரப்பினர் குற்றம் கூறுவதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. உலக விவகாரங்களை நன்கு புரிந்து கொண்டபடி எதிரணியினர் கருத்துகளை வெளியிடுவதே அரசியல் தர்மம் ஆகும். அதை விடுத்து கொரோனா ஏற்படுத்தியுள்ள இன்றைய தாக்கங்களை முற்றாக மறந்த நிலையில், பாதிப்புகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தியபடி எதிரணியினர் வீணான குற்றச்சாட்டுகளை அரச தரப்பினருக்கு எதிராகச் சுமத்துவது அரசியல் நாகரிகம் ஆகாது. கொவிட் உலகப் பெருந்தொற்று சர்வதேச ரீதியில் ஏற்படுத்தியுள்ள மோசமான தாக்கங்களை மறந்த நிலையில் அவர்கள் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துவது அழகல்ல.

இரசாயன பசளை விவகாரத்தை எதிரணியினர் தமக்கான அரசியல் ஆதாயமாகவே பயன்படுத்தினர். நச்சு இரசாயனங்கள் கொண்ட பசளைகளால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டு வந்த பாதிப்புகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்திலேயே எதிரணியினர் செயற்பட்டனர். விவசாயிகளை தூண்டிவிட்டு அவர்கள் வேடிக்கை பார்த்தனர்.

அதே போன்றுதான் இன்று உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பை துரும்பாக வைத்து அரசியல் நடத்துவதற்கு எதிரணியினர் முற்படுகின்றனர். இன்றைய உலக நெருக்கடியை மக்களுக்கு மறைத்தபடி எதிரணியினர் கூச்சல் போடுவதைக் காண முடிகின்றது. அவர்களது அரசியல் ஆதாய நோக்கத்தை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# சிவனுக்கு திருத்தொண்டு புரிவதை வரமாக கேட்கும் திருவெம்பாவை

மாதங்களிலெல்லாம் சிறந்த மார்கழியை இறைவழிபாட்டிற்கே உரிய மாதமென்றே சொல்லலாம். மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்துக்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி இந்துக்களால் கடைப்பிடிக்கப்படுவது திருவெம்பாவை ஆகும்.

பனி நிறைந்த மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பொழுது புலர்வதன் முன் எழுந்து, ஒருவரையொருவர் துயிலெழுப்பி கூட்டமாகச் சென்று பொய்கையில் நீராடி இறைவன் புகழ் பாடி வழிபடுவதை திருவெம்பாவை பாடல்களில் குறிப்பிடப்படுகின்றது. திருவெம்பாவை என்பது மாணிக்கவாசகர் திருவண்ணாமலையை தரிசிக்கும் போது பாடப் பெற்றது. சிவனுக்குத் திருத்தொண்டு புரிவதையே வரமாகக் கேட்கிறது திருவெம்பாவை.

திருவெம்பாவைக்குச் சிறப்பாக விளங்குவது 'எம்பாவாய்' என்னும் தொடர்மொழி. என்ன குறையும் இல்லாதவர்கள். எனினும் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியைச் சுமக்கின்ற பரந்த மனமுடைய அவர்கள், இந்தப் பேரின்பப் பெருவழிக்கு வராது விடுபட்டுப் போன அக்கம்பக்கத்திலுள்ள தம் எல்லாத் தோழிகளின் துயில் மயக்கத்தைத் தெளிவித்து, அவருடைய உறுதியின்மையால் தாம் தளர்வுறாது, இறைவன் பால் ஒருமைப்பட்ட தம் மனத்தால் அவரையும் கண்ணுக்கினிய கருணைக் கடலான சிவபெருமானைப் பாடத் தேற்றுகின்றனர். இதுவே இன்றைய தேவை. நாம் உய்யும் நெறியை உறுதியாகப் பற்ற வேண்டும். அதே நேரத்தில் அவ்வாறு பற்றுவதால் நாம் பெறும் இன்பத்தை அண்டை அயலவர்களுக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

மார்கழியில் நோற்றதால் மார்கழி நோன்பு என்றும், கன்னிப்பெண்களால் நோற்கப்படுவதால் பாவை நோன்பு என்றும்







## கன்னிப் பெண்களுக்கேயுரிய மார்கழி மாதத்து பாவை நோன்பு இன்று ஆரம்பம்

கூறப்படுகின்றது. திருப்பாவை, திருவெம்பாவை பாடி இறைவனை வணங்குகின்றனர். மார்கழி மாதத்தில், முக்கியமாக பெண்கள் ஏற்கும் விரதம், மார்கழி நோன்பு ஆகும். ஆயர்ப்பாடியிலுள்ள கன்னியர்கள் நாட்டு முன்னேற்றத்திற்காகவும், வளம் பெருகவும், நல்ல கணவர்களை அடையவும் நோன்பு நோற்றனர்.

கன்னியர்கள் விடியற்காலை எழுந்து, மற்றப் பெண்களையும் எழுப்பி, ஆற்றங்கரை சென்று, அங்குள்ள மணலினால் பாவை போன்ற உருவம் செய்து, மலர்கள் சூட்டி, பார்வதிதேவியை பாடித் துதித்து வழிபட்டனர்.

அதன் இருபது பாடல்களிலும் பாட்டின் இறுதியில் வருவதால் அதுவே இதற்குப் பெயராய் அமைந்தது. சிவசக்தியின் அருட்செயலையும், நவசக்திகள் ஒன்றுசேர்ந்து சிவபெருமானைத் துதிப்பதும் திருவெம்பாவையின் தத்துவமாகும்.

திருவெம்பாவை மூலம் மணிவாசகப் பெருமான் நமக்குக் கூறும் உறுதியான அறவுரை மற்றொன்றும் உண்டு. இப்பாடல்களில் வரும் பெண்கள் என்ன செய்கிறார்கள் ? ஒன்று கூடுகிறார்கள். அவர்கள் உய்யும் வகை உய்ந்த அடியார்கள். அவர் தம் மனத்து இல்லம் தோறும் இறைவன் எழுந்தருளி இருப்பதால்

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒரே பெண் மணியானவரான ஆண்டாள் இயற்றிய பாவைப்பாட்டாகிய (இறைவன் மீது பாடப்பட்ட பாடல்கள்) திருப்பாவையும், மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது இயற்றிய திருவெம்பாவையும் பாவைப் பாட்டுக்களில் சிறந்தவை.

திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டது. திருவெம்பாவை இருபது பாடல்களைக்கொண்டது. இந்த இருபது பாடல்களுடன் திருப்பள்ளியெழுச்சி யிலுள்ள பத்து பாடல்களுடன் சேர்த்து அதுவும் முப்பது பாடல்களாக மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் பாடப்படுகின்றது.

திருவெம்பாவை விரதத்தை, சைவ சமயத்தவர்கள் மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாளுக்கு ஒன்பது நாட்கள் முதல் விரதத்தை ஆரம்பித்து பத்தாவதுநாள் திருவாதிரை அன்று நிறைவு செய்வார்கள்.

கண்ணன் கீதையில் மாதங்களில் நான் மார்கழி என்று கூறியுள்ளார். ஆண்டாளும் தனது திருப்பாவையில் மார்கழி மாதத்து மதி நிறைந்த நன்னாள் என வர்ணிக்கின்றாள். இதனை சிறப்புடைய மார்கழி மாதத்து ஆதிரை நாள் என்று அழைக்கப்படும்.

மார்கழி மாத திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்டு பத்துத் திங்கள் திருவெம்பாவை நோன்பு நோற்கப்படுகின்றது. சில சிவாலயங்களில் பகல் திருவிழாவும், ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் அன்று பின்னிரவு அதிகாலை வேளையில் நடராஜப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பத்தாம் நாள் சூரிய உதயத்தில் தரிசனம் நடைபெறும்.

**ஆர் நடராஜன்...**
*(பனங்காடு தினகரன் நிருபர்)*

# அரு ஸ்ரீகலையகம் இந்திய தூதரகத்துடன் இணைந்து வழங்கும் 'அபூர்வம்' நாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை

அரு ஸ்ரீகலையகம் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து வழங்கும் 'அபூர்வம்' என்ற நாட்டிய நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை மாலை 6:30 மணிக்கு கொழும்பு பிஷப் கல்லூரி கலையரங்கில் நடைபெற உள்ளது. அமைச்சர் சமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகவும் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்ளே சிறப்பு விருந்தினராகவும் இந்நிகழ்சியில் கலந்து கொள்கின்றனர். கொவிட் தொற்றை முன்னிட்டு சுகாதார வழிமுறைகளுக்கமைய இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அழைப்பாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் இந்நிகழ்வை ஆர்வலர்கள் இணைய வழியில் பார்வையிடலாம்.

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ பிரதம அதிதி







டொக்டர் அருந்ததி ஸ்ரீரங்கநாதன், மூத்த ஒளிபரப்பாளர் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளர் ஆவார். அண்மையில் அதிஉயர் விருதான 'பிரதிபா பிரணாம' என்ற வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் பல விருதுகளை இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் பெற்றவர்.

அவர் வங்கியியல் துறையில் நிபுணத்துவம் பெற்ற பொருளாதார பட்டதாரி என்பதோடு புகழ்பெற்ற இசைக் கலைஞர், இசையமைப்பாளர், நடன இயக்குனர், மற்றும் ஊடக ஆலோசகர் என பல ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டவர். அரு ஸ்ரீகலை அரங்கின் நிறுவனர், இயக்குனர், மற்றும் கட்புல, ஆற்றுகைக் கலைகளுக்கான பல்கலைக்கழகத்தின் இசை விரிவுரையாளர்.

பல்கலாசார இசை நிகழ்ச்சிகளில் ஆற்றல்மிக்க புத்தாக்க முயற்சிகளுக்காக அவர் நன்கு அறிமுகமானவர். பல கலைவிழாக்களில் டொக்டர் அருந்ததி கலை இயக்குநராகப் பணியாற்றியுள்ளார். பல முக்கிய சபைகளின் உறுப்பினராக உள்ளதோடு நோர்வே மற்றும் இலங்கைக்கிடையேயான இசைக் கூட்டுறவின் மூத்த ஆலோசகராக இருந்தவர். இலங்கையில் பல்வேறு சமூகங்களிலிருந்து சிறந்த கலைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒன்றிணைத்து பொதுவான தளத்துக்கு கொண்டு வருவதற்காகச் செயற்பட்ட முன்னோடி.

ஆற்றுகைக் கலைகள் எனும் புத்துணர்ச்சியூட்டும் ஊடகத்தின் மூலம் நாட்டின் தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கு நிலையான பங்களிப்பினை வழங்கியவர். சிங்கள மாணவர்களுக்கு தென்னிந்திய இசையை (கர்நாடக இசை) கற்பிக்குமாறு கவின்கலைகள் கற்கை நிறுவனம் திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதனுக்கு அழைப்பு விடுத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர் இனம், மதம் மற்றும் தேசியம் என வேறுபட்டு நிற்கும் மனிதர்களுக்கிடையில் கலை, இசை மற்றும் கலாசாரம் மூலமே இணைப்பை உருவாக்க முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்.

கலை மற்றும் கலாசாரம் என்பனவே மக்களிடையே அடையாளம், அங்கீகாரம், பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலை உருவாக்குவதற்கான சிறந்த வழிகளாகும் என்ற சிந்தனை கொண்டவர். கலாசார ரீதியாக வேறுபட்ட சமூகங்களைப் புரிந்து கொள்ளல் மற்றும் பரஸ்பர மரியாதை என்பனவற்றின் மூலம் கலாசார ஒருங்கிணைப்பை ஊக்குவித்து பாகுபாடு மற்றும் இன மோதல்களைத் தவிர்க்கலாம் என்ற எண்ணம் கொண்டவர்.

இறுதி இலக்கினை கொண்ட உரையாடல் மற்றும் கலாசார பாலங்களை இணைந்து உருவாக்குவது நாம் அனைவரும் ஒன்று என்ற உணர்வை ஏற்படுத்தும் பரஸ்பர மரியாதை மற்றும் கலாசார ரீதியாக வேறுபட்ட சமூகத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் கலாசார ஒருங்கிணைப்பை ஊக்குவித்து பாகுபாடு மற்றும் இன மோதல்களைத் தவிர்க்கலாம். இன்று இனக்குழுக்களுக்கிடையில் அழகான உறவொன்று மலர்வதில் பாரம்பரிய இசை பங்குவகிக்கின்றது.

கர்நாடக இசையை கற்றுத் தருமாறு கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் அவருக்கு அழைப்பு விடுத்ததோடு தென்னிந்திய இசைக்கான ஒரு பீடத்தினை உருவாக்குமாறும் வழியுறுத்தியவர். இது நமது பாரம்பரிய இசையினை பகிரவும் ஏனைய கலைகளுடன் இணைக்கவும் மற்றும் அதன் மறுமலர்ச்சிக்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இலங்கையின் பல இன மற்றும் பல் கலாசார அடையாளத்தைப் பேண பல்கலைக்கழகத்தால் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இதுவாகும்.

**எச்.எச்.விக்கிரமசிங்க...**

# ஹெலி விபத்தில் பலியான இந்திய முப்படை தளபதி உள்ளிட்டோரின் இறுதிக் கிரியை நேற்று



ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த இந்திய முப்படை தலைமைத் தளபதி உள்ளிட்ட 13 பேரின் உடல்களுக்கு தமிழக மக்கள் செலுத்திய இறுதி மரியாதையை வட இந்தியர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். இந்திய முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் கடந்த 8 ஆம் திகதி தமிழகத்தின் கோவை மாவட்டம் சூலூரில் இருந்து நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள இராணுவ பயிற்சி மையத்திற்கு ஹெலிகொப்டரில் பயணம் செய்தார். பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 12 இராணுவ வீரர்களுடன் பயணித்த ஹெலிகொப்டர் குன்னூர் அருகே காட்டுப்பகுதியில் கீழே விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது.

(11ஆம் பக்கம் பார்க்க)




தமிழக மக்கள் கண்ணீர் மல்க அளித்த இறுதி அஞ்சலியை அறிந்ததும் வடஇந்திய மக்கள் உருக்கம்

# இன ஒற்றுமையை தனது வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவன் பாரதி

**ஒவ்வாரு டிசம்பரிலும் இலக்கிய நெஞ்சங்களுக்கும் ஆய்வலர்களுக்கும் மகாகவி பாரதியின் நினைவுகள் தவிர்க்க முடியாமல் வந்து போகும். டிசம்பர் மாதம் 11 ஆம் திகதிதான் முட்டாசுக் கவிஞனின் பிறந்த தினமாகும்.**

சுப்பிரமணியன் என்ற மகாகவி 139 ஆண்டுகளுக்கு முன்பு 1882ஆம் ஆண்டில் இதே டிசம்பர் 11 இல் தமிழகத்தின் எட்டயபுரத்தில் பிறந்தான். தமிழகத்தில் இன்சுவை தரும் தாமிரபரணி ஆறு பெருக்கெடுத்தோடும் திருநெல்வேலிச் சீமையிலே, கடையத்திலே, பொட்டல் புதூர் தெற்கு புதுமணத் தெருவிலே 19200622ஆம் நாளில் ஞாயிறு மாலை ஒரு முஸ்லிம் சபையானது முண்டாசு கட்டிய ஒரு பிராமண சுப்பிரமணியனின் 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை' பற்றிய பேச்சைக் கேட்கக் கூடியிருக்கிறது.

அந்த முண்டாசுக்கவி இந்து சமயத்தில் அழுத்தமான பிடிப்பும், ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர். இந்து சமய தெய்வங்களாகிய சிவனையும், சக்தியையும், கண்ணனையும், காளியையும், விநாயகரையம், முருகனையும், கலைமகளையும், திருமகளையும் பாமாலை சூட்டிப் போற்றி வணங்கியர். ஆயினும் அல்லாஹ்வைப் போற்றியதுடன் இயேசு கிறிஸ்து நாதரையும் புகழத் தவறவில்லை.



சமயப் பொதுமை, சமரச நோக்குக்குச் சான்றாக சுதேச மித்திரன் நாளேட்டில் பல கட்டுரைகளில் இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி பாரதியின் பேனை உழுதிருக்கிறது.

115 ஆண்டுகளுக்கு முன் 1906 ஜூன் 23 இல் சுதேச மித்திரன் ஏட்டில் 'நமது முஹம்மதிய சகோதரர்கள்' எனத் தலைப்பிட்டு எழுதிய கட்டுரையில் இப்பந்தி இடம்பெற்றுள்ளது.

"இந்தியாவின் வருங்காலப் பெருமைக்கும் சிறப்புக்கும், இத்தேச ஜனங்களில் பெரும்பாலானோர் ஹிந்துக்கள், முஹம்மதியர் என இரு பகுதிப்பட்டு நிற்பது பெரும் தடையாகவே இருக்கிறதென்பதை ஒளித்துப் பிரயோஜனமில்லை. விரோதங்களை நீக்கி இரண்டு ஜாதியருக்குள்ளே சிநேக உணர்ச்சியும், சகோதரப்பான்மையும் ஏற்படுத்துவது இத்தேசாமிமானிகளின் முக்கிய கடமையாகும்."

இதே போல் ஒகஸ்ட் 11. 1906 அன்று 'சுதேச மித்திரன்' கட்டுரையில் இன்னொரு கருத்தையும் முன்வைத்துள்ளார்.

'பொதுமாதாவாகிய பாரத தேவியின் பொதுநன்மையைக் கவனிக்க வேண்டுமே அல்லாமல் ஜாதி, மத, குல பேதங்களைப் பாராட்டித் தேசத்தை மறக்கும் மனிதனை பாரத தேவி சர்வ சண்டாளர்களாகவே கருதுவாள்'.



மேலும், பல தலைப்புகளில் ஹிந்து முஸ்லிம் கட்டுரைகளை பாரதி எழுதியுள்ளார். அன்னாரது 139 ஆம் ஆண்டு பிறந்த நாளுக்கு சமர்ப்பணமாக அமையப் பெறும் இந்த எழுத்துக்களை ஒரு சிறுகதை தகவலுடன் நிறைவு செய்வது அவசியம்.

இது ஒரு சிறுகதைத் தகவல்! அதுவும் முஸ்லிம் சமூகத்தின் இஸ்லாமியச் சிறுகதையின் பூர்விகம் பற்றியது.

பாரதியைப் பொறுத்தவரையில் மகா கவிஞர் மட்டுமல்லர். மகத்தான படைப்பிலக்கியவாதி என்றும் கணிக்கப்படுகிறார். முஸ்லிம் கலாசாரப் பின்னணியில் முதல் சிறுகதையைப் படைத்த பெருமையும் நமது முண்டாசுக் கவிஞருக்கே உரியதாகும்.

19200529 இல் (நான் பிறந்த மாதம் திகதியில்) அதே நாளேட்டில் 'ரயில்வே ஸ்தானம்' என்ற ஒரு தலைப்பில் ஒரு சிறுகதையைப் பிரசவித்து வரலாற்றில் ஓர் ஏடாக்கி விட்டார்.

அச்சிறுகதையானது, முஸ்லிம் ஒருவரின் தனிப்பட்ட குடும்பச் சிக்கல்கள் பற்றியதாகும்.

"முஸ்லிம் மக்களின் வாழ்க்கைச் சிக்கலை மையப்படுத்தி தமிழில் எழுதப்பட்ட முதல் சிறுகதையாக இதனைக் கருதலாம்" என்கிறார் சென்னை புதுக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர், ஹ.மு. நத்தர்ஷா அவர்கள்.

இன்னொரு முக்கிய தகவலையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

"திருநெல்வேலி ஜில்லா கடையத்தில் இருக்கும் போது அடுத்த சிற்றூரான பொட்டல் புதூரிலிருந்து முஸ்லிம் நண்பர்கள் வந்து பாரதியுடன் பேசி விட்டுச் செல்வார்கள். 'அல்குர்ஆனைத்' தமிழில் மொழிபெயர்க்கும்படி ஒரு நண்பர் பாரதியிடம் கேட்டுக் கொண்டார். "அல்குர்ஆனின் சந்தத்துக்கு இணங்க 'விஷ்ணு பிதரம் சரணம்' என்று தொடங்கும் ஒரு சமஸ்கிருதப் பாடலை பாரதி எழுதினார்" என்று பாரதியாரின் வாரிசுகளில் ஒருவரான தங்கம்மாள்

## இஸ்லாமிய அன்பர்களுடன் இனிய உறவு பேணி வந்த முண்டாசுக் கவிஞனின் 139 ஆவது பிறந்த தினம் இன்று



பாரதி ஒரு கட்டுரையில் எழுதி இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. மொழிபெயர்க்கும் அளவிற்கு பாரதியார் அல்குர்ஆனை அறிந்திருந்தார் என்ற செய்தி தமிழுலகுக்கு அளவற்ற வியப்பைத் தருகின்றது.

ஆக மொத்தத்தில் 'மனிதராகப் பிறந்த எல்லோரும் ஓர் குலம், ஓரினம்' என்பதையே அந்த முண்டாசுக் கவிஞரின் சிந்தனைகளும் அவர்தம் கட்டுரைகளும் காட்டி நிற்கின்றன என்பதைப் புரிய முடிகின்றது.

பாரதி மறைந்து விட்டான். ஆனால் அவன் சிந்தனைகளும், அவன் ஆக்கிய கவிதைகளும் தமிழுலகில் என்றும் வாழ்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மணி **மானா மக்கீன்...**

# வாழைச்சேனை பிரதேச சைவத்தமிழறிஞர் 'சிவநெறிப் புரவலர்' பெ.புண்ணியமூர்த்தி

**இலங்கைத் திருநாடு எத்தனையோ அறிஞர்களையும் சாதனையாளர்களையும் கண்டுள்ளது. அவ்வரிசையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் சைவத்துக்கும், தமிழுக்கும் ஒப்பற்ற பணி செய்த மாந்தர்கள் வரிசையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் பணிகளையும், வாழ்க்கை முறைகளையும் சிரமேற் கொண்டு நம் மத்தியில் தற்பொழுது 85 வயது தாண்டி வாழ்ந்து வரும் ஒருவர் தான் 'சிவநெறிப்புரவலர்' பெ.புண்ணியமூர்த்தி அவர்கள்.**

வாழைச்சேனையில் பெருமாள்–தங்கம்மா தம்பதியரின் மகனாக 19360821 இல் இவர் பிறந்தார். ஆரம்பக்கல்வியை பேத்தாழை பரியோவான் சென்ஜோன்ஸ் கனிஷ்ட வித்தியாலயத்திலும், வாழைச்சேனை கனிஷ்ட வித்தியாலயத்திலும், அதனைத் தொடர்ந்து சிரேஷ்ட பாடசாலையிலும் (தற்போதைய வாழைச்சேனை இந்து தேசியக் கல்லூரி) கற்றார். எஸ்.எஸ்.ஸி கற்றுச் சித்தியடைந்த பின்னர் 1956ஆம் ஆண்டு கரடியனாறு விவசாயப் பயிற்சி நிலையத்தில் விவசாயக் கற்கைநெறியினை மேற்கொண்டார்.

19581959 களில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி மேற்கொண்டார். இங்கு பண்டிதர் ச.பூபாலப்பிள்ளை போன்றோரிடம் கற்றார். அதன் பின்னர், நுவரெலியா லிந்துல மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார்.

1980 வரை ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், 1982 ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். மட்டக்களப்பு மாவட்டம், கல்குடா வலயத்திற்குட்பட்ட பால்சேனை, வட்டவான், கல்குடா, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் அதிபராகக் கடமை புரிந்துள்ளார். கல்குடா பாடசாலைக்கு நாமகள் வித்தியாலயம் எனவும், வட்டவான் பாடசாலைக்கு கலைமகள் வித்தியாலயம் எனவும் பெயர் மாற்றம் செய்வித்துள்ளார்.


"சிவநெறிப் புரவலர்" விருதுடன்

தான் அதிபராகப் பணிபுரிந்த பாடசாலைகளுக்கு பாடசாலைக் கீதங்களை இயற்றியுள்ளதோடு, பாடசாலையும் ஊரும் பெருமையுறும் வண்ணம் பணி புரிந்தார்.

தன்னுடைய பணிக்காலத்தில் தான் பணிபுரிந்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை தமிழ்மொழி கற்றலில் மிகுந்த கண்டிப்புடன் ஊக்கப்படுத்தியதோடு, அண்டியுள்ள ஆலயங்களில் வாரந்தோறும் கூட்டுப் பிரார்த்தனைகளை நடைமுறைக்கு கொண்டு வந்து பன்னிரு திருமுறைகளை இசையுடன் பாடுகின்ற மாணவர் பரம்பரையை தொடர்ச்சியாக உருவாக்கி வந்தார்.

பணியில் இருக்கின்ற காலத்திலும், ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ச்சியாக சமூக, ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். கோறளைப்பற்று ப.நோ.கூ.ச.வின் உதவி முகாமையாளராகவும், சனசமூக நிலையத்தின் செயலாளராகவும், வாழைச்சேனை தமிழ் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளராகவும், வாழைச்சேனை இந்துமாமன்றத்தின் தலைவராகவும். கோறளைப்பற்று இந்துமகாசபையின் தலைவராகவும், அரசசேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் கோறளைப்பற்று பிரதேசப் பிரிவின் பொருளாளராகவும், வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் ஆலயத்தில் தலைவர், செயலாளர், ஆலோசகராகவும், புதுக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் தலைவர், செயலாளர், ஆலோசகராகவும், கொழும்பு விவேகானந்த சபையின் ஆயுட்கால உறுப்பினராகவும், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் விளங்கி பல்வேறு சமூக, சமய, கல்விப் பணிகளைத் தொடர்ந்து வருகின்றார்.

இவரது பணிகளைப் பாராட்டி, 2005 இல் கொழும்பில் நடைபெற்ற 'உலக சேக்கிழார்' மாநாட்டில் 'சிவநெறிப் புரவலர்' எனும் விருதும், பட்டமும் வழங்கப்பட்டதோடு, 2014 இல் மட்டக்களப்பில் நடைபெற்ற சர்வதேச பிரஜைகள் வைரவிழாவில் 'பிரதேசத்தின் சிறந்த சிரேஷ்டபிரஜை' என கௌரவிக்கப்பட்டதோடு, 2015 இல் பேத்தாழை பொதுநூலகத்தால் நடத்தப்பட்ட உலக புத்தக தினவிழாவில் 'புத்தகங்கள் உருவாக்கிய மனிதர்கள்' எனும் விருதும், 2018 இல் 'தேசகீர்த்தி' விருதும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பிரதேசத்தின் சிறந்த சோதிடராகவும், சமாதான நீதவானாகவும், ஆன்மீகச் சொற்பொழிவாளராகவும், திருமுறைப் பண்ணிசைக் காவலராகவும் விளங்கும் இவர், பிரதேசத்து ஆலயங்களில் பாடுவதற்கேற்ற வகையில் தான் பாடிய பஜனைப்பாடல்களை 'வாழைச்சேனைப் பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள்' எனும் பெயரில் இரு தொகுப்புக்களாக பகுதி ஒன்று 2012 இலும், பகுதி இரண்டு 2016 இலும் வெளியிட்டுள்ளதோடு, நவக்கிரக அர்ச்சனைத் தொகுப்பு, சோதிடசாஸ்திரம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். கோறளைப்பற்றின் சிறந்த சைவத்தமிழறிஞரான இவரை தினகரன் வாயிலாக வாழ்த்தி வணங்குகிறோம்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் பணிகளையும், வாழ்க்கை முறைகளையும் சிரமேற்கொண்டு பணி புரிந்து வரும் தமிழ்ப் பெரியார்

**எஸ்.ஏ.ஸ்ரீதர்...**
*(வாழைச்சேனை)*

# கல்விச் சமூகத்தினால் என்றுமே போற்றப்படும் அதிபர் நயீம்

**அக்கரைப்பற்று அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஏ.நயீம் 36 வருட அதிபர், ஆசிரியர் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார். அக்கரைப்பற்று 05ம் பிரிவில் ஆதம்பாவா மீராசாஹிபு இப்றாஹீம்கண்டு சின்னம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்த நயீம் ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று முனவ்வறா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் (தேசிய பாடசாலை) பெற்றுக் கொண்டார்.**

ஆங்கில மொழியிலும், கல்விசார் கற்கைகளிலும் உயர் தகைமைகளைக் கொண்ட நயீம், 1985ம் ஆண்டு நுவரெலியா சில்மியாபுர அல்முர்ஷித் மகா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக முதல் நியமனம் பெற்று, அரச சேவையில் இணைந்து கொண்டார். 1989 – 1993 வரை அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் பாடசாலையிலும்; பின்னர் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1993 1994 காலப்பகுதியில் ஓமான் நாட்டிலும்அவர் பணி செய்தார்.

இலங்கை அதிபர் சேவைக்குள் நுழைந்த எம்.எஸ்.ஏ.நயீம், 2012ம் ஆண்டு முதல் ஓய்வு தினம் வரை அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றினார்.

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளராகவும் தேசிய கல்வி நிறுவகம், அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி என்பனவற்றின் வருகைதரு விரிவுரையாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.



அக்கரைப்பற்று கல்வி வரலாற்றில் மூத்த அதிபர்கள், சிறந்த ஆசிரியர்கள் ஆகியோரின் அர்ப்பண சேவைகளின் ஊடாக வளர்ந்துவந்த அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றி முத்திரை பதித்தார். தனது ஆளுமை, நிர்வாகத்திறன் காரணமாக பாடசாலையிலுள்ள வளங்களை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி, உச்ச அறுவடையை பெற்றுக் கொடுத்தார். ஒரு நாளின் அதிகமான நேரங்களை பாடசாலையில் செலவிட்டு, பாடசாலையை சதா நேரமும் உயிர்ப்பித்தார்.

மாணவர் கல்வி அடைவு விருத்திச் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தி பாடசாலையை உயர் நிலைக்கு கொண்டு வந்த பெருமை அதிபர் நயீமைச் சாரும்.

அவரது பணியைப் பாராட்டி கௌரவிக்கும் 'நெகிழ்ச்சியான நிறைவு விழா' வினை பாடசாலை ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம். பெற்றார் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினர். இதன் போது அதிபர் நயீம் பாடசாலையில் வரவேற்கப்பட்டு, பொன்னாடை போரத்தி, நினைவுப் பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

நல்லதொரு ஆசிரியராக, அர்ப்பண சிந்தையுள்ள அதிபராகக் கடமையாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அதிபர் நயீம் இப்பகுதி கல்விச் சமூகத்தினால் என்றுமே போற்றப்படுவார்.

## அக்கரைப்பற்று அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஏ.நயீம் 36 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு

**ஐ.எல்.றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

## 2/3 பெரும்பான்மையுடன்...

வரவு செலவுத்திட்டத்துக்கு எதிராக எதிரணியில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பிக்கள் வாக்களித்தனர். இலத்திரனியல் வாக்களிப்பு முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

2022ஆம் நிதியாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் கடந்த 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது சுதந்திர இலங்கையின் 76ஆவது வரவு – செலவுத் திட்டம் என்பதோடு பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத்திட்டமாகும். இது தொடர்பான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

நவம்பர் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் நவம்பர் 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவுசெலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது. இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து குழுநிலை விவாதம் நடைபெற்றது. 23 ஆம் திகதி முதல் நேற்று வரை குழுநிலை விவாதம் நடைபெற்றது. நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு முக்கிய அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் உரையாற்றினர். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இறுதியாக பதிலளித்து உரையாற்றினார். அதனையடுத்து மாலை வாக்கெடுப்பு நடைபெற்றது.

03 ஆம் வாசிப்புக்கு வாக்கெடுப்பு நடத்துமாறு எதிரணி கோரிதையடுத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அதற்கான அழைப்பை விடுத்தார். இலத்திரனியல் முறையின் கீழ் எம்.பிக்கள் வாக்களித்தனர். சபாநாயகர் முடிவுகளை அறிவித்த நிலையில் ஆளும் தரப்பினர் மேசையில் தட்டி ஆரவாரம் செய்து மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

இதன் போது முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிஸ் பாராளுமன்ற எம்.பிக்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.முஷர்ரப், நஸீர் அஹமட், இஷாக் ரஹ்மான், ஏ.எஸ்.எம்.ரஹீம், எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் ஆளும் தரப்புடன் இணைந்து வரவுசெலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி டயனா கமகே, தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பி அரவிந்த குமார் ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் எதிராக வாக்களித்திருந்தனர். அத்தோடு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது கட்சி உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

இதே வேளை 03 எம்.பிக்கள் வாக்களிப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. டபிள்யூ. டிஜே.செனவிரத்ன,விஜேதாச ராஜபக்ஷ, குமாரவெல்கம ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு பிரசன்னமாகியிருக்கவில்லை.

வாக்கெடுப்பின் நிறைவில் சபாநாயகரும் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு கட்சித் தலைவர்களும் நன்றி தெரிவித்து உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் நிறைவடைந்தன.

கொரோனா தொற்று நிலைமையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இம்முறை வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதோடு வரலாற்றில் முதன் முறையாக இம்முறை வரவு – செலவுத் திட்டம் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 7.51 வீதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அதிகரித்த நிதி, பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் படி பாதுகாப்பு அமைச்சுக்கு 373 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அடுத்த வருடத்துக்காக நிதி அமைச்சுக்கு 185.9 பில்லியன் ரூபாவும் கல்வி அமைச்சுக்காக 127.6 பில்லியன் ரூபாவும் சுகாதார அமைச்சுக்காக 153.5 பில்லியன் ரூபாவாகவும், விவசாய அமைச்சுக்காக 243.9 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. கேட்டல் குறைபாடு உள்ளவர்களுக்காக இவ்வருடம் வரவுசெலவுத்திட்ட விவாதத்தை சைகை மொழியிலும் ஒளிபரப்பப்பட்டது. இதற்கமைய வரவுசெலவுத்திட்டம் நடைபெறும் காலப்பகுதியில் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புக்கு சமாந்தரமாக சைகை மொழியிலான ஒளிபரப்புக்குதனியானகட்டமொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. வரவுசெலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலப் பகுதியில் பொதுமக்கள் கலரி மக்களுக்காக திறக்கப்படவில்லை.

## கல்வி முறைமையில்... 03ஆம் பக்கத் தொடர்

பல்கலைக்கழகமாக மாத்திரம் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உலகிலுள்ள அனைத்துச் சிறந்த பல்கலைக்கழகங்களும், அரச பல்கலைக்கழகங்களல்ல என்றும் எடுத்துரைத்தார்.

பெரும்பாலானவை சுதந்திரமான சுய நிர்வாக நிறுவனங்களாகவும் தொண்டு நிறுவனங்கள் அல்லது கல்வியில் கவனம் செலுத்தும் இலாப நோக்கற்ற நிறுவனங்களாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளதோடு, இலங்கையில் இவ்வாறான நிறுவனங்களை நிறுவ முடியாமைக்குக் காரணமில்லையென்றும் குறிப்பிட்ட அவர், இதைச் சாத்தியமாக்குவதற்கான சட்டக்கட்டமைப்பை மாற்றவேண்டுமென்றால், அதைச் செய்யமுடியுமென்றும் தெரிவித்தார்.

## கொழும்பிலிருந்து யாழ்....

145 ஆவது மைல் கல்லுக்கருகிலுள்ள வளைவில் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 02 மணியளவில் ஏற்பட்ட இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர். விபத்தில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் தலையில் பலத்த காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். காயமடைந்தவர்கள் ரம்பாவ மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் . இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொருளாதார நெருக்கடிக்கு...

ஒத்துழைப்பை வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை பொருட்கள் சேவைகள் வருமானத்தில் மத்திய வங்கி பலவந்தமான பணப் பரிமாற்றம் செய்வதன் மூலம் வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் என பல்வேறு துறையினரும் சிக்கல்களை எதிர்கொள்ள நேரலாமென சபையில் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அது தொடர்பான வர்த்தமானியை உடனடியாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமைச்சு அதனோடு இணைந்த இராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

## அடுத்த இரு வாரங்களுக்குள்...

இன்று முதல், தினசரி பூஸ்டர் தடுப்பூசியாக ஃபைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கேற்ப, இன்றைய நாட்களில் அடையாளம் காணப்படும் கொவிட் நோயாளிகளில் அதிக சதவீதமானவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பதுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் இள வயதுடையவர்கள் என்று சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கொவிட்19 தொற்றுக்கு ஆளாகுதல் மற்றும் மரண எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதற்காக தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். இது தொடர்பாக இளம் வயதினருக்கு தெளிவுபடுத்தி, விரைவாகத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பணிப்புரை விடுத்தார்.

கொவிட்19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தடுப்பூசியைப் பெறாதவர்கள், பொது இடங்களுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக தற்போது சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அதைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் பொது இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டையைக் கொண்டு செல்வதைக் கட்டாயமாக்க கொவிட்19 குழு நேற்று தீர்மானித்தது.

## பொருளாதாரத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

நாட்டில் இந்தளவு பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் தற்போதைய அரசாங்கமோ அல்லது கொரோனாவோ கிடையாது. நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் நாட்டில் நிலவும் ஸ்திரமில்லாத தன்மையே அதற்கு காரணம்.

இது தேசிய இனப்பிரச்சினையால் வந்த பிரச்சினையாகும். தேசய பிரச்சினையை தீர்ப்பதற்கு பல மாநாடுகள், கூட்டங்கள், ஒப்பந்தங்கள் என மேற்கொள்ளப்பட்டன. அனைத்து ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன. நாட்டுக்குள் மாத்திரமல்ல நாட்டுக்கு வெளியேயும் மாநாடுகள் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அதற்காக நாம் இந்த அரசை மட்டும் குறை கூறவில்லை. ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் அதற்கான முயற்சிகளை எடுத்து வரும்போது எதிர்க்கட்சிகள் அதனை குழப்புவதே வழமையாகியது.

திம்பு, ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையே இந்த ஸ்திரமற்ற நிலைக்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 57 நாடுகளுக்கு பரவிய...

உள்ளிட்ட நாடுகளிலும் ஒமிக்ரோன் கொரோனா திரிபு கண்டறியப்பட்டுள்ளது. ஒமிக்ரோன் கொரோனா பரவல் நிலைகள் குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், புதன்கிழமை பேசும்போது,ஒமிக்ரோன்கொரோனாபாதிப்புகளால் ஏற்பட்ட இறப்புகள் பதிவாகாததைக் குறிப்பிட்டார்.

இதுவரை 57 நாடுகளில் ஒமிக்ரோன் கொரோனா பரவல் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் கொரோனா பரவல் தீவிர உடல் நல பாதிப்பை ஏற்படுத்துகிறதா?, அதற்கான சிகிச்சை எந்தளவுக்கு பயன் தருகிறது?, தடுப்பூசி எந்தளவுக்கு செயல்படுகிறது? என்பது குறித்து அறிய கூடுதல் காலமாகலாமென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## காணாமல் ஆக்கப்பட்டோரது...

ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று காலை 11.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பித்த நீதி வேண்டிய கவனயீர்ப்பு போராட்டத்தை கிளிநொச்சி டிப்போ சந்தி வரை முன்னெடுத்தனர். இதன்போது சர்வதேச மனித உரிமைகள் ஆணையாளருக்கு மின்னஞ்சலூடாக அனுப்பவுள்ள மகஜரும் ஊடகங்களிடம் கையளிக்கப்பட்டது.

## இறுதி சடங்கில்...

இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று (10) அதிகாலை புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.

ஜெனரல் சவேந்திர சில்வா, இந்தியாவிலுள்ள தனது சக தலைவரின் துயரமான மறைவு குறித்து கேள்வியுற்று, ஊடகங்களுக்கும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் வெளியிட்ட விசேட இரங்கல் செய்தியில் ஆழ்ந்த வருத்தத்தையும் அதிர்ச்சியையும் தெரிவித்தார்.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நஞ்சப்பசத்திரம் பகுதியில் புதன்கிழமை இந்திய இராணுவ ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி கீழே விழுந்து தீப்பிடித்தது.

இந்த கோர விபத்தில் முப்படை தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத் உள்பட 13 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு நேற்றுக் காலை வெலிங்டன் எம்.ஆர்.சி. இராணுவ முகாமில் அஞ்சலி செலுத்தப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இராணுவ அதிகாரிகள் உட்பட அனைவரும் அஞ்சலி செலுத்தினர். இதனை தொடர்ந்து அனைவரது உடல்களும் டெல்லி கொண்டு செல்லப்பட்டன.

அங்கு நேற்று மாலை 4.00 மணிக்கு ஜெனரல் பிபின் ராவத் மற்றும் அவரது துணைவியார் திருமதி மதுலிகா ராவத்தின் உடல்கள் ப்ரார் சதுக்கத்தில் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

## இராதாகிருஷ்ணன் MP க்கு ...

மேலதிக நேரம் ஒதுக்குமாறு எதிர்த்தரப்பு பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கோரினார். அவர் அதற்கு எந்த பதிலும் வழங்காததால் ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ அவருக்கு மேலதிகமாக 03 நிமிடங்கள் வழங்கினார். பாராளுமன்றத்தில் நேற்று நிதி அமைச்சு மீதான விவாதம் நடைபெற்றது. பகல்போசண இடைவேளையின் பின்னர் வி.இராதாகிருஷ்ணன் எம்.பி உரையாற்றினார்.

அவருக்கு 04 நிமிடங்களே ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது அவருக்கு 2 நிமிடங்கள் மாத்திரமே இருப்பதாக சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித்தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பி அறிவித்தார்.

எனினும் தனக்கு மேலதிகமாக 02 நிமிடங்கள் வழங்குமாறு எதிர்த்தரப்பு பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவிடம் அவர் கோரினார். ஆனால் லக்ஷ்மன் கிரயெல்ல மௌனம் சாதித்ததையடுத்து "நாம் பேசுவதில் பயனில்லை. ஆளும் தரப்பிலாவது எமக்கு நேரம் ஒதுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் பேசுவதால் எந்தப் பயனும் இல்லயென்று குறிப்பிட்ட இராதாகிருஷ்ணன் எம்.பி பேச்சை ஆரம்பித்தது மாத்திரமே, நேரம் முடிந்தது என்றார்.

இதன் போது ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ குறுக்கீடு செய்து,

"அவர் எங்கள் பழைய நண்பர். எதிர்த்தரப்பில் அவருக்கு நேரம் வழங்காவிட்டால், எமது தரப்பால் 03 நிமிடங்கள் வழங்குகிறோம். இப்படித்தான் நாம் கவனிக்கிறோம்" என்றார்.

இதன்படி அவருக்கு மேலதிகமாக 3 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதற்கு நன்றி தெரிவித்த இராதாகிருஷ்ணன் எம்.பி தொடர்ந்து உரையாற்றினார்.

## பால்மாவுக்கு தட்டுப்பாடு... 03ஆம் பக்கத் தொடர்

ஏற்பட்டுள்ளது. பால் மாவுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதை தொடர்ந்து பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டது. இறக்குமதியாளர்களின் தீர்மானத்துக்கமைய பால் மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை. தற்போதைய விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்யும் வகையில் அமையவில்லை. பால் மா இறக்குமதியின் போது அறவிடப்படும் வரியை இரத்துச் செய்யுமாறு நிதியமைச்சிடம் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு இதுவரையில் சாதகமான தீர்வு கிடைக்வில்லையென்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## மரக்கறி விலைகள்...

விவசாய இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. பொருளாதார நிலையங்களில் (09) ஒரு கிலோ கறிமிளகாய், பச்சை மிளகாய் ஆகியவற்றின் மொத்த விலை 780 ரூபாவாகவும், சில்லறை விலை 800 ரூபாவாகவும் இருந்தது. ஏனைய காய்கறிகளில் போஞ்சி மொத்த விலை அனைத்து பொருளாதார மையங்களிலும் 400 ரூபாவுக்கு அதிகமாகவே காணப்பட்டது.

அத்துடன், கரட் 380 ரூபா முதல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக...

அதன்படி இக்கால எல்லை எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து தமக்கான பாடநெறிகளின் கீழ் பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## தடுப்பூசி பெறுவது...

வந்தமை, அவர் ஒமிக்ரோன் திரபுள்ளமை உறுதி செய்யப்பட்டமை குறித்து கண்டறியப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். புதிதாக கண்டறிப்பட்ட வைரஸ் திரிபு குறித்து எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் (09) நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானங்கள் சில மேற்கொள்ளப்பட்டன.

## மின்வெட்டு எனும்...

02 ஆவது ஜெனரேட்டர் முழுமையாக சரி செய்யப்படாதிருந்தது.

எனினும் தற்சமயம் அந்த ஜெனரேட்டரிலும் ஏற்பட்ட கோளாறு சீர் செய்யப்பட்டுள்ளமையினால் மின் விநியோகம் தடங்களின்றி முன்னெடுக்கப்படமென்று மின்சக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட பாரிய செயலிழப்பு காரணமாக வெள்ளிக்கிழமை (03) நாடு முழுவதும் பல மணிநேரம் மின்சார தடையை எதிர்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மணமகளை அலங்கரிப்பதற்காக...

திருமண நிகழ்வில் மணமகளை அலங்கரிப்பதற்காக வானில் சிலர் பயணித்த போது பெண்ணும் வானின் சாரதியும் உயிரிழந்துள்ளனர். சாரதி நொச்சியாகம பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடையவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த பெண் மாத்தறை திக்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான பஸ் கடற்படைக்கு சொந்தமானதென பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கிண்ணியா நகரசபை...

பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் படகுப் பாதை கவிழ்ந்த சம்பவத்தில் ஏற்கனவே 03 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கிண்ணியா பொலிசாரினால் இழுவை படகில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டில் நான்காவது சந்தேக நபராக குற்றம் சுமத்தப்பட்ட கிண்ணியா நகர சபை தவிசாளரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தவிசாளர் சுகவீனமுற்றுள்ளதால் மாத்திரைகளை பாவித்து வருவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபரான கிண்ணியா நகர சபை தவிசாளரை பிணையில் விடுவிக்குமாறும் எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் உத்தரவிட்டார்.

## யுத்தக் குற்றச்சாட்டுகள்...

நாடுகளுக்கு சென்று அங்குள்ள பீல்ட் மார்ஷல்களின் நடத்தை, ஒழுக்கம் பண்புகளை கற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்த அவர், பீல் மார்ஷல் பதவியையும் வைத்துக்கொண்டு சபையில் நாகரீகமற்ற விதத்தில் உரையாற்றும் அவர், விடுதலைப்புலிகள் வெள்ளைக் கொடியுடன் வந்த வேளை இராணுவத்தினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தாகக் கூறி சர்வதேசத்தில் யுத்த குற்றச்சாட்டுக்கான சந்தேக விதையை தூவியவர் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

எமது ஆட்சியில் தற்போது இராணுவத்தின் நலன்கள் தொடர்பிலும் அவர்கள் அருந்தும் ஒரு வேளை தேநீர் குறித்தும் கேள்வி கேட்கும் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தான் அன்று சர்வதேசத்தினால் எமது இராணுவத்தின் மீது யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இராணுவத்தினர் குற்றவாளிகள் என குறிப்பிடப்பட்ட வேளையில் மௌனம் காத்தார்.

அதனை நல்லாட்சி அரசாங்கம் அமைதியாக ஏற்றுக்கொண்டு சர்வதேசத்திடம் மண்டியிட்ட போதும் அவர் ஊமை போன்று செயற்பட்டார் என்பதை குறிப்பிட்ட விரும்புகின்றேன். விடுதலைப்புலிகள் வெள்ளைக்கொடியுடன் வந்த வேளையில் எமது இராணுவத்தினர் அவர்களை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தனர் எனக் கூறி சர்வதேசத்தின் யுத்த குற்றச்சாட்டுக்கான சந்தேக விதையை தூவியதும் சரத் பொன்சேகாவே என்பதை மறந்து விடக்கூடாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அரசுக்கு ஒத்துழைப்பதாக...

தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.பலமான நாடொன்றை உருவாக்க ஒத்துழைக்குமாறு கோரிய அவர் சஜித் தலைமையிலான அரசொன்றை உருவாக்குவதாக எதிரணி கூறியது . நாம் வழங்குவதானால் நாட்டை முன்னேற்றியே வழங்குவோம். கடனுள்ள நாட்டை வழங்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

டுபாயும் மாலைதீவும் அச்சமின்றி சுற்றுலா பயணிகளுக்காக நாட்டை திறந்துள்ளன. சுற்றுலா அமைச்சர் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருகிறார்.சேவைத்துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. கப்பற்துறையில் அதிக முதலீடு செய்யப்பட்டுள்ளது. எமது நாட்டின் அமைவிடம் காரணமாக விமான சேவை வாயிலாகவும் அதிக வருமானம் பெற முடியும். தகவல் தொழில்நுட்ப கம்பனிகள் எமது நாட்டுக்கு வந்துள்ளன. 2,000 இளைஞர்களை அதிக சம்பளத்துக்கு நியமித்துள்ளனர். 5,000 பேருக்கு வரை தொழில் கிடைக்க இருக்கிறது.

அந்நிய செலாவணி நெருக்கடி உள்ளது. அதனை மறைக்கத் தேவையில்லை. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது புதிய விடயமல்ல. 1961 இலும் அங்கு சென்றுள்ளனர். யுத்தம் நிறைவடைந்தவுடன் நான் கப்ராலுடன் சென்றேன்.

அனைத்திற்கும் உதவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் இங்கு வந்துள்ளனர்.

வருடாந்தம் அவர்கள் இங்கு வருவர். நாம் அங்கு செல்லத் தேவையில்லை. ஆனால் சர்வதேச நாணய நிதி அதிகாரிகளை சந்திக்க அவர் நேரம் வழங்கவில்லை. சர்வதேச நாணய நிதியம் பற்றி எதிரணி தெரிவித்தாலும் எமக்கு நம்பிக்கை கிடையாது.

உலக வங்கி இதுவரை ஒருநாட்டுக்கு வழங்கிய அதிக நிதியான 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது.

கடந்த வருடம் செலுத்த வேண்டியிருந்த கடனை வழங்கினோம். எமக்கே உரிய கையிருப்பை நாம் பேணுவோம். உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தொழிற்துறை மேம்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடன் பெற்று ஏன் வீதி அமைக்கிறீர்கள் என்று வினவுகின்றனர். கைத்தொழில் துறை முன்னேற்றத்திற்கு வீதி அபிவிருத்தி பிரதானமானது. மின்சாரத் துறை மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் முன்னேற்றப்பட்டது.ஒவ்வொரு அங்குல நிலத்திற்கும் நீர் வழங்குவோம். பலமான நாடொன்றை உருவாக்க ஒத்துழையுங்கள்.

குறைந்த பட்சம் 25 வருடங்கள் நீடித்த அதிபர், ஆசிரியர் சம்பள பிரச்சினை தீர்ப்பதற்கு நிதி ஒதுக்கியதை எதிர்ப்பதாக இருந்தால் எதிராக வாக்களியுங்கள். எம்.பிக்களின் சிறப்புரிமைகளை குறைப்பதாக இருந்தால் எதிராக வாக்களியுங்கள்.

எம்.பிக்களுக்கு கிராமங்களுக்கு சென்று சேவை செய்ய 15 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.அந்த தொகை தேவையில்லை என்றால் சொல்லுங்கள். அந்த செலவை குறைத்துக் கொள்ளலாம். பட்டதாரிகளை நிரந்தரமாக்குவதை எதிர்ப்பதாக இருந்தால் எதிராக வாக்களியுங்கள். பிணைமுறி மோசடி பணத்தை அரசுக்கு எடுப்பதை எதிர்ப்பதாக இருந்தால் எதிர்த்து வாக்களியுங்கள் என அவர் எதிரணியினரை பார்த்து கூறினார்.

## சவால்களை வெற்றி...

மேற்கொள்ள உள்ளதாகவும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

மேற்படி பொருளாதார கொள்கை, நடைமுறை மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் உள்ளிட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு நிலையான கொள்கையாக அமைய வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பிரதமர் சபையில் எடுத்துரைத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்தல் அமைச்சு,அதனோடு இணைந்த இராஜாங்க அமைச்சுகள் மீதான வரவு செலவுத் திட்ட குறுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்:

பொருளாதார கொள்கை மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் எதிர்காலத்தில் அனைத்து அரச மற்றும் தனியார் துறையை இணைத்து செயல்படும் விதத்திலான பொருளாதார மறுசீரமைப்பை நோக்காகக் கொண்ட நிலையான பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதற்காக கொள்கை ஆய்வு நிறுவனம் மூலம் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அனைத்து கொள்கைகளையும் தயாரிக்கும் போது கண்டிப்பாக சரியான தரவுகளின் கீழ் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அந்த வகையில் பொருளாதார கொள்கை மட்டுமன்றி அனைத்து கொள்கைகளையும் தயாரிக்கும் போது சரியான தரவுகள் அவற்றுக்கு அவசியமாகும். அதற்காக எமது அமைச்சின் கீழ் வரும் குடிசன மதிப்பீட்டு திணைக்களத்திற்கும் முக்கிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த வருடத்தில் மேற்கொள்ளவுள்ள குடிசன மதிப்பீட்டை 2023ஆம் வருடத்தில் நிறைவு செய்வதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

அதேவேளை அரச துறையில் நிதி அற்ற வளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதனை பயனுள்ள விதத்தில் உபயோகிப்பதற்கான கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தங்களை ஏற்படுத்தும் உபாய அபிவிருத்தி திட்டம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நிதியமைச்சு மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றுடன் நெருக்கமாக செயற்படுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

நிலவும் கொரோனா வைரஸ் பாதிப்பினால் சர்வதேச நாடுகளைப் போன்றே இலங்கையும் பொருளாதார அபிவிருத்தியில் பலவீனமான நிலையை கடந்து வந்துள்ளது. அந்த சவாலை வெற்றி கொண்டு நிலையான அபிவிருத்தி மறுசீரமைப்பு மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக அனைத்து பிரிவுகளையும் இணைத்துக்கொண்டு குறுகியகால, நடுத்தர மற்றும் நீண்டகால திட்டங்களை தயாரிப்பதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு மாநகரசபையின்

# 2022 வரவு செலவு திட்டம் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு மாநகரசபையின் 2022 வரவு செலவுத் திட்டம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் 10 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்திற்கான அமர்வு சபா மண்டபத்தில் நேற்று (10) இடம்பெற்ற போது பாதீட்டுக்கு ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாநகரசபையின் வரவு செலவுத் திட்டத்தினை சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நடைபெற்ற அமர்வில் முதல்வர் வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள மக்களின் நலன்சார்ந்த திட்டங்களை வெளிப்படுத்தினார்.

சபையில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று 38 உறுப்பினர்ளைக் கொண்ட சபையில் வாக்கெடுப்புக்கு விட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 4 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள், சிறி லங்கா சுதந்திரக் கட்சி 01, தமிழ் மக்கள் விடுதலைக் கழக கடசி01 மற்றும் சுயேச்சைக் குழு01 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.



திட்டத்திற்கு எதிராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 05, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி02, ஐக்கிய தேசியக் கட்சி 02, தமிழ் தேசியக் கூட்டமைப்பு 01, ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி01 மற்றும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 02 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருவர் நடுநிலை வகித்ததோடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒருவர் சமுகமளிக்கவில்லை.

# அம்பாறையில் ஆளுநரின் அலுவலகம் திறப்பு

காரைதீவு குறூப் நிருபர்



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் அம்பாறை மாவட்டத்திற்கான அலுவலகம், அம்பாறை நகரில் திறந்து வைக்கப்பட்டது. அம்பாறை அரசாங்க அதிபராகவிருந்து கிழக்கு மாகாண பிரதம செயலாளராக பதவியுயர்வு பெற்ற டி.எம்.எல்.பண்டாரநாயக்க ,சமய தலைவர்கள், பாதுகாப்புப்படை உயரதிகாரிகள் உள்ளிட்ட பல பிரதானிகளும் கலந்து கொண்டனர்.

ஆளுநரின் அம்பாறை மாவட்ட வாசஸ்தலத்திற்கு சமீபமாக ஆளுநரின் இவ் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஆளுநருடன் சம்பந்தப்பட்ட அம்பாறை மாவட்ட சகல அலுவல்களும் இனிமேல் இங்கு மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், சம்மாந்துறை பிரதேச சபை உதவி தவிசாளர் எ.அச் சிமொஹமட் உள்ளிட்ட ஒருசில அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டனர்.காரைதீவு பிரதேச அபிவிருத்தி தொடர்பான மகஜரொன்றை தவிசாளர் ஜெயசிறில் ஆளுநரிடம் கையளித்தார்.

இதேவேளை, அம்பாறை அரசாங்க அதிபராகவிருந்து கிழக்கு மாகாண பிரதம செயலாளராக பதவியுயர்வு பெற்ற டி.எம்.எல்.பண்டாரநாயக்கவிற்கு மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை வைபவம் எளிமையாக நடைபெற்றது.

மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பாக்கியராஜா உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உளவள மேம்பாடுகள்

கிண்ணியா குறிஞ்சாக்கேணிப் படகுப் பாதையில் 23.11.2021 அன்று பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மனநிலை மேம்பாடு சம்பந்தமான நிகழ்ச்சி புதன்கிழமை (08) நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயக சிறுவர் பிரிவு மற்றும் கலாசாரப் பிரிவு இணைந்து கிண்ணியா அல்அஸ்ஹர் வித்தியாலத்தில் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த பாடசாலையில் கல்வி கற்ற நான்கு மாணவர்கள் உயிரிழந்துள்ளார்கள். மேலும் பாதிக்கப்பட்ட மாணவர்களும் இப்பாடசாலையை சேர்ந்தவர்களே. இப் படகு விபத்தின் பின் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததோடு தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதுடன் மாணவர்களை மகிழ்வூட்டும் செயற்பாடாக இவ் உளவளத்துறை செயற்பாடுகள் வழங்கப்பட்டன.

# கிண்ணியா ஆர்ப்பாட்டத்தில் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இருவர் கைது

ரொட்டவெவ குரூப் நிருபர்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப் படகு விபத்தின் போது வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் பிரதான சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 23ஆம் திகதி கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவை படகு கவிழ்ந்ததில் ஆறு பேர் உயிரிழந்த நிலையில் அங்குள்ள இளைஞர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன், ஊடகவியலாளர்களை தாக்கியதுடன் அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளையும் திருடிச் சென்றனர்.

இந்நிலையில் இச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்களிடம் கிண்ணியா பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதன்போது வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன் அரச சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கிண்ணியா பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் இதன் பிரதான சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 31 மற்றும் 30 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறை கரையோர பிரதான வீதிகளில் கட்டாக்காலிகளின் நடமாட்டம் அதிகரிப்பு

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்



அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச பிரதான வீதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் வீதி விபத்துக்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

இதனால் பொதுமக்களும், வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.பிரதான வீதிகளில் மாத்திரமன்றி உள் வீதிகளிலும் இச் சம்பவங்கள் ஏற்படுகின்றன. நீண்ட காலமாகத் தொடரும் அவலங்களை கட்டுப்படுத்துவதற்கான நிரந்தர நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளாது அலட்சியம் காட்டி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆடு, மாடுகள் உள்ளூராட்சி சபைகளினால் பிடிக்கப்பட்டு, தண்டப்பணம் அறவிடப்படும்' என்ற பகிரங்க அறிவித்தல் அடிக்கடி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், பின்னர் அது குறித்து, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் கவனமெடுப்பதில்லை.

# திருகோணமலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்






ரொட்டவெவ குரூப் நிருபர்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை (10) பாதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து ஆர்ப்பாட்ட இடத்திலிருந்து நடைபவனியாகச் சென்று திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாகவும் பதாகைகளை ஏந்தி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தமது உறவுகளை மீட்டுத்தர ஐ.நா. சபையும், அரசாங்கமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்ததோடு திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தனர்.

# நாகபுரம் விடியல் விளையாட்டு மைதான புனரமைப்பு; ஆரம்பித்து வைத்தார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

கல்லடி குறூப் நிருபர்



நாட்டை கட்டியெழுப்பும் சுபிட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைகள் திட்டத்திற்கமைய அரசாங்கம் நாடு பூராகவும் பல்வேறுபட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முன்மொழிவிற்கு அமைவாக மீள்குடியேற்ற அமைச்சினால் வாகரை நாகபுரம் விடியல் விளையாட்டு மைதான புனரமைப்பிற்காக ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்நிதியின் ஊடாக குறித்த விளையாட்டு மைதானத்தை புனரமைக்கும் வேலைத்திட்டமானது பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனினால் அடிக்கல் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சி. சி. ரிவி கமராக்கள் கையளிப்பு




பாண்டிருப்பு தினகரன் நிருபர்

நிந்தவூர் கமு/ அல் அஷ்ரக் மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலைக்கு சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சி. சி. டிவி கமராக்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்று அல் அஷ்ரக் தேசிய பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு, கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிதி அனுசரணையுடன் வழங்கப்பட்டுள்ளது.

## தற்கொலைக்கு முயன்ற பெண்

# வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணம்

மணல் சேனை நிருபர்

பெண்ணொருவர் சமயலறையில் சுருக்கிட்டு தற்கொலைக்கு முயன்றபோது சம்பவத்தை கண்ட அவரின் மகன் தூக்கிலிருந்து மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகிழடித்தீவு பிரதேசத்தில் இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகிழடித்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான கதிராமப்போடி தேவதேவி வயது 61 என்பவரே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்க மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் இன்றுமுதல் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி

காரைதீவு குறூப் நிருபர்



கிழக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், இன்று முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக, கிழக்கு மாகாணத்தில் முதலிரண்டு தடுப்பூசிகளை பெற்ற 30வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இன்று முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 18 வயதுக்கு மேற்பட்ட சகல களநிலை உத்தியோகத்தர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# இன்று திருவெம்பாவை ஆரம்பம்

காரைதீவு குறூப் நிருபர்

இந்துக்கள் அனுஸ்ட்டிக்கும் சிவ விரதங்களுள் ஒன்றான திருவெம்பாவை விரதம் இன்று (11) சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது. இவ்விரதத்தினை ஆருத்திரா தரிசனம் என்றும் அழைப்பர். இன்று தொடக்கம் 10 தினங்கள் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். ஆலயங்களில் அதிகாலை திருவெம்பாவை சிறப்பு பூஜைகள் இடம்பெறும். இவ்விரதம் எதிர்வரும் 20ஆம் திகதி திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும்.

# 2022 இல் எந்த உணவுத் தட்டுப்பாடோ பொருளாதார நெருக்கடியோ ஏற்படாது



## - அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே

2022 இல் எந்த உணவுத்தட்டுப்பாடோ பொருளாதார நெருக்கடியோ ஏற்படாது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

சஜித் பிரேமதாஸ தொடர்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர் பதில் வழங்கவில்லை. அவர் பதில் வழங்க வருவதாக இருந்தால் எனக்கு ஒதுக்கிய நேரத்தை வழங்குகிறேன்.

2022 இல் எந்த உணவுத்தட்டுப்பாடும் ஏற்படாது. விவசாயிகள் வயிலில் இறங்கியுள்ளனர். தேவையான பசளை வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியோ தட்டுப்பாடே வராது. கடந்த ஆட்சியில் ஒரு பட்டதாரிக்காவது தொழில் வழங்கப்பட்டதா, எமது ஆட்சியில் 65 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கப்பட்டுள்ளது.

உங்களை போன்று உணரும் விதத்தில் நாம் செயற்பட்டால் முதலிரு வரிசையிலும் உள்ளவர்கள் சிறையில் இருந்திருப்பார்கள். நாம் செய்வது வெளிப்படையாக தெரியாது. பெசில்,ஜோன்ஸ்டன் போன்றவர்களை நடுஇரவில் நிறுத்தி சிறையில் இட்டார்கள். கொஞ்சம் பொறுங்கள். ஜனவரி மாதம் ஆகும் போது பொறுபேறுகள் வரும்.

கொரோனா காரணமாக ஓரிரு மாதங்களே எம்மால் செயற்பட முடிந்தது. அடுத்த வருடம் சிறந்த முகாமைத்துவத்துடன் நாட்டை முன்னேற்றுவோம்.

கிழங்கு மிளகாய் வெங்காயம் இறக்குமதியை நிறுத்துவோம். நாட்டுக்கு தேவையான அனைத்தையும் உள்நாட்டில் உற்பத்தி செய்வோம்.

**சஜித் பிரேமதாச:**
**எதிர்க்கட்சித் தலைவர்**

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு விவகாரம் இன்னும் முடிவடையவில்லை.

இக்காலத்தில் விற்பனை செய்யப்பட்ட அனைத்து சிலிண்டர்களையும் மீளப் பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக புதிய சிலிண்டர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவ்வாறு வழங்கப்பட்டுள்ள புதிய சிலிண்டர்களும் வெடிப்பதாக தெரிய வருகிறது. வெள்ளை நிறத்தில் சிவப்பு லேபள் ஒட்டப்பட்டு புதிய சிலிண்டர் வழங்கப்படுவதாக தெரிவிக்கின்ற நிலையில், அந்த சிலிண்டர்களும் வெடித்து வருவதாக முறைப்பாடுகள் வருகின்றன.

கொரோனாவுக்குப் பின்னர் பல நாடுகளில் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரித்து வரும் நிலையில் எமது நாட்டில் அது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. டொலருக்காக பல்வேறு நாடுகளிலும் கையேந்தும் நிலை உருவாகியுள்ளது. இந்தியா மற்றும் முஸ்லிம் நாடுகளிடம் டொலர் கேட்டுச் செல்வதைக் காணமுடிகின்றது

**ராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர**

கடந்த ஆட்சியில் தனிநபர் வருமானம் 3 வருடங்களால் பின்னோக்கி சென்றது. 40 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு எமது அரசு தொழில் வழங்கியது. பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

20 ஆயிரம் வீடமைப்பு திட்டம், ஒரு இலட்சம் பாதை திட்டம் என பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. போசாக்கு பொதி வழங்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் நிதி ஒதுக்கப்பட்டடுள்ளது. அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டம் மீள ஆரம்பிக்கப் படுகிறது. ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பிகள் அனைவருக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வி. ராதா கிருஷ்ணன்**
**எம்.பி (ஜ.ம.ச)**

மக்களின் துன்பத்தை நிவர்த்தி செய்ய முழு ஆதரவை வழங்குவோம். மாறி மாறி விமர்சிப்பதால் நாட்டுக்கு எதுவும் நடக்காது. டொலர் பிரச்சினைக்கு முகங்கொடுக்க ஏற்றவாறு ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கவும் சுற்றுலா துறை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாகிஸ்தானில் கொல்லப்பட்ட தியவடனவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறோம். இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நடக்கக் கூடாது. மூதுரைச் சேர்ந்த ரிசானா ரபீக் கழுத்து வெட்டப்பட்டு கொல்லப்பட்டார். இந்திய முப்படை தளபதி விபத்தில் கொல்லப்பட்டதற்கும் அனைவர் சார்பாகவும் கவலை தெரிவிக்கிறோம்.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அண்மையில் இந்தியா சென்றிருந்தார். பொருளாதார நிலைமையை எடுத்துக் கூறியுள்ளார். இதனை வரவேற்கிறோம். இந்தியா எமது அயல்நாடு. இந்தியாவின் உதவியை பெற எந்த வெட்கமும் படத்தேவையில்லை. இதில் எந்த தவறும் கிடையாது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக அவர் பெரும் சேவையாற்றினார். தற்போதைய சூழ்நிலையில் சேவையாற்றுவதில் தடையுள்ளது. நேரம் அளித்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

**ராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த**

சஜித் பிரேமதாஸவுக்கு சொந்தமான சலூனுக்கும் தோட்டங்களுக்கும் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கையாட்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1600 இயந்திர நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார். அவர் தொலைக்காட்சி முன் அமர்ந்திருக்காமல் இங்கு வந்து பதில் வழங்கட்டும்.

சஜித் பிரேமதாஸ செய்த அனைத்து நாசங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதாக கூறியிருந்தோம். உதாகம அமைப்பதாக தெரிவித்து நிர்மாண அபிவிருத்தி அதிகார சபை நிதியை நாசமாக்கினார். தான் கலந்து கொள்ளும் கூட்டங்களில் முன்வரிசையில் அமர வைப்பற்கு ஆட்களை தயார் செய்து அதற்காக ஒரு பில்லியனுக்கும் அதிகமான நிதியை செலவிட்டார். ஜனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டவர் குறித்தே பேசுகிறேன். அவர்களே நியமித்த குழுவால் தான் அவரை குற்றவாளியாக்கப்பட்டார்.

இந்த திருட்டு பேர்வழியால் 16 ஆயிரம் மில்லியனுக்கு அதிகமான தொகை முறைகேடு செய்யப்பட்டுள்ளது. அப்பாவி மக்களுக்காகவே அவரின் தந்தை செவன நிதியத்தை ஆரம்பித்தார். அங்கும் முறைகேடு செய்யப்பட்டுள்ளது. கலாச்சார நிதிய பணம் முறைகேடு செய்யப்பட்டு 400 மில்லியனுக்கு மேல் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது.

**தர்மலிங்கம் சித்தார்த்தன்:**
**தமிழ் தேசிய கூட்டமைப்பு எம். பி.**

வரவு செலவுத் திட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடன் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷ பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே அவர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது

இந்தியா. சர்வதேச நாணய நிதியம், பங்களாதேஷ் என பல நாடுகள் மற்றும் ,அமைப்புகளிடம் கடன் கேட்கும். நிலையே தற்போது உருவாகியுள்ளது.

அரசை மட்டும் கூறவில்லை ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு முயற்சிகளை எடுக்கும் பொது அதனை எதிர்க்கட்சிகள் குழப்புவதே வழமை. திம்பு, ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் நடைமுறைப் படுத்தப்படாமையே இந்த ஸ்திரமற்ற நிலைமைக்கு காரணம்.

யுத்தம் முடிந்தவுடன் புலம்பெயர் தமிழர்கள் பலர் இங்கு நிதிகளைக்கொண்டு வந்து முக்கியமாக வடக்கு,கிழக்கு பகுதிகளில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பினர். எனினும் அதற்கு பெரும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இன்றும் கூட மீன்பிடித்துறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு பலர் முயற்சிக்கின்ற போதும் அதற்குத் தடைகள் ஏற்படுத்தப் படுகின்றன.

அதன் காரணமாக முதலீடு செய்ய வந்தவர்கள் திரும்பி சென்ற நிலைமைகளையும் நாம் பார்த்துள்ளோம். இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்தால்தான் நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காணும். நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் தான் இந்த நாட்டின் பிரஜை என்பதனை உணரக்கூடிய வகையில் இருந்தால் இன்று கூட வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளை செய்ய பலர் தயாராகவுள்ளனர்.

**அநுர குமார திசாநாயக்க எம்.பி**
**(ம.வி.மு)**

இலங்கை அரசாங்கம் மற்றும் நியூ போட்ரஸ் நிறுவனத்திற்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை சபையில் சமர்பிப்பதாக அரசாங்கமும் வாக்குறுதி அளித்தும் இன்றுவரை அதனை சபைப்படுத்தவில்லை. அந்த உடன்படிக்கையை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காது மறைத்தாலும் என்னிடம் இந்த உடன்படிக்கை உள்ளது. இந்த உடன்படிக்கையை, நிதி அமைச்சரும், எரிசக்தி அமைச்சரும் சமப்படுத்த மறுத்த உடன்படிக்கையை நான் சபையில் சமர்ப்பிக்கிறேன்.

அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனத்துடன் இந்த உடன்படிக்கை செய்துகொள்ளாது வேறொரு நிறுவத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கை நிறுவனமொன்று ஆனால் அமெரிக்காவில் பதிவை கொண்டுள்ள நிறுவனமொன்று எவ்வாறு இந்த உடன்படிக்கையை செய்ய முடியும் .

**இரான் விக்ரமரட்ன,**
**ஐக்கிய மக்கள் சக்தி எம்பி:**

இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேய நாடு கடன் பொறிக்குள் சிக்க நேர்ந்தது. தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அப்போது நிதியமைச்சராக இருந்தார். ஜனாதிபதியின் தற்போதைய செயலாளரே நிதி அமைச்சின் செயலாளராகவும் இருந்தார். நிதியமைச்சரின் இயலாமையை மறைப்பதற்காகவே அரச ஊழியர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டு வருகிறது. பாதுகாப்பு அமைச்சுக்கும் நெடுஞ்சாலை அமைச்சுக்கும் பாரியளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதிலும் மக்களுக்கு அவசியமான முக்கியமான அமைச்சுக்களான கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகளுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளன.

**மனுஷ நாணயக்கார**
**ஐக்கிய மக்கள் சக்தி எம் பி**

நாட்டிலுள்ள அந்நிய செலாவணி எதிர்வரும் இருவாரங்களுக்கு மாத்திரமே போதுமானது.

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருடகளுக்குத் தட்டுப்பாடு வரும். உண்பதற்கும் எதுவும் இல்லாமல் போகும் நிலை ஏற்படும் என பலரும் எச்சரிக்கிறார்கள். நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டத்தில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு எதுவும் காணப்படவில்லை. வரவு செலவு திட்டத்தில் நாட்டை கட்டியெழுப்ப நிதி அமைச்சர் எதனை முன்வைத்துள்ளார் எனக் கேட்க விரும்புகிறேன்.

நாடு முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகளை இனவாதங்களைக் கொண்டு மூடிமறைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

**எஸ். ஸ்ரீதரன்**
**(தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி)**

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார அடித்துக்கொலை செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கிறோம் . இலங்கையிலிருந்து 35000 கண்கள் தானமாக பாகிஸ்தானிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டதாக பாகிஸ்தானின் கண் சிகிச்சை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார் என்பதே அந்த செய்தி. இது உண்மையா பொய்யா ?இவ்வாறு 35000 கண்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அவை யாருடைய கண்கள்? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அவ்வாறு வழங்கியவர்களின் பெயர் பட்டியல் எங்கே? இந்த கண்கள் சிங்கள மக்களுடைய கண்களா அல்லது தமிழ் மக்களினுடைய கண்களா? யாருடைய கண்கள் அவ்வாறு தானம் செய்யப்பட்டன? இது பொய் யென்றால் பாகிஸ்தானின் ஒரு பிரபல வைத்தியர் ஏன் பொய் கூறுகின்றார் ? இவையெல்லாம் எமக்கு முன்னாலுள்ள பெரிய கேள்விகள். கடந்த 27 ஆம் திகதி முதல் வெட்டித்துறை , மணல்காடு , நெடுந்தீவு , கட்டைக்காட்காடு, பருத்தித்துறை சக்கோட்டை, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களிவ் 6 மனித உடல்கள் கரையொதுங்கியுள்ளன. இதுவரை இந்த உடல்கள் யாருடையவை? இவர்கள் எந்த நாட் டை சேர்ந்தவர்கள்? என்ற எந்த விடயமும் வெளியில் வரவில்லை.

மருதங்கேணி பொலிஸார் அந்த உடலை சென்று பார்த்துள்ளனர் . ஊடகங்களில் அந்த உடல் பற்றிய செய்தி வெளிவந்துள்ளது. ஆனால் இப்போது அந்த உடலை காணவில்லை.

எவ்வாறு ஒரு கரையொதுங்கிய உடல் காணாமல்போகும்? அதனை யார் எங்கே கொண்டு சென்றனர் என்பது தெரியாதுள்ளது. கரையொதுங்கியுள்ள உடல்கள் யாருடையவை என்றும் தெரியவில்லை. கரையொதுங்கிய உடல் காணாமலும் போயுள்ளது. இது பல்வேறு சந்தேகங்களைக் கொடுக்கின்றது.

கரையொதுங்கும் உடல்கள், காணாமல் போன உடல் மற்றும் 35000 கண் தானம் தொடர்பில் உரிய பதிலை எதிர்பார்க்கின்றோம். விசாரணையை கோருகின்றோம் என்றார்.

## பட்ஜட் விவாதம்




சபை நிருபர்கள்
**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**









# வீடமைப்பு அமைச்சராக சஜித் ரூ.20,000 மில்லியன் முறைகேடு

## -பாராளுமன்றில் இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவிப்பு



வீடமைப்பு அமைச்சராக இருந்த போது சஜித் பிரேமதாஸ தனது காலத்தில் 20 ஆயிரம் மில்லியன் ரூபாவை வீணடித்துள்ளார். இந்த முறைகேடுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதோடு அவர் சிறை செல்ல நேரிடும் என கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.

நிதி அமைச்சு மீதான விவாத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை அவரின் உரைக்கு சஜித் தரப்பு எம்.பிக்கள் தொடர்ச்சியாக இடையூறு செய்தனர். தனிப்பட்ட ரீதியில் எம்.பி ஒருவரை விமர்சிக்க முடியாதென அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்,

முடிந்தால் நீதிமன்றம் செல்லுமாறு எதிரணி கோரியது.மோசடிகள் தொடர்பில் நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்தமாதம் முதல் தேவையான நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். நாம்வெறுனே இருக்க மாட்டோம்.

உங்கள் அணியில் உள்ளவர்கள் தான் சஜித்தை நீதிமன்றத்தில் நிறுத்துமாறு கோரினர். பல இலட்சம் ரூபாய் மோசடி பற்றிய ஆதாரம் உள்ளது.

வீடமைப்பு அதிகார சபையின் ஹம்பாந்தோட்டை அலுவலகத்தில் 100 பேர் தான் பணியாற்றலாம். ஆனால் 1,300 பேரை நியமித்தார். சம்பளம் வழங்கினார். 2019 இல் மாத்திரம் 2634 மில்லியன் ரூபாவை சம்பளம் வழங்குவதற்கு செலவிட்டார்.

ஆனால் நாம் இன்று 1,378 மில்லியனே வருடத்திற்கு செலவிடுகிறோம். ஆட்டோ தரிப்பிடங்களில் இருந்தவர்களையும் தனது அடியாட்களையும் சட்டபூர்வமற்ற முறையில் தற்காலிகமாக நியமித்து அதற்கு 5 வருடத்தில் 6,280 மில்லியன் ரூபா செலவிட்டார்.

இவற்றுக்கு சிறை செல்ல நேரிடும். அவரை சிறைக்கு அனுப்ப எமக்கு விருப்பமில்லை. உலகப் புகழ்பெற்ற திருட்டுகளை பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

பிரசார செலவாக வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிக்க 707 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு 103 மில்லியன் கடன் வழங்க வேண்டியுள்ளது.மொத்தமாக வீடமைப்பு அதிகார சபையின் ஒரு பில்லியன் ரூபா நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் சேர்ந்தால் 20 ஆயிரம் மில்லியன் ரூபா முறைகேடு செய்யப்பட்டுள்ளது. அப்பாவி மக்களுக்கு இந்த நிதியில் 50 ஆயிரம் வீடுகளை கட்டியிருக்கலாம் என்றார்.

குறுக்கீடு செய்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி,

எம்.பி ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைப்பதாக இருந்தால் பிரேரணை கொண்டு வர வேண்டும் என்றார்.

# வெளிநாட்டுக் கடன்கள் அனைத்தும் அடுத்த வருடத்தில் செலுத்தப்படும்

## -நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சபையில் உறுதி

நாட்டின்வெளிநாட்டுக்கையிருப்பு மிக மோசமான நிலையில் காணப்பட்டாலும் வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கடன்களும் அடுத்த வருடத்தில் செலுத்தப்படும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் உறுதியாகத் தெரிவித்தார்.

அதற்கிணங்க அடுத்த வருடம் ஜனவரியில் 500 மில்லியன் அமெரிக்கன் டொலரும் ஜூன் மாதத்தில் 1,000 மில்லியன் அமெரிக்கன் டொலரும் செலுத்த வேண்டியுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர் ,கடன் சேவை வட்டியும் அதனோடு செலுத்த வேண்டியுள்ளதாக சபையில் தெரிவித்தார். ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 454 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டி ருந்தால் எமக்கு இந்தளவு பாரிய நிலுவை இருந்திருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்களை செலுத்தியபின் எமக்கே உரித்தான வெளிநாட்டு கையிருப்பு ஒன்றை நாம் ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி நாள் விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்:

யதார்த்தத்தை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாட்டின் நிலைமையை கருத்திற் கொண்டு இம்முறை வரவு செலவுத் திட்டம் மிகவும் வெளிப்படையாக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.



நாம் பெரும் வெளிநாட்டு அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர் கொண்டுள்ள அதேவேளை நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பும் பெரும் நெருக்கடி நிலையில் உள்ளதை நாம் வெளிப்படையாக கூற வேண்டும்.

எ வ் வ ா றெ னி னு ம் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் வழிகாட்டலுடன் நாம் அடுத்த வருடத்தில் அனைத்து வெளிநாட்டு கடன்களையும் செலுத்துவோம் என்பதை உறுதியாக குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த வருடத்தில் எமக்கான வெளிநாட்டு உதவி 6103 மில்லியனினால் குறைவடைந்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் எதிர்க்கட்சியினர் அவர்களது அரசாங்கத்தில் முன்னெடுத்த செயல்பாடுகளே நாட்டின் இத்தகைய வீழ்ச்சிக்கு காரணமாகியுள்ளன. அதனால்தான் அவர்கள் சொந்த கட்சியில் தேர்தலில் நிற்காமல் வேறு கட்சி ஒன்றை தேர்ந்தெடுத்தனர்.

எமது ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

2017இல் 940 மில்லியன் அமெரிக்கன் டொலராக இருந்த ஏற்றுமதி வருமானம் 2018ல் 980 மில்லியன் அமெரிக்கன் டொலராகவும் 2019ல் 979 அமெரிக்கன் டொலராகவும் காணப்பட்டதுடன் அது இந்த வருடத்தில் 751 மில்லியன் டொலர்களாக குறைவடைந்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 2 லட்சத்து 30 ஆயிரம் பேர் செல்கின்ற நிலையில் 50 ஆயிரம் பேர் மட்டுமே கடந்த வருடத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளார்கள். அதன் மூலம் எமது வருமானம் வெகுவாக குறைந்வடைந்துள்ளது.

எவ்வாறெனினும் அடுத்த வருடத்தில் ஜப்பான், ருமேனியா, கொரியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக இலங்கையர்களை அனுப்ப நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மூன்று லட்சம் பேரை அவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக அனுப்புவதே எமது இலக்கு.

நாம் நினைப்பது போல் அல்லது கூறுவதுபோல் வெளிநாட்டு முதலீடுகள் எமக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருமான நோக்கத்துடனேயே வருவர். நீண்ட காலம் டொலர் எமது நாட்டில் நிலைப்பது தொடர்பில் யோசித்தே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டம்





**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று தமது உறவுகளின் உரிமைகளை வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு முன்பாக இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யுத்தம் முடிவடைந்த நாள் முதல் இன்று வரை 12 வருடங்களாக தமது உறவுகளை தேடி போராடிவருகின்ற நிலையில் கடந்த 2017 ம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் வீதியில் அமர்ந்து தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் நேற்று 1737 ஆவது நாளாகவும் போராடி வருகின்றனர்.

பல ஆண்டுகளாக போராடிவரும் மக்கள் உள்நாட்டில் தமக்கு எந்த தீர்வையும் தராது எனவும் சர்வதேசமே தமக்கான தீர்வை தர வேண்டும் எனவும் தமது உறவுகளின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் கோரி சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று தமது உறவுகளின் உரிமைகளை வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

# காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

**சிவசக்தி ஆனந்தன்**

**ஓமந்தை விஷேட நிருபர்**



அரசாங்கம் காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

காணாமல் போன உறவினர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட தீப்பந்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தங்களுடைய உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். உண்மையில் தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினையானது வெறுமனே ஒரு மனித உரிமை பிரச்சினையாக இது வரை காலமும் யுத்தம் முடிந்து 12 வருடகாலமாக ஐ.நா மனித உரிமை பேரவைக்கு இந்த மனித உரிமை பிரச்சினையாக முடக்கப்பட்டு இருக்கின்றது.

ஆனால் இந்த 12 வருட காலத்திலே போரால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் நில அபகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு இந்த 12 வருடகாலமும் இவ் மனித உரிமை பேரவைக்குள் எந்த ஒரு தீர்வும் காணமுடியாத நிலையில் தான் தள்ளப்பட்டு இருக்கின்றது. ஆகவே தமிழ் மக்கள் நீண்டகாலமாக தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த மனித உரிமை பேரவையில் எதிர்பார்த்திருந்தது ஏமாற்றமாக இருக்கின்றது.

# வவுனியாவில் குடும்பஸ்தர் மீது சரமாரி தாக்குதல்;

## சந்தேக நபர்கள் தப்பி ஓட்டம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு வாகனம் ஒன்று கொள்வனவு செய்யும் நோக்கில் வந்த குடும்பஸ்தர் மீது வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ' மகேந்திரா வாகனத்தில் வந்த சிலர் மூர்க்கமாக தாக்குதல் நடாத்திவிட்டு தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளதாக தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குடும்பஸ்தர் பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

செவ்வாய்க்கிழமை வவுனியாவில் வாகனம் ஒன்று பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியை சேர்ந்த சகாதேவன் சுதாகரன் வயது 34 வந்து பார்வையிட்டுவிட்டு செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு திரும்புவதற்கு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பேருந்திற்கு காத்திருந்தபோது மகேந்திரா வாகனம் ஒன்றில் வந்திறங்கிய ஆறுபேர் கொண்ட குழுவினர் என்மீது சரமாரியான தாக்குதல் நடாத்திவிட்டு என்னிடம் இருந்த தங்க நகைகளையும் அபகரித்துக் கொண்டு செல்ல முற்பட்டபோது அதில் ஒருவர் என்னை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் எங்களை காட்டிக்கொடுத்தால் வைத்தியசாலையிலிருந்து திரும்ப வீடு செல்ல மாட்டாய் என்று அச்சுறுத்திவிட்டு சென்றுள்ளனர்.

எனவே என்னை கொலை செய்யும் நோக்கில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளேன் எனவே எனது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார்.





கொவிட் தொற்றிலிருந்து விடுபட்டு மக்கள் நலன் பெற வேண்டி வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஓமம் சிறப்பாக நடைபெற்றது. வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஆதி விநாயகர் ஆலயத்தில் ஆலயத்தின் பிரதம குரு மயூர சர்மா குருக்கள் தலைமையில் மஹா கணபதி ஓமம் சிறப்பாக நேற்று இடம்பெற்ற போது. படங்கள்: வவுனியா விசேட நிருபர்

# வவுனியாவில், 'நீரிழிவு நோயும் யோகாசனமும்' நூல் வெளியீடு

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும், வைத்திய கலாநிதி திருமதி சரஸ்வதி பிரபாகரனின் நீரிழிவு நோயும் யோகாசனமும் என்னும் மருத்துவ நூல் வெளியீட்டு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும், இந்நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் கலந்துகொள்கிறார்.

நூலின் முதற் பிரதியினை வவுனியா வெங்கடேஸ்வரா சுப்பர் மார்க்கற் உரிமையாளர் இராஜேந்திரன் பெற்றுக்கொள்ள, தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கல் இடம் பெறும். நூலின் ஆய்வுரையினை கலாபூசணம், தமிழ்மணி மேழிக்குமரனும் சிறப்புரையினை விழாவின் சிறப்பதிதியும் ஏற்புரையினை, நன்றியுரையினை நூலாசிரியரும் வழங்குவர்.

# தேசிய ரீதியில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் வவுனியா அல் – இக்பால் மாணவர்கள் சாதனை

**வவுனியா விசேட நிருபர்**



மலேரியா ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் வவுனியா, அல் இக்பால் மகா வித்தியாலய 8 மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

சுகாதாரத் திணைக்களத்தின் மலேரியா ஒழிப்பு பிரிவினரால் தேசிய ரீதியில் மலேரியா ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் சித்திரப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் மலேரியா ஒழிப்பு தொடர்பில் சிறப்பான விழிப்புணர்வுகளை வழங்கக் கூடிய சித்திரங்களை வரைந்த மாணவர்கள் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

அதற்கமைய, வவுனியா, சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகா வித்தியாலயத்தை சேர்ந்த 8 மாணவர்களின் சித்திரங்களும் சிறந்த படைப்புக்காக தெரிவு செய்யப்பட்டு வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

வெற்றி பெற்ற என்.எப்.றிமாசா, எஸ்.அப்ரா, எம்.கே.எம்.இம்ராஸ், என்.எப்.ஹஸ்னா, ஏ.அசீமா, எல்.எப்.சம்கா, வி.எப்.அன்சிபா, ஏ.எம்.பகாத் ஆகிய மாணவர்களுக்கு பாடசாலையின் அதிபர் ஏ.கே.உபைத், சுகாதாரப் திணைக்களத்தின் பிராந்திய மலேரியா தடுப்பு பிரிவைச் சேர்ந்த எஸ்.சரண்ராஜ் மற்றும் மலேரியா தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் இணைந்து மாணவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# பூநகரி மண்ணித்தலை சிவாலய மீளுருவாக்க பணிகள் ஆரம்பம்



**யாழ்.விசேட நிருபர்**

பூநகரி மண்ணித்தலை சிவாலயத்தை மீளுருவாக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி மண்ணித்தலை சிவாலயம் 1990ஆம் ஆண்டு அழிவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை பேணி பாதுகாத்து வந்த நிலையில், மீளுருவாக்கம் செய்வதற்கு தற்போது, இலங்கை தொல்லியல் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதனையடுத்து தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர் வி.மணிமாறனின் நெறிப்படுத்தலில், தொல்லியல் அதிகாரிகளின் மேற்பார்வையிலும் மீளுருவாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

# புகையிரதம் மோதி குடும்பஸ்தர் மரணம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற புகையிரதத்தில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை 5.05 இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து காங்கேசன் துறை நோக்கி சென்ற உத்தரதேவி புகையிரதமானது வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் பயணித்த போது புகையிரத தண்டவாளத்தில் ஒருவர் தலையை வைத்து படுத்திருந்த நிலையில் அவர் மீது புகையிரதம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவர் வவுனியா, தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா ரவி (வயது 56) ஆவார். இவரது சடலத்திற்கு அருகில் குடும்ப பிரச்சினை காரணமாக தற்கொலை செய்து கொள்வதாக கடிதம் எழுதி வைத்துள்ளார்.



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது. படங்கள்: பருத்தாதுறை விசேட நிருபர்

# திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலை வந்தவர் மரணம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு திடீர் சுகயீனம் காரணமாக (09) வியாழக்கிழமை அழைத்து வரப்பட்ட ஓய்வுநிலை உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தரான 71 வயதான வ.நாகேஸ்வரன் என்பவரே இவ்வாறு வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டு சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளார்.

## புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



# பாவியின் பருக்கை

பாவங்களிலிருந்து பாவியானேன்
பள்ளிவாயலிலும் பாவக்கறை சுமந்தேன்
அங்காங்கே அலட்சியமாகி,
கருதுவதை கவனத்தில்
கொள்ளாத அகமும்
அசட்டைதனமானது.

சைத்தான் சங்கமித்ததும்
சாவல்களின் சதிகள்
சாலைகளில் எங்கும் மிதித்தது,
சாக்கடை வீசியது போல்
சச்சரவாகியது விதண்டாவாதம்
சகிப்புத்தன்மையற்று
வீதியும் உலாவுகின்றது.

முன்னோர்களின்
சில முன்னுதாரணமற்று
முழு மதியற்றது,
முழுக்க முழுக்க
குறை தேடி குற்றத்தை கண்டு பிடித்து
குரோதத்தை உண்டுபண்ணி
வம்புகளை விலை பேசும்
வக்கணையாக்க வாலிபத்தின்
வாழ்க்கை வழிதவறியது.

முகஸ்துதி முற்றுமுழுதாய்
முற்றத்திலும் கர்வம் கொண்டது
முதுகெலும்பு மூச்சை பறித்து
முதுகை காட்டி கொண்டவர்கள்
முதுகில் குத்திச் சென்றார்கள்.

நிதி நீதியில் நீந்துகிறது
நியாயங்கள் நிலையற்று
நிபந்தனைகள் நிவர்த்தியாகாத
நிலுவையில் நியதியக்கப்பட்டு
நிழல்களில் கூட
நிறமாற்றிக் கொண்டதால்
நிறையிலும் கூட
பாவம் பங்களிப்பு செய்கிறது.

கையூட்டுக்கள் செய்பவர்கள்
கைநிறையே காசு பார்ப்பது
தொழில் செய்வது
பயனடையே பயணிப்பவர்களுக்கு
மறைமுகமாக தாக்கல்
தவறுகள் தடமாக
பிறருக்கு ஊட்டி கடனாளியாக்கி
வட்டி குட்டி போட்டு
சட்டி நிறையே சாம்பல்கள் சேர
நரக வாடை வாசம் வீசுகிறது.

இறைவன் பெயர் சொல்லி
இரக்கம் காட்டி
இழுபறியாக இன்னல்களின்
இறக்குமதி இடைநிறுத்தமாகாது
நடத்தைகள் நாகரீகமற்று
நலுவிக்கொண்ட நன்மையில்
பாவங்களை சுமக்கும்
பாவியின் பருக்கை.

மபாஸ்

# சலூன் கண்ணாடி



சலூன் கண்ணாடியை
தினமும் எத்தனையோ நபர்கள்
வந்து சந்தித்து செல்கின்றனர்

சாதி பேதமற்று சந்தித்துச் செல்லும்
அத்தனை நபர்களையும்
அது ஞாபகம் வைத்திருப்பது
சாத்தியமான விடயமல்ல

முடி திருத்துபவனை மட்டும்
எத்துனை நெரிசலுக்கு மத்தியிலும்
ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடும்

எஜமானை நன்றியோடு
நினைவில் செதுக்கி வைத்திருக்கும்
வளர்ப்பு நாயைப் போல

ஏனெனில் வாடிக்கையாளர்கள்
முடி திருத்த வரா தருணங்களிலும்
அவனிடம் மட்டுமே பழகிக் களித்து
காலம் கடத்துகிறது கண்ணாடி

நான் சலூன் கண்ணாடியை
சந்திக்க வருவதற்கு முன்னதாக
எத்தனை நபர்கள் வந்து
சந்தித்து சென்றிருப்பார்களோ

கறுப்பு வெள்ளை மயிர்களின்
காடாய் கிடக்கிறது சலூன் கண்ணாடி

ஜமீல்

# மாறிவிடு மனிதா...



மனம் மாறிவிடு மனிதா
பணம் வாழ்க்கை இல்லை புரிதா
பல திசைகள் உண்டு தெரிதா
அதில் உண்மை வழிகள் படிடா
அதன் வழியே நீயும் நடடா
வீண் வாழ்வை பற்றி அறிடா
வெற்றிப் பாதை நீயும் அடைடா

வேதனைதான் வாழ்க்கையடா
பல காயம் கொண்ட இதயமடா
சொந்தக் காலில் நீ இல்லை என்றால்
காதல் கூட உன்னை வெறுக்குமடா
சேலை கட்டும் பெண்களடா
இவ் வாழ்வில் வந்தால் துன்பமடா

வெறுத்துப்போன உறவுமடா
வெந்து போன மனதுமடா
கேட்பதெல்லாம் பொய்களடா
பார்பதெல்லாம் மாயையடா
மனிதன் என்ற வெறும் பெயருமடா
இன்று அறிவு என்பது இல்லையடா

அஞ்சி அஞ்சி வாழ்ந்து கொண்டு
கஞ்சிக் கோப்பை கையில் கொண்டு
நெஞ்சம் எல்லாம் கவலை கண்டு
துடித்துப் போனோம் வெயிலில் வெந்து
பாவி என்று எண்ணிக் கொண்டு
பல யுகங்கள் வந்தோம் கடந்து கொண்டு

வாழ்க்கை வேண்டாம்
என்று சொல்ல உரிமை இல்லை
நமக்கு இங்கு

உயிரை மாய்க்க தேவை இல்லை
படைத்த இறைவன் பார்த்துக் கொள்வான்
வாழ வழி கொடுத்து விடுவான்
பாதி உயிரை மட்டும் அவன்
பறித்துச் செல்வான்

வன்னித் தமிழ் மறவன்
இந்திராபுரம் ,பளை

# தென்கிழக்குப் பல்கலையில் பேராசிரியர்களை உருவாக்கியவரே உபவேந்தர் நாஜிம்

### பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா

மாவத்தகம தினகரன் நிருபர்





தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாகி சுமார் 20 வருடத்தில் எந்தவொரு பேராசிரியர்களும் உருவாகவில்லை. பேராசிரியர் நாஜிம் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு வந்ததன் பின்பே பேராசிரியர்கள் உருவாகத் தொடங்கினார்கள் என பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர் நளிமிக்கு பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டதை கௌரவிக்கும் நிகழ்வு அக்குறணை கல்வி மேம்பாட்டுக்கான ஐக்கிய அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அஸ்ஹர் தேசிய பாடசாலை அதிபர் ஏ. எல். அன்வர் தலைமையில், தலைவர் எப். எம். பாஸிலின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில், விசேட உரை நிகழ்த்திய தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தொடர்ந்து பேசிய அவர்,...

தென்கிழக்குப் பல்கலைக்கு பேராசிரியர் நாஜிம் வந்ததன் பின்பே பேராசிரியர்கள் உருவாகத் தொடங்கினார்கள். கலாநிதி பட்டப் பெற்ற மாணவர்களின் தொகையும் அதிகரித்தது. சர்வதேச ரீதியிலான ஆய்வுகளும் ஆய்வுக் கட்டுரைகளும் வெளியிடப்பட்டதால் பல்கலைக்கழகம் சர்வதேச மட்டத்திற்கு உயர்ந்தது. 20 பேராசிரியர்களை உருவாக்கியவரே உபவேந்தர் நாஜிம் என அவர் கூறினார்.

நளீமியா கலாபீட மாணவரான மஸாஹிர் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு வெளிவாரி மாணவராக அதி உயர் சித்தியைப் பெற்ற மஸாஹிர் ஜாமியா நளீமியாவிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராக பணியாற்றி தற்போது பேராசியராக உயர்ந்துள்ளார் என மேலும் தெரிவித்தார்.

# லிட்ரோ கேஸ் நிறுவனத்திற்கு தற்காலிக தடை விதிக்கப்பட வேண்டும்

### செந்தில் தொண்டமான் கோரிக்கை






லிட்ரோ கேஸ் நிறுவனத்திற்கு உடனடியாக தற்காலிக தடைவிதிக்க வேண்டும் என்பதுடன், எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் உடனடியாக வழங்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக கடந்த ஒரு மாதகாலமாக பதிவாகும் எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் அச்சத்துடன் சமையலை மேற்கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பல குடும்பங்கள் உணவுகள் இல்லாமலும் தவித்துள்ளன.

இலங்கை என்பது ஒரு வெப்ப மண்டல நாடாகும். வெப்ப சமநிலையை பேணும் வகையில்தான் எரிவாயு உற்பத்திகள் இதுவரை காலமும் இடம்பெற்று வந்தன. குறிப்பாக சிலிண்டர்களில் திரவ வாயுவின் கலவை 80 சதவீதமாக காணப்பட்டது. திரவவாயு கலவை 80 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளமையால் தான் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருவதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. திரவவாயு சதவீதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு திரவவாயு மாற்றத்திற்கான அனுமதியை வழங்கியது யார்?.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு உடனடியாக தற்காலிக தடைவிதிக்கப்பட வேண்டும். இதனால் ஓர் உயிர் ஏற்கனவே பறிபோயுள்ளது. ஆகவே, எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் லிட்ரோ கேஸ் நிறுவனம் உடனடியாக வழங்க வேண்டும்.

இதேவேளை, திரவவாயு மாற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

### அக்குறணை உக்கல பிரதேச மாணவர்களுக்கு

# பொஸ்வானாவிலுள்ள இலங்கையரின் நிதி



ஒதுக்கீட்டில் குடிநீர் வசதி

அக்குறணை பிரதேச சபைக்குட்பட்ட உக்கல பிரதேச மக்களுக்கு சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் பொஸ்வானாவில் உள்ள இலங்கையரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சுத்தமான ஆழ்குழாய் கிணற்றுக்கான நீர் விநியோகத் திட்டம் பொது மக்களின் பாவனைக்காக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீனால் கையளிக்கப்பட்டது.

தண்ணீரின்றி துன்பங்களை அனுபவித்து வரும் அக்குறணைப் பிரதேச உக்கல மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகத்தின் மூலம் தங்களுடைய கல்வி நடவடிக்கையை தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்று அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்.

இந் நிகழ்வு அக்குறணை உக்கல சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகத்தில் அக்குறணை பிரதேச சபை உறுப்பினர் சாபானி தலைமையில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

கண்டி வடக்கு பாரிய நீர் விநியோகத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் அக்குறணை பிரதேச மக்களும் பயன்பெறவுள்ளனர். எனினும் அக்குறணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட உக்கலைப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான கண்டி வடக்கு நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகள் மிக குறைவாக காணப்படுகின்றது. அதேவேளையில் அக்குறணைப் பிரதேசத்தில் சுத்தமான குடி நீரைப் பெற்றுக் கொள்வதில் மிகவும் பின் தங்கிய கிராமமாக உக்கல கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளில் உள்ள மக்களே உள்ளனர்.

அக்குறணைப் பிரதேச சபை எல்லைக்குள் நூற்றுக்கு தொண்ணூறு வீதமான அளவில் தண்ணீர் விநியோகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனாலும் உக்கல, மல்வான ஹின்ன மற்றும் டவர் மஹல்லா ஆகிய பிரதேசங்களில் குடிநீருக்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

பொஸ்வானாவில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய இலங்கையைச் சேர்ந்த சகோதரர்கள் வருடா வருடம் இவ்வாறான ஆழ் குழாய்க் கிணறுகளை நிர்மாணித்துக் கொடுத்து சுத்தமான குடி நீர் வசதிகளை வழங்கி வருகின்றனர். இது நமது பிரதேசத்திற்கு கிடைத்த பெரும் வரப்பிரகாசமாகும்.




இந்தியாவின் தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல் நகருக்கு அருகில் அமைந்துள்ள தொட்டனூத்து அடியனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று இலங்கை வாழ் தமிழர்களின் மறுவாழ்வு முகாம்களில் குடியிருக்கும் 321 குடும்பங்களுக்கு 300 சதுர அடி பரப்பளவு உள்ள வீட்டினை 600 சதுர அடி நிலத்தில் கட்டிக்கொடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் ரூபாய் 17 கோடியே 17 இலட்சத்து 10 ஆயிரம் ஒதுக்கியதையடுத்து அவ்வீடுகளுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. நிகழ்வில் கூட்டுறவு துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோருடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் த செஞ்சி கே எஸ் மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

### சஹீரா சமீரினால் எழுதப்பட்ட

## 'ஓயாத ஓலங்கள்' கவிதை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு




தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட மாணவி சஹீரா சமீரினால் எழுதப்பட்ட 'ஓயாத ஓலங்கள்' கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா 08 ஆம் திகதி புதன் கிழமை மடுள்போவ முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த ஊடகவியலாளரும், மாவனல்லை ஜே.எம் மீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தொலைக்காட்சி செய்திவாசிப்பாளருமான ராஷித் மல்ஹார்டீன் புத்தகத்தை வெளியிட்டு வைத்ததுடன் முதற் பிரதியையும் பெற்றுக்கொண்டார்.

நூல் அறிமுக விழாவை சிரேஷ்ட ஊடகவியலாளர் அமீர் ஹுசைன் நடத்தினார். நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், ஊர்மக்கள், தனவந்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சஹீரா சமீர் ஆரம்பக் கல்வியை தல்கஸ்பீடியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை ஹெம்மாதகமை மடுள்போவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் கற்றதோடு மாவனல்லை ஜே.எம் மீடியா ஊடகக் கல்லூரியில் ஊடகக் கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.



பவளவிழாக் காண இருக்கும் மடுல்போவை மு.ம.வி இன் பவளவிழாவை நோக்கிய செயற்திட்டங்களில் ஒன்றாகவே இப் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டு. சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆசிரியர் மீது தாக்குதல் நடாத்தியவர்களை கைது செய்யாவிட்டால் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளை முடக்கி போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்படும் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை அரசாங்க ஆசிரியர்கள் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கங்களின் ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பொன். உதயரூபனை குறித்த பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யுமாறு கோரி அண்மையில் சிவானந்தா தேசிய பாடசாலையினை மூடி மாணவர்கள், ஆசிரியர்கள் உள்நுழைவது தடுக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டதுடன் ஆசிரியர்கள் அச்சுறுத்தப்பட்டதாக தெரிவித்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது. அத்தோடு ஆசிரியர்கள் சுகவீனவிடு முறை போராட்டத்தினையும் முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையிலேயே நேற்று பிற்பகல் பாடசாலைக்கு முன்பாக ஒன்று திரண்ட ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை தடுப்பதற்கு புதிய சட்டங்கள் உருவாக்க வேண்டும்

### அநுராதபுரம் அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

எதிர்காலத்தில் சிறந்தொரு சமூகத்தினை உருவாக்குவதற்கு சிறுவர்களை பராமரிப்பது நமது கடமையாகும்.

சிறுவர்களுக்கெதிரான குற்றச்செயல்களை தடுப்பதற்காக எதிர்காலத்தில் புதிய சட்டங்களை உருவாக்கி அதிகபட்ச தண்டனைகளை வழங்குவதற்கு சிறுவர் பராமரிப்பு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என அநுராதபுரம் அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அநுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், சமூகத்தில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதற்கு காரணம் குடும்ப சுற்றுச்சூழல்தான் அது நன்றாக அமையுமாக இருந்தால் குற்றச் செயல்கள் அதிகரிக்காது பாதுகாத்துக் கொள்ளலாம். சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்களை ஊடகங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே சிறுவர்களுக்கெதிரான குற்றச்செயல்களை தடுப்பதற்காக எதிர்காலத்தில் புதிய சட்டங்களை உருவாக்கி அதிகபட்ச தண்டனைகளை வழங்குவதற்கு சிறுவர் பராமரிப்பு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கருத்து தெரிவித்தார்.

## அநுராதபுர யாசகர்களுக்கு நிரந்தர தங்குமிட வசதி

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரத்தில் உள்ள யாசகர்களுக்கான தங்குமிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அப் பிரதேசத்தில் நிரந்தரமாக சுற்றித்திரியும் யாசகர்கள் கடை தெருக்களில் இரவு நேரங்களை கழிப்பதால் இதனை தவிர்க்கும் முகமாகவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கான உரிய இடத்தை மாநகர சபை பெற்றுக் கொடுக்கும் என நகராதிபதி எச். பி.சோமதாச தெரிவித்துள்ளார்.

## ஹெலி விபத்தில் பலியான... (04ம் பக்கத் தொடர்)

இதில், பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்தனர். விமானி வருண் சிங் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டு அவருக்கு பெங்களூர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உயிரிழந்தவர்களின் உடல்கள் நேற்று முன்தினம் வெலிங்டனில் உள்ள இராணுவ பயிற்சி மையத்தில் வைக்கப்பட்டிருந்தது. அப்போது, மூன்று படைகளின் தளபதிகள், அதிகாரிகள், தமிழக முதல்வர் ஸ்டாலின், தெலுங்கானா கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து அவர்களது உடல்கள் தனித்தனி அம்புலன்ஸ்களில் சூலூருக்கு வீதி மார்க்கமாக கொண்டு செல்லப்பட்டன. இதனையறிந்த மக்கள் வழிநெடுகிலும் இருபுறமும் நின்று மலர்கள் தூவி, வீரவணக்கம் என கோஷமிட்டும், சல்யூட் அடித்தும் மரியாதை செலுத்தினர். மேட்டுப்பாளையம் பகுதியில் திரண்டிருந்த பெண்கள், கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அங்கிருந்து டில்லிக்கு தனிவிமானம் மூலமாக உடல்கள் கொண்டு செல்லப்பட்டன.

வெலிங்டனில் இருந்து சூலூர் வரையிலான சுமார் 85 கி.மீ தொலைவிலும் மக்கள் வீதியின் இருபுறமும் நின்று மரியாதை செலுத்தியது தொடர்பான காட்சிகள் வேகமாக பரவின. உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு தமிழக மக்கள் செலுத்தும் மரியாதையை வட இந்தியர்கள் பலரும் வியந்து பாராட்டியுள்ளனர். இராணுவ வீரர்களுக்கு கண்ணீர் மல்க, உணர்வுபூர்வமாக மரியாதை செலுத்திய நிகழ்வு நெகிழ்வை ஏற்படுத்தியதாகவும் வடஇந்திய நெட்டிசன்கள் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

நேற்று டில்லியில் உள்ள அவரது வீட்டிற்கு பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி உடல் கொண்டு செல்லப்பட்டது. அங்கு பலரும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பிபின் ராவத்தின் மகள்கள் கிரித்திகா மற்றும் தாரணி ஆகியோரும், பெற்றோரின் உடலுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி மதுலிகா ராவத் ஆகியோரின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. இருவரது உடல்களும் காமராஜ் மார்க் வழியாக டில்லி கன்டோன்மென்ட் மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு முழு இராணுவ மரியாதையுடன் நேற்று பிற்பகல் தகனம் செய்யப்பட்டன.


# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**INVITATION FOR BIDS (IFB)**

**Supply, Installation, Commissioning and Maintenance of Pre-Fabricated Sewerage Treatment Plant for SEUSL**

**(SEU/SS /NCB/2021/01)**

01. The Chairman, Department Procurement Committee (Major) of the South Eastern University of Sri Lanka invites sealed bids from eligible and qualified Bidders for Supply, Installation, Commissioning and Maintenance of Pre-Fabricated Sewerage Treatment Plant for the use of South Eastern University of Sri Lanka.

| Item No. | Category | Bid Bond (Rs.) |
|---|---|---|
| 01 | Pre-Fabricated Sewerage Treatment Plant | 450,000.00 |

02. Bidding will be conducted through **National Competitive Bidding.**

03. Interested eligible bidders may obtain further information from the Deputy Bursar (Telephone No: 067 22 55 178),South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360 from 9.00 a.m. to 2.30 pm up to **05.01.2022**.(Week days only).

04. A completed set of bidding documents in English Language may be purchased by interested bidders on submission of a written application by Bidder himself or by bidders' representatives to the address above (In Item 5) and upon payment of non refundable fee of LKR 5,000/= per procurement document, from 9.00 am to 3.00 pm up to **05.01.2022**. The mode of payment shall be either in cash or bank draft in favour of "Bursar, South Eastern University of Sri Lanka". The Bidders can also download the Bidding documents from the University Website i.e. www.seu.ac.lk. Those who are obtaining bidding documents from the University Website should submit the completed documents along with a Bank Draft drawn in favour of the "Bursar, South Eastern University of Sri Lanka" for Rs. 5000/- as non-refundable fee or **to the shroff.** The documents can be purchased up to **05.01.2022.**

05. The interested bidder shall participate for the **mandatory pre bid meeting** scheduled to be held at 10.00 a.m. on **30th December 2021** at the Boardroom, First Floor, Administrative Building, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil #32360.

06. Sealed Bids should be marked **"Tender for Supply, Installation, Commissioning and Maintenance of Pre-Fabricated Sewerage Treatment Plant for SEUSL"** on the left hand corner of the envelope and delivered to the **Chairman, Department Procurement Committee, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360** or place in the tender box kept in the office of the Supplies Division, South Eastern University of Sri Lanka, at or before **2.30 p.m.** on **06.01.2022.** All bids must be accompanied by **bid security as stated in paragraph 01 above.** Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person **at 2.30 p.m. on 06.01.2022,** at the Board Room – 1, First Floor, Administrative Building, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360. Late bids will be rejected.

**Chairman,**
**Department Procurement Committee,**
**South Eastern University of Sri Lanka,**
**University Park,**
**Oluvil #32360.**
**11.12.2021**



திகதி 09.12.2021 வியாழக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4611
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,539,440.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 9 1 1 3 6 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,893,151.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2906
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,241,440.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 01 03 66 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,873,144.96

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 959
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,406,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 158,679,026.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து S சுப்பர் இலக்கம் 17 வெற்றி இலக்கங்கள் 05 11 27 64

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 641
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,655,860.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 06 09 33 34
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,286,541.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1179
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,240,520.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 4 8 7 2 3 9
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,852,314.40

09.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 604,013
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 25,083,380.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள 24

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் விண்ணணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் :- பொது முகாமையாளர் பதவி எண் 101/08 (பதவி எண்ணிக்கை 01)**

சம்பள அளவுத் திட்டம் :- 18835-265x15-290x15-27160

**தகைமைகள்**

1. நிதி முகாமையாளர்/கணக்காளர்/வர்த்தக முகாமையாளர்/உற்பத்தி முகாமையாளர்/வங்கிச் சேவை முகாமையாளர் ஆகிய பதவியொன்றில் பதவியில் ஆகக் குறைந்தது மூன்று (03)ஆண்டுகால திருப்திகரமான சேவைக் காலம்.

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் பதவியின் பொது முகாமையாளர் தரம் v பதவியில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடகால திருப்திகரமான சேவைக் காலம்.

அல்லது

3. வர்த்தகம், நிதி முகாமைத்துவம் நிதி மற்றும் விவசாய விஞ்ஞானத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத்துடன் பதிவு செய்யப்பட்ட வணிக/வர்த்தக நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருடகால திருப்பதிகரமான சேவை அனுபவம்.

அல்லது

4. அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பெறப்பட்ட வர்த்தகம்/நிதி/அல்லது உயர் தேசிய டிப்ளோமாவுடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வணிக நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட திருப்திகரமான சேவை அனுபவம்.

அல்லது

5. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரத்துடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வணிக நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவியில் குறைந்தது இரண்டு (02) வருட திருப்திகரமான சேவை அனுபவம்

**பதவி வெற்றிடம் :- கணக்காளர் பதவி எண் 104/10 (பதவி எண்ணிக்கை 01)**

சம்பள அளவுத் திட்டம் :- 17605-215x15-240x15-24430

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் பதவியான கணக்குப் பதியுனர் தரம் - i / கணக்குப் பதியுனர் தரம் - ii உள்ளக கணக்காய்வாளர்/முகாமைத்துவ உதவியாளர் தரம்--1 பதவியில் கணக்குப் பிரிவில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட திருப்திகரமான சேவைக் காலம்.

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர பரீட்சை சான்றிதழுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் கணக்குப் பதியுனர் தரம்/உள்ளக கணக்காய்வாளர்/முகாமைத்துவ உதவியாளர் பதவியில் கணக்குப் பிரிவில் ஒரு (01) வருடத்திற்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலம். அல்லது கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர பரீட்சை சான்றிதழுடன் வணிக/வர்த்தக நிறுவனமொன்றில் கணக்குப்பதியினர் உள்ளக கணக்காய்வாளர், முகாமைத்துவ உதவியாளர் பதவியில் ஒரு (01) வருடத்திற்குக் குறையாத திருப்திகரமான சேவை அனுபவம்.
3. வர்த்தகம் முகாமைத்துவம்/நிதி, அல்லது கணக்கியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட பட்டம்.

அல்லது

4. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெறப்பட்ட வர்த்தகம்/முகாமைத்துவம்/நிதி மற்றும் கணக்கீடு சார் துறையில் இரண்டு (02) வருடத்திற்கு குறையாத கால அளவினைக் கொண்ட டிப்ளோமா

அல்லது

5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் பெறப்பட்ட கணக்கியல் அல்லது நிதியியல் துறையிலான NVQ மட்டம் - ivற்கு மேற்பட்ட தரச் சான்றிதழுடன், வர்த்தக /வணிக நிறுவனமொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத கணக்காளர் / கணக்காய்வாளர் பதவியில் திருப்திகரமான சேவை அனுபவம்.

**பதவி வெற்றிடம் :- முகாமைத்துவ உதவியாளர் பதவி எண் 302/15 (பதவி எண்ணிக்கை 01)**

சம்பள அளவுத் திட்டம் :- 15545-140x15-150x15-19895

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரத்துடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக/வணிக நிறுவனமொன்றில் ஏதேனும் பதவியொன்றில் ஒருவருட (01) திருப்திகரமான சேவை அனுபவம்.

அல்லது

2. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தாய்மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 04 திறமைச் சித்தி உட்பட, 06 பாடங்கள் சித்தியுடன் காசாளர், பதிவேட்டுக் காப்பாளர், முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் ஒரு (01) வருட திருப்திகரமான சேவை அனுபவம்.

அல்லது

3. கூட்டுறவுச் சங்கமொன்றில் முகாமைத்துவ உதவியாளர் தரம்-V பதவியில் இரண்டு (02) வருட திருப்திகரமான சேவைக் காலம்.

**பதவி வெற்றிடம் :- கிளை முகாமையாளர் பதவி எண் 208/14 (பதவி எண்ணிக்கை 01)**

சம்பள அளவுத் திட்டம் :- 15960-145x15-160x15-20535

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக காசாளர்/விற்பனை உதவியாளர் பதவியில் குறைந்தது நான்கு (04) வருடகால திருப்திகரமான சேவைக்காலம்

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரத்துடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக/வணிக நிறுவனம் ஒன்றில் காசாளர்/விற்பனை உதவியாள் பதவியில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால திருப்திகரமான சேவை அனுபவம்

அல்லது

3. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத்துறையில் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தியுடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வணிக நிறுவனம் ஒன்றில் காசாளர்/விற்பனை உதவியாளர் பதவியில் இரண்டு (02) வருடகால திருப்திகரமான சேவை அனுபவம்

அல்லது

4. கூட்டுறவு சங்கமொன்றில் கிளை முகாமையாளர் தரம் -V பதவியில் இரண்டு (02) வருடகால திருப்திகரமான சேவைக் காலம்.

**பதவி வெற்றிடம் :- கிளை முகாமையாளர் பதவி எண் 208/13 (பதவி எண்ணிக்கை 01)**

சம்பள அளவுத் திட்டம் :- 16365-150x15-165x15-21090

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக காசாளர்/விற்பனை உதவியாளர் பதவியில் குறைந்தது ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக்காலம்.

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரத்துடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக/வணிக நிறுவனம் ஒன்றில் காசாளர்/விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடகால திருப்திகரமான சேவை அனுபவம்

அல்லது

3. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத்துறையில் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தியுடன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வணிக நிறுவனம் ஒன்றில் காசாளர்/விற்பனை உதவியாளர் பதவியில் மூன்று (03)வருடகால திருப்திகரமான சேவை அனுபவம்.

அல்லது

4. கூட்டுறவுச் சங்கமொன்றில் கிளை முகாமையாளர் தரம் iv பதவியில் இரண்டு (02)வருடகால அல்லது கிளை முகாமையாளர் தரம் v பதவியில் மூன்று (03) வருடகால திருப்திகரமான சேவைக்காலம்

**பதவி வெற்றிடம் :- எரிபொருள் நிரப்புநர் பதவி எண் - 313/16 (பதவி எண்ணிக்கை 02)**

சம்பள அளவுத்திட்டம் :- 15135-135x15 -145x15-19335

**தகைமைகள்**

அ. நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் ஆ.கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பள திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம் இ.10 ஆம் தர கல்விச் சான்றிதழ்

**பதவி வெற்றிடம் :- காவலாளி பதவி எண் 315/17 (பதவி எண்ணிக்கை 01)**

சம்பள அளவுத்திட்டம் :- 14725-125x 15-140x15-18700

**தகைமைகள்**

அ. நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ஆ.கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பள திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்

அல்லது

இ.05 ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

01. விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் 02.சகல பதவிகளுக்குமான விண்ணப்பதாரர்கள் 18-45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03. தற்போது கூட்டுறவுச்சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நோடியாக விண்ணப்பங்களை அனுப்புதல். விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

04. கிழக்குமாகாண கூட்டுறவு ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சம்பள சுற்றறிக்கைகளுக்கு அமைவாக சம்பளங்கள் வழங்கப்படும். என்பதுடன் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏனைய படிகளும் வழங்கப்படும்.

05 சங்கத்தினால் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பபடிவங்களுக்கமைவான விண்ணப்பங்களை மாத்திரம் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும் விண்ணப்பப்படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்வதற்காக தங்களது பெயர் முகவரி எழுதப்பட்ட 9x4 கடித உறை ஒன்றை 24.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

06 விண்ணப்ப முடிவுத்திகதி :- 08.01.2022

குறிப்பு :- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**வரைவுள்ள அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**பிரதான வீதி, அக்கரைப்பற்று**
**11.12.2021**

---

## மாவட்டச் செயலகம் - பொலன்னறுவை

## 2022ஆம் வருடத்திற்கான வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தில் பொலன்னறுவை மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு வழங்கல் மற்றும் சேவை வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்கு 2022ஆம் வருடத்திற்காக பதிவு செய்து கொள்வதற்கான 2021-12-27ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான 2021-10-21ஆம் திகதிய தினகரன், தினமின, டெய்லி நியூஸ் எனும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகள் மற்றும் விதிகள் இதற்கு ஏற்புடையதாகும்.

**டப்.ஏ. தர்மசிறி,**
**மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**பொலன்னறுவை மாவட்டம்.**

---

## வெற்றுப்பாத்திரங்களை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை

இலங்கை தேசிய வைத்தியசாலையின் பாவனையிலிருந்து அகற்றப்படும் வெற்று பிளாஸ்டிக் கொள்கலன்கள்/ உபயோகிக்கப்பட்ட எக்ஸ்ரே படலம்/ வெற்று சேலைன் போத்தல்கள்/ காட்போட்/ பத்திரிகைகள்/ சிரட்டைகள்/ சிதைவடைந்த பிளாஸ்டிக் பாத்திரங்களை விற்பனை செய்வதற்காக விலை கோரல் 2021ஆம் ஆண்டு.

கொழும்பு -10, இலங்கை தேசிய வைத்தியசாலையில் சேகராமகும் மேற்படி உருப்படிகளை 2022.01.01 முதல் 2022.12.31 வரையான ஒருவருட காலத்தில் விற்பனை செய்வதற்காக 2021.12.29 அன்று மு.ப. 10.00 வரை விலைமனுக் கோரப்படுகின்றது. அத்தினத்திற்கு முன்னர் வார நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் மீளளிக்கப்படாத ரூபா 1000.00 தொகையைச் செலுத்தி வழங்கல் பிரிவில் இதற்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-2691111 நீடிப்பு 2722ஐ அழைத்து திரு. அகலங்க அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்)

**டாக்டர் டப்ளியு. கே. விக்ரமசிங்ஹ,**
**பிரதிப்பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை – கொழும்பு –10**

**புதிய வெளிநோயாளர் பிரிவுக்கு உபகரணங்களை வழங்கல்**

**இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.**

| விபரம் | குறியீட்டு இலக்கம் |
| --- | --- |
| 1. அலுவலக உபகரணங்கள் | SI/16/2021 |
| 2. ஏனைய உபகரணங்கள் | SI/16/2021 |

மேற்படி வழங்கல்களிற்காகத் தகைமையுள்ள நிறுவனங்கள், வர்த்தக சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களினால் நியமனம் பெற்ற அல்லது அதிகாரம் பெற்ற முகவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம். என்பதுடன் அலுவலக உபகரணங்களிற்காக மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 இற்கான வைப்பு மற்றும் ஏனைய உபகரணங்களிற்காக மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 இற்கான வைப்பொன்று இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்தி 2021.12.13 முதல் 2021.12.19 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்தில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாக வழங்கக் கூடிய வழங்குநர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2021.12.20 அன்று மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுத் திறக்கப்படும்.

**டாக்டர் டப்ளியு. கே. விக்ரமசிங்ஹ,**
**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

---

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**111**

**ஹொண்டா கார்கள் விற்பனைக்கு**

CP-CAC-8736-HONDA - DAA-RUS-VEZEL - மோட்டார் கார் 2014, அதியுயர் விலைக்கு CBC பினான்ஸ் லிமிடெட், 187, கட்டு கஸ்தொட்ட வீதி, கண்டி. தொலைபேசி 0812 200272. 080340

**119**

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

EP - GF - 3171-MAZDA-BONGO-BRAWNY- மோட்டார் லொறி 1995, வெள்ளை. அதியுய ர் விலைக்கு CBC பினான்ஸ் லிமிடெட், 187, கட்டு கஸ்தொட்ட வீதி, கண்டி. தொலைபேசி 0812 200272. 080344

### வேலைவாய்ப்பு

**325**

**தொழில்துறை பொது**

ஹோமாகம, பனாகொட, டெம்பில் பேர்க் கைத்தொழில் பேட்டையில் அவர்களது உற்பத்திப் பிரிவிற்கு திறன் உடைய/ திறன் அற்ற தொழிலாளர்கள் தேவை. வயது 18 32, சலுகைகளுடன் சிறந்த சம்பளம். தயவு செய்து அழையுங்கள் 0778869803 080411

---

## கொழும்பு பல்கலைக்கழக கணினி பாடசாலை (UCSC)

## விண்ணப்பங்கள்/பெயர்குறித்தலுக்கான அழைப்பு

# பணிப்பாளர் பதவி

கொழும்பு பல்கலைக்கழக கணினி பாடசாலையின் (UCSC) முகாமைத்துவ சபையானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24ஏ (I) தொடர்பாகவும் அதற்கு பின்னரான அதனது திருத்தங்களும் 2002.09.01 ஆம் திகதியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் UCSC இன் 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினதும் 2020 செப்டம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட 07/2020 என்ற இலக்கமுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகள் தொடர்பாகவும் கொழும்பு பல்கலைக்கழக கணினி பாடசாலையின் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள்/பெயர் குறித்தல்களை அழைக்கின்றது.

விண்ணப்பதாரிகள்/பெயர் குறிக்கப்படுபவர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும் 63 வயதிற்கு குறைவாகவும் 2022 ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் புதிய நியமனத்தை முகாமைப்படுத்தவும் தலைமைதாங்குவதற்கான தகைமையும் அனுபவத்தையும் கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும்.

பணிப்பாளரானவர் பாடசாலையின் முழுநேர அலுவலகராவார். 2002.09.01 ஆம் திகதியிடப்பட்டதும் UCSC இன் 2002 இன் 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், பணிப்பாளரானவர் பாடசாலையின் முதன்மையான நிறைவேற்று அலுவலர், முதன்மையான கல்விசார் அலுவலர் மற்றும் முதன்மையான கணக்கிடல் அலுவலகருமாவார். அவர் (ஆண்/பெண்) பதவி வழி அங்கத்தினரும் அதனது முகாமைத்துவ சபை, கல்விசார் ஆலோசனைச் சபை மற்றும் பாடசாலையின் முழுவதற்குமான கற்பித்தல் சபையின் தலைவருமாவார்.

UCSC இன் 2002 இன் 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், பணிப்பாளரானவர் அவர் (ஆண்/பெண்) முன்னராகவே பதவியிலிருந்து விலகினால் அல்லது 3 ஆம் உப-பந்தியில் வழங்கப்பட்டவாறு பதவியிலிருந்து அகற்றப்பட்டால் தவிர அவரது (ஆண்/பெண்) பதவியை அவரது (ஆண்/பெண்) நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்கு கணக்கீடு செய்யப்படும் அல்லது அவர் (ஆண்/பெண்) அவரின் (ஆண்/பெண்) 65 ஆம் வயதை பூர்த்தி செய்யும் வரை இவ்விரண்டில் எது முதலில் இடம்பெறும் நிகழ்வு வரையும் பதவியை வகிக்கலாம்.

பணிப்பாளரானவர் கல்விசார் தலைமைத்துவம், வடிவமைத்தல் மற்றும் முகாமைத்துவ கொள்கைகளை அமுல்நடாத்தல் மற்றும் முகாமைத்துவ சபையின் தீர்மானங்களை நிறைவேற்றல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகவிருப்பார். அவர் (ஆண்/பெண்) பாடசாலையின் பொதுவான நிருவாகத்திற்கு பொறுப்பாகவிருப்பார், எனவே கல்விசார் சிறப்பு, வெளிப்படைத்தன்மை, பதிலிறுக்கும் பொறுப்பு, சனநாயக முகாமைத்துவம் மற்றும் செயல்வலுவுள்ள பக்கசார்பற்ற தலைமைத்துவம் ஆகியவற்றின் கொள்கைகளை போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை/பெயர் குறித்தலுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.**

I. விண்ணப்பதாரியின்/ பெயர் குறிப்பிட்டவரின் பிறந்த திகதி அடங்கலாக (பிறப்பு சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று கட்டாயமாக இணைக்கப்படல் வேண்டும்) முழுமையான சுயதரவு (ஆதரவு வழங்கும் ஆவணங்கள்) மற்றும் தொடர்பு விபரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

II. நிறுவனத்தின் அபிவிருத்திக்கான தூரநோக்கின் பிரத்தியேக கூற்று.

III. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரி/பெயர் குறிப்பிட்டுள்ளவர் எதனை முன்மொழிகின்றார்.

IV. பெயர் குறிப்பிடப்படுபவரெனின் அவரது இணக்கக் கடிதம்.

V. விண்ணப்பதாரி/பெயர் குறிக்கப்படுபவர் (ஆண்/பெண்) இப்பதவிக்கு நியமிக்கப்படின், கொழும்பு பல்கலைக்கழக கணினி பாடசாலை நீங்கலாக அரசாங்க துறை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட அமைப்புக்கள் மற்றும் உயர் கல்விசார் நிறுவனங்களிலிருந்து அவர் விடுவிக்கப்படுவாரா என்பதனை குறிப்பிட்டு தொழில் வழங்குனரிடமிருந்து ஒரு கடிதம்.

தெரிவு செய்தல் செயற்பாடானது 2020 செப்டம்பர் 11 ஆம் திகதியிடப்பட்டதும் 07/2020 என்ற இலக்கமுமுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். இந்த சுற்றறிக்கையானது பின்வரும் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். **(www.ugc.lk (the link: https://www.ugc.ac.lk/index.php?option= com_content &view=article&id=2221%3Acommission-circular-no-072020-appointment-to-the-post-of-director-of-an-institute_&catid=176%3Acirculars-published-in-2020-012020-and-above&Itemid=20&lang=en)**

விண்ணப்பங்கள்/பெயர் குறித்தல்கள் ஆகியன முத்திரையிடப்பட்ட உறை/தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு **Secretary to the Board of Management, Establishmets & Administration Division, University of Colombo School of Computing, No. 35, Reid Avenue, Colombo-07** என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் 2021 டிசம்பர் 28 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். **"Application for the Post of Director"** என தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுமாறு விண்ணப்பதாரிகள்/ பெயர் குறிப்பிடுபவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் அல்லது மேலேயுள்ள பணிப்புரைகளுக்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்கள்/பெயர் குறிப்பிடுகைகள் நிராகரிக்கப்படும்.

**முகாமைத்துவ சபைக்கான செயலாளர்,**
**தாபனங்கள் மற்றும் நிருவாக பிரிவு,**
**கொழும்பு பல்கலைக்கழக கணினி பாடசாலை,**
**35, றீட் அவென்யு,**
**கொழும்பு-07.**
**10.12.2021.**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# ஏலம் அழைப்பு – 2022

## அம்பகமுவ பிரதேச சபை - கினிகத்தேனை

2022 ஆண்டுக்கு அம்பகமுவ பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் அதற்கமைவான சேவைகளை மேற்கொள்ளல் குறித்த ஏலம் அழைக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | ஏலம் வழங்கப்படும் சேவை | ஆகக் குறைந்த ஏலம் ரூ. சதம் | திரும்பப் பெறக்கூடிய வைப்பு ரூ. சதம் | திருப்பிச் செலுத்த முடியாத வைப்பு ரூ. சதம் | விண்ணப்ப படிவக் கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|---|---|---|
| 01 | கினிகத்தேனை கோழியிறைச்சி கடை | 1195000.00 | 23900.00 | 500.00 | 100.00 |

1. ஏல விண்ணப்பங்களை வழங்குதல்
   11.12.2021 அன்று மு.ப.10.00 மணி முதல் 27.12.2021 அன்று பி.ப. 3.00 மணி வரை அம்பகமுவ பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணங்களை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.
2. ஏல விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது
   28.12.2021 அன்று மு.ப.10.00 மணி வரை அம்பகமுவ பிரதேச சபை அலுவலகத்தில்.
3. ஏலங்களைத் திறத்தல்
   28.12.2021 அன்று மு.ப. 10.00 மணிக்கு அம்பகமுவ பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில்.
4. அம்பகமுவ பிரதேச சபைக்கு நிலுவை கட்டணங்களை செலுத்தவிருக்கும் நபர்களுக்கு நிலுவை கட்டணங்களை செலுத்திய பின்னர் தான் விண்ணப்பங்கள் வழங்கப்படும்.
5. விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை / கிராம உத்தியோகத்தின் சான்றிதழ் முன்வைக்க வேண்டும்.
6. கடையறைகளை பரிசீலனை செய்த பின்பு விண்ணப்ப படிவங்களை முன்வைக்க வேண்டும்.
7. அம்பகமுவ பிரதேச சபையின் கேள்வி ஆவணத்தில் குற்றப் பெயர் இருக்கும் ஏலதாரர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படாது.
8. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் - 051-2242224/051-4924824 ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.
9. ஏலங்களை ஏற்றுக்கொள்ளல் வழங்குதல் முடிவடைந்த பின்னர் 14 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட ஏலதாரர்களை தவிர நிராகரிக்கப்பட்ட ஏலதாரர்கள் முன்வைக்கும் ஏல பத்திரங்கள் (மீள் செலுத்தப்படும் வைப்பு) அவர்களிடம் திரும்பிச் செலுத்தப்படுவதுடன் அதற்காக எவ்விதமான வட்டியும் செலுத்தப்படாது.
10. அம்பகமுவ பிரதேச சபையால் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மூலமாக மட்டுமே ஏலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
11. ஏலம் முன்வைத்தல், திறப்பு மற்றும் ஏற்றுக்கொள்வது மற்றும் வழங்குதல் குறித்த அதிகாரம் அம்பகமுவ பிரதேச சபையின் கொள்முதல் குழுவுக்கு உண்டு.

**ஜயசங்க பெரேரா,**
**தலைவர் (கொள்முதல் குழு),**
**அம்பகமுவ பிரதேச சபை,**
**கினிகத்தேனை.**

# பெறுகை அறிவித்தல்

## சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை

வெலிசறை சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பிரதேச கேள்வி குழுவினால் கீழ்க்காணும் வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வழங்கல்கள் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை | கேள்விப் பத்திர இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாத) |
|---|---|---|---|---|---|
| 01 | சத்திர சிகிச்சை கூட உள்ளக பெயின் செய்தல் | 39,000.00 | C8 அல்லது அதற்கு மேல் | WL/18/2021 | 2,500.00 |

01. மேற்படி மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு 2021.12.11 முதல் 2021.12.24 வரை தேவைப்படும் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் கேள்விப்பத்திர பிரிவு மற்றும் மூலப்பிரதி எனக் குறிப்பிட்டு 2021.12.24 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை இற்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து பணிப்பாளர் பணிமனையில் ஒப்படைக்கலாம். 2021.12.24 மு.ப.10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரர் நியமித்த அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும் என மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசர**
**தொலைபேசி இல - 0112958271 (112)**
**பெக்ஸ் இல - 0112958272**

## தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் – களுத்துறை

## கட்டிடங்களைப் புதுப்பித்தல் - 2021

# விலைமனு அழைத்தல்

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் பிராந்தியப் பெறுகைக் குழுத்தலைவரினால் பின்வரும் புதுப்பிததல்களிற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த விபரம் | ICTAD ஆகக் குறைந்த தரம் | உத்தேச செலவினம் ரூபா மில் | விலைமனுப் பிணைத் தொகை ரூபா | ஒப்பந்தக் காலம் நாட்கள் | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | விரிவுரை மண்டபம் இல 6ஐ புதுப்பித்தல் Renovation of NTS Lecture Hall No. 06 | C7 அல்லது அதற்கு மேல் | 5.7 | 114,000.00 | 84 | 3300.00 |
| 02 | விரிவுரை மண்டபம் இல 3ஐ புதுப்பித்தல் Improvements to the Lecture Hall No. 03 | C8 அல்லது அதற்கு மேல் | 3.9 | 77,000.00 | 35 | 2800.00 |
| 03 | விரிவுரை மண்டபம் இல 3ன் கழிவறைத் தொகுதியை புதுப்பித்தல் Improvements to the Toilet for Lecture Hall No. 03 | C8 அல்லது அதற்கு மேல் | 2.5 | 50,000.00 | 49 | 2800.00 |
| 04 | புதிய கழிவலைத் தொகுதியை நிர்மாணித்தல் Proposed Toilet Block | C7 அல்லது அதற்கு மேல் | 9.8 | 196,800.00 | 84 | 3300.00 |

மேற்படி கருமங்களிற்கான அனைத்து விபரங்களையும் விலைமனுப்படிவங்களுடன் பெற்றுக் கொள்ளலாம்.

2021.12.10 முதல் 2021.12.23 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் அலுவலகத்தில் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். 2021.12.24 அன்று மு.ப. 10.30 இற்கு விலைமனுத் திறக்கப்படும்.

**தொலைபேசி இல. 034-2222264/ 034-2222001**
**நிருவாகப் பிரிவு நீடிப்பு: 237/333**

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞானக கல்வி நிறுவகம்,**
**களுத்துறை.**

## நீர்பாசன அமைச்சு
## நீர்பாசன முகாமைத்துவ பிரிவு

# பெறுகை அறிவித்தல்

## Multi chopper machine , Grass cutter மற்றும் பொலிசெக் பை தைக்கும் இயந்திரம் (sealer) மற்றும் சேதன பசளை தயாரிக்கும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

### உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு மற்றும் நீர்ப்பாசன அமைப்பு திறன் மேம்பாட்டு திட்டம் : (PEISEIP)

நாட்டின் செழுமை எனும் தொலைநோக்கு கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி காலநிலை மாற்றத்திற்கான நிலையான பசுமை சமூகப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு சேதன உள்ளீடுகளில் மட்டுமே உணவுப் பயிர்களை பயிரிடும் நோக்கத்துடன் நீர்ப்பாசன முகாமைத்துப் பிரிவினால் நிர்வகிக்கப்படும் முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாய அமைப்புகளால் சேதன பசளை உற்பத்தித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்காக கொள்முதல் குழுவின் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதியான வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**ஒப்பந்த இலக்கம் 01 - IMD/GOSL/NCB/2021/05**

**ஒப்பந்த இலக்கம் 02 - IMD/GOSL/NCB/2021/06**

| ஒப்பந்த இலக்கம் | லொட் இலக்கம் | விபரம் | அளவு | 2021.12.08 ஆம் திகதியிலிருந்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் பிணையின் பெறுமதி | மீளச் செலுத்தப்படாத மனுக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 05 | 01 | Multi chopper machine | 14 | ரூ. 55000.00 | ரூ. 1500.00 |
| | 02 | Grass cutter | 12 | | |
| | 03 | பொலிசெக் பை தையல் இயந்திரம் | 14 | | |
| 06 | 01 | மண்வெட்டி (9x9) | 12 | ரூ. 10000.00 | ரூ. 500.00 |
| | 02 | மண் முள் | 28 | | |
| | 03 | சவல் | 04 | | |
| | 04 | வீல் ப்ரோ | 06 | | |
| | 05 | பூவாளி (பிளாஸ்டிக்) | 21 | | |
| | 06 | தராசு (50 கி.கி.) | 14 | | |
| | 07 | பிளாஸ்டிக் தாச்சி | 24 | | |
| | 08 | இரப்பர் ஹோஸ் (100 அடி) | 10 | | |
| | 09 | சாதாரன ரெய்சி | 14 | | |
| | 10 | பொலித்தீன் (700 திண்மம்) | கி.கி. 320 | | |
| | 11 | டாபொலின் (20 x 20) | 21 | | |
| | 12 | பொலிசெக் பை (25கி.கி.) உரை | 12700 | | |

ஒப்பந்த இலக்கம் 05 இற்காக **மீளச் செலுத்தப்படாத ரூ.1,500/-** கட்டணத்தினையும் மற்றும் **மீளச் செலுத்தப்படாத ரூ.500/- கட்டணத்தினையும் கொழும்பு 07, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் நிதிப் பிரிவில்** செலுத்துவதன் மூலம் **2021.12.21** ஆம் திகதி **பி.ப.2.00** மணிவரை அலுவலக வேலைநாட்களில் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், மனுக்களை சமர்ப்பிக்கும் சந்தர்பத்தில் அம்மனுவிற்கான மேற்குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிலான 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் மனுப்பிணையினை சமர்ப்பிக்க வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட மனுக்களை **2021.12.21** ஆம் திகதி **பி.ப.2.30 மணிக்கு தலைவர், பிராந்திய கொள்முதல் குழு, நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு, தரை தளம் (அறை எண் 22), நீர்ப்பாசனத் திணைக்கள கட்டிடம், இல-230 பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் அல்லது நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவில் மனுக்கள் சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட கொள்முதலில் உள்ள மொத்த அலகுகளின் எண்ணிக்கையை வழங்க முடியாவிட்டால், வழங்க முடியுமான அளவுகளுக்கு மனுக்கள் சமர்ப்பிக்க முடியும்.

இந்த உபகரணங்கள் எமது பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ள (வாஹல்கட/மஹகந்துர/கலேன்பிந்துனுவேவ/ அம்பலாந்தோட்டை மற்றும் சியம்பலாண்டுவ) போன்ற நகரங்களுக்கு ஒப்படைக்கப்படும்.

மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
பிராந்திய கொளமுதல் குழு,
நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு,
தரை தளம் (அறை எண்.22),
நீர்ப்பாசனத் திணைக்கள கட்டிடம்,
இல.230, பௌதாலோக்க மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி : 011 - 2504517 / 2504518

## அம்பகமுவ பிரதேச சபை

# கினிகத்தேனை பேருந்து தரிப்பிட மூன்று மாடி கட்டிடத்தில் கடையறைகள் நீண்ட கால குத்தகைக்கு ஏலம் அழைப்பு

அம்பகமுவ பிரதேச சபைக்கு சொந்தமான கினிகத்தேனை நகரில் பிரதான பேருந்து தரிப்பிடத்துடன் மூன்று மாடி கட்டிடத்தில் 02 கடைகள் 30 ஆண்டு நீண்ட குத்தகைக்கு வாங்குபவர்களைத் தேர்ந்தெடுக்க ஏலம் அழைக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | கடையறைகள் தொடர்பான விபரம் | ஆகக் குறைந்த ஏலம் | விண்ணப்பப்படிவக் கட்டணம் | திரும்பப் பெறக்கூடிய வைப்பு | திருப்பிச் செலுத்த முடியாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | முதல் மாடி கடை அறை எண் 02 | 600,000.00 | 1,000.00 | 12,000.00 | 500.00 |
| 02 | முதல் மாடி கடை அறை எண் 03 | 600,000.00 | 1,000.00 | 12,000.00 | 500.00 |

1. ஏல விண்ணப்பங்களை வழங்குதல்
   11.12.2021 அன்று மு.ப.10.00 மணி முதல்
   27.12.2021 அன்று பி.ப. 3.00 மணி வரை
   அம்பகமுவ பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில்
2. ஏல விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது
   28.12.2021 அன்று மு.ப.10.00 மணி வரை
3. ஏலங்களைத் திறத்தல்
   28.12.2021 அன்று மு.ப. 10.00 மணிக்கு
4. ஏல விண்ணப்பங்களை எவ்வாறு சமர்ப்பிப்பது
   அம்பகமுவ பிரதேச சபையின் கினிகத்தேனை அலுவலகத்தில் உள்ள கேள்வி பெட்டியில் வைக்கப்பட வேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் "தலைவர், கொள்முதல் குழு, அம்பகமுவ பிரதேச சபை, கினிகத்தேனை" எனும் முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

ஏல விண்ணப்பங்களை வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. அம்பகமுவ பிரதேச சபை அதிகார பகுதியில் 05 ஆண்டுகள் நிரந்தர வதிவிடத்தை கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தும் நபர்களுக்கு தேசிய அடையாள அட்டை மூலம் அடையாளத்தை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஏல விண்ணப்பங்கள் வழங்கப்படும்.
2. ஒரு நபருக்கு ஒரு கடைக்கு மட்டுமே விண்ணப்பங்கள் வழங்கப்படும்.
3. அம்பகமுவ பிரதேச சபையால் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மூலமாக மட்டுமே ஏலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. அம்பகமுவ பிரதேச சபைக்கு எந்தவொரு வாடகை, வரி அல்லது கட்டணத்தையும் செலுத்தத் தவறிய மற்றும் தவறான ஆவணப்படுத்தப்பட்ட நபர்களுக்கு ஏல விண்ணப்பங்கள் வழங்கப்படாது.
5. கடைகளின் இருப்பிடம் திட்ட எண்களுடன் அலுவலக அறிவிப்பு பலகையில் காட்டப்படும்.
6. ஏலம் முன்வைத்தல், திறப்பு மற்றும் ஏற்றுக்கொள்வது குறித்த கூடுதல் தகவல்கள் மற்றும் நிபந்தனைகள் ஏல விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.
7. அம்பகமுவ பிரதேச சபையின் கொள்முதல் குழுவுக்கு ஏலங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ அதிகாரம் உண்டு.

**ஜயசங்க பெரேரா,**
**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**அம்பகமுவ பிரதேச சபை,**
**கினிகத்தேனை.**
**09.12.2021**

# நிர்மாண இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2022

## நீர்ப்பாசனத் திணைக்களம்

(நீர்ப்பாசன அமைச்சு)

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 2022ஆம் வருடத்தில் செயற்படுத்தப்படவுள்ள நிர்மாணங்கள், புனரமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக பின்வரும் நிர்மாண இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி போன்றவை சகிதம் வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அரசசார்பு நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள், ஏனைய வியாபார நிறுவனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொதுவானவை**

1.1 பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பிக்க விரும்புவோர் இயைபுடைய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக 200.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் மாதிரி விண்ணப்பப்படிவத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம் என்பதுடன் விண்ணப்பதாரர்கள் அதன் பிரகாரம் மட்டுமே விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத் தொகுதிகள் திணைக்களத்தின் www.irrigation.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. அந்த விண்ணப்பப்படிவங்களைத் தரவிறக்கம் செய்து அனுப்புவதானால் மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இயைபுடைய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

1.2 இயந்திராதிகள் மற்றும் வாகன உரிமை நிறுவனங்கள் மட்டுமே இந்தப் பதிவிற்கான தகுதியைப் பெறும்.

1.3 பதிவு செய்து கொள்ளும் ஒரு வகுதி இயந்திராதிக்காக 500.00 ரூபா (உதாரணம்: Crawler Excavator, Crawler Tractor போன்றன) வீதம் மீளளிக்கப்படாத கட்டணம் அறவிடப்படும் என்பதுடன் இதன்பொருட்டு 6 மாதம் செல்லுபடியாகக்கூடிய காசோலை அல்லது ரொக்கப் பணம் (காசோலைகள் இல்லாதவர்கள் மட்டும் ரொக்கப் பணமாக செலுத்தலாம்) ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டில் நிலவும் கொவிட் 19 வைரஸ் தொற்று நிலைமை காரணமாக ஏற்படும் அசௌகரியத்தைக் கவனத்திற் கொண்டு இக் கொடுப்பனவை 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய நீர்ப்பாசனப் பணிப்பாளரின் பெயரில் பேணப்படும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம்.

1.4 விண்ணப்பிக்கத்தக்கவர்கள் பின்வரும் ஆவணங்களை மட்டும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தேவையற்ற ஏனைய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் எனக் கேட்கப்படுகிறார்கள்.

அ. கம்பனிகள் பதிவு / வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி

ஆ. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ்

இ. இயந்திராதிகள் / வாகனங்களின் பதிவுப் பிரதி

ஈ. அரசாங்கத்திற்குச் சொந்தமான அமைப்புகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றன நிறுவனத்தின் தலைவரினால் நிறுவனக் கடிதத் தலைப்பில் கோரிக்கை கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.5 விண்ணப்பம், காசோலை மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் ''நிர்மாண இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022'' - வலயத்தின் பெயரைக் குறிப்பிட்டு (உ-ம்: அனுராதபுரம் அல்லது கொழும்பு அல்லது....) என விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

1.6 நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குப் பின் கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவித்தல்/விசாரணையின்றி நிராகரிக்கப்படும். அதேபோல் பதிவுக் கட்டணங்கள் இன்றி கிடைக்கப்பெறும் ஏதேனும் விண்ணப்பங்கள், மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழின் பிரதிகள் மற்றும் 6 மாத காலம் வரை செல்லுபடியாகும். காசோலையற்ற அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவித்தலும் விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.

1.7. அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளவர்கள் இந்தப் பதிவிற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவர்களாவர். பதிவு செய்து கொள்ளும் எந்தவொரு நிறுவனமும் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றவர்கள் என இனங்காணப்பட்டால் அவர்களின் பதிவு எந்நேரமும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படாமல் நியாயமான காரணத்தின் பொருட்டு இரத்துச் செய்யப்படலாம்.

1.8 எந்தவொரு விண்ணப்பத்தையும் அல்லது சகல விண்ணப்பங்களையும் தனது சொந்த தீர்மானத்தின் பிரகாரம் நிராகரிக்கும் உரிமையை நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

1.9 சகல விண்ணப்பதாரர்களும் எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் சகிதம் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (இயக்குபவர்கள் / சாரதிகள் மற்றும் உராய்வுநீக்கி போன்றவை சகிதம் வழங்குநர்களால் வழங்குதல் வேண்டும்)

1.10 2021-11-05ஆம் திகதிய ''தினகரன்'', ''தினமின'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட ''பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022ஆம் வருடம்'' பதிவிற்காக பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் இதற்காகவும் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும். அவ்வாறல்லாவிட்டால் 2022ஆம் வருடத்திற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இயந்திராதிகள் / வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கு கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

1.11 சகல இயந்திராதிகளின் உற்பத்தி வருடம் 2009ஆம் வருடத்திற்கு பின்னராகவிருத்தல் வேண்டும்.

**02. பதிவு செய்தல்:**

பின்வரும் வலயங்களுக்காக பதிவு செய்து கொள்ள விரும்புவோர் 200.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் அல்லது இணையதளத்தில் (www.irrigation.gov.lk) பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவ தொகுதியை முறையாகப் பூர்த்தி செய்து, முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பப்படித்தையும் காசோலையையும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பின்வரும் முகவரிக்கு 2021.12.31 திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விணணப்பப்படிவங்கள் மற்றும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவைகளை திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

காசோலைகளை இயைபுடைய பின்வரும் பிராந்திய பணிப்பாளரின் பெயரில் வரைதல் வேண்டும். 1ஆம் அட்டவணை (ivஆம் நிரலைப் பார்க்கவும்) / ரொக்கப் பணக் கொடுப்பனவுகளை vஆம் நிரலில் தரப்பட்டுள்ள கணக்கிலத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

**அட்டவணை 1**

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) |
|---|---|---|---|---|---|
| தொ. இல. | பிராந்தியம் | அஞ்சல் முகவரி | காசோலை வரையப்படும் நபர் | ரொக்கப்பண வைப்புக்கான BOC கணக்கிலக்கம் | தொடர்பு இலக்கம் |
| 01 | அம்பாறை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - அம்பாறை பிராந்தியம், 78, புதிய நகரம், அம்பாறை. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், அம்பாறை பிராந்தியம் | 7042395 | 063-2222276 |
| 02 | அனுராதபுரம் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - அனுராதபுரம் பிராந்தியம், விமான நிலைய வீதி, அனுராதபுரம். | நீர்ப்பாசனப் பணிப்பாளர், அனுராதபுரம் பிராந்தியம் | 7042398 | 025-2222499 |
| 03 | பதுளை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - பதுளை பிராந்தியம், பிரதேச பணிப்பாளர் அலுவலகம், பண்டாரவளை. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், பதுளை பிராந்தியம் | 7042403 | 057-2222527 |
| 04 | மட்டக்களப்பு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - மட்டக்களப்புப் பிராந்தியம், அம்மன் கோயில் வீதி, த.பெ. 02, கல்லடி, மட்டக்களப்பு. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், மட்டக்களப்புப் பிராந்தியம் | 7042440 | 065-4929357 |
| 05 | கொழும்பு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - கொழும்புப் பிராந்தியம், கொனிஸ்டன் பிளேஸ், கொழும்பு - 05. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், கொழும்பு பிராந்தியம் | 7042441 | 011-2584965 |
| 06 | காலி | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - காலி பிராந்தியம், 481, பெலிகஹ சந்தி, காலி | நீர்ப்பாசனப் பணிப்பாளர், காலி பிராந்தியம் | 7042408 | 091-2234845 |
| 07 | ஹம்பாந்தோட்டை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - ஹம்பாந்தோட்டை பிராந்தியம், தெபரவெவ, திஸ்ஸமஹாராம | நீர்ப்பாசனப் பணிப்பாளர், ஹம்பாந்தோட்டை, பிராந்தியம் | 7042446 | 047-2237070 |
| 08 | கண்டி | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - கண்டி பிராந்தியம், குண்டசாலை, கண்டி. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், கண்டி பிராந்தியம் | 7042447 | 081-2420423 |
| 09 | குருணாகல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - குருநாகல் பிராந்தியம், த.பெ. 44, கண்டி வீதி, குருநாகல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், குருநாகல் பிராந்தியம் | 7042448 | 037-2223161 |
| 10 | மொனராகலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - மொனராகலை பிராந்தியம், ஹுலந்தாவ, மொனராகலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர், மொனராகலை பிராந்தியம் | 7042422 | 055-2276017 |
| 11 | பொலொன்னறுவை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - பொலன்னறுவை பிராந்தியம், புதிய நகரம், பொலன்னறுவை | நீர்ப்பாசனப் பணிப்பாளர், பொலன்னறுவை பிராந்தியம் | 7042423 | 027-2222215 |
| 12 | புத்தளம் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - புத்தளம் பிராந்தியம், அனுராதபுரம் வீதி, புத்தளம் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், புத்தளம் பிராந்தியம் | 7042451 | 032-2265362 |
| 13 | திருகோணமலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - திருகோணமலை பிராந்தியம், ஓரிஸ் ஹில், திருகோணமலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர், திருகோணமலை பிராந்தியம் | 7042452 | 026-2222108 |
| 14 | மன்னார் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - மன்னார் பிராந்தியம், மன்னார் வீதி, முருங்கன் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், மன்னார் பிராந்தியம் | 7042429 | 023-2050351 |

**03. மதிப்பீட்டுத் தகவுத்திறன்**

3.1 ஒவ்வொரு உப விடயத்தின் கீழுள்ள இயந்திராதிகள் மற்றும் வாகனங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மணித்தியாலம் / நாள் என்பன எரிபொருள் சகிதமான விலைகள் (வெட் இன்றி) மதிப்பீடு செய்வதற்காக கவனத்திற் கொள்ளப்படும்.

3.2 ஒவ்வொரு உப விடயத்திற்கும் எரிபொருள் சகிதம் மணித்தியாலம் / நாள் என்பனவற்றுக்கான விலைகள் CIDA நிறவனத்தின் விலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவினால் அடிப்படை விலைகள் (Base Rate) தீர்மானிக்கப்படும். பாரிய குறைவு அல்லது கூடிய விலைகளை (சந்தையில் நிலவும் சாதாரண விலையுடன் ஒப்பிடுகையில் பாரிய அளவில் வித்தியாசத்தைக் காட்டுபவை) தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு முன் அகற்றப்படும் என்பதுடன் மிகுதி விலைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

3.3 பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேற்படி அடிப்படை விலைகளுக்காக (Base Rate) கணிசமான அளவு பதிலளிக்கக்கூடிய வழங்குநர்கள் அவர்களின் ஒப்புதலை அறிவிக்கும்படி கேட்கப்படலாம். அதன் பிரகாரம் அவர்கள் இயந்திராதிகளை வழங்குதல் வேண்டும்.

3.4 எரிபொருள், உராய்வுநீக்கி போன்றவை சகிதம் சமர்ப்பிக்கப்படும் விலைகள் (மணித்தியாலம் / நாளாந்த / மாதாந்த / தூரம்) என்பவற்றுக்கு விருப்பத்தைத் தெரிவிக்கும் வழங்குநர்களுக்கு முன்னுரிமை அளித்து ஆவணம் தயாரிக்கப்படும் என்பதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இயைபுடைய பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் / நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் ஒப்பந்தங்கள் கையளிக்கப்படும்.

**04. ஏனையவை**

யாராவது வழங்குநரொருவர் அடுத்தடுத்து இரண்டு வேளைகளில் இயந்திராதிகள் அல்லது வாகனங்களை வழங்கத் தவறினால் அவர் அல்லது அவர்கள் எதிர்கால ஒப்பந்தத்திற்காக கவனத்திற் கொள்ளப்படமாட்டார்கள்.

**05. இயந்திராதிகள் / வாகனம் / உபகரணங்களின் விபரம்**

| வகுதி | உப விடய இல. | வாகனம் / இயந்திராதிகளின் விபரம் (இயக்குவர்கள் / டிவைர்கள் சகிதம்) |
|---|---|---|
| A | **Crawler Excavators / Crawler Excavator (Long Arm) / Crawler Excavators (with Bolder Breaker) Crawler Excavators (with Barge) / Amphibious Excavator s / Wheel Excavators** | |
| | 1 | Crawler Excavator - PC 200 or equivalent |
| | 2 | Crawler Excavator - PC 120 or equivalent |
| | 3 | Crawler Excavator - PC 70 or equivalent |
| | 4 | Crawler Excavator - PC 40 or equivalent |
| | 5 | Crawler Excavator - PC 30 or equivalent |
| | 6 | Crawler Excavator - Long Arm (50 feet reach) - PC 200 or equivalent |
| | 7 | Crawler Excavator - PC 200 or equivalent with Boulder Breaker |
| | 8 | Crawler Excavator - PC 120 or equivalent with Boulder Breaker |
| | 9 | Crawler Excavator with Barge / Pontoon - PC 120 or equivalent |
| | 10 | Crawler Excavator with Barge / Pontoon - PC 70 or equivalent |
| | 11 | Crawler Excavator with Barge / Pontoon - PC 40 or equivalent |
| | 12 | Crawler Excavator with Barge / Pontoon - PC 30 or equivalent |
| | 13 | Amphibious Excavator - PC 200 or equivalent |
| | 14 | Amphibious Excavator - PC 120 or equivalent |
| | 15 | Wheel Excavator - PC 200 or equivalent |
| | 16 | Wheel Excavator - PC 120 or equivalent |
| B | **Crawler Tractors (Dozers) / Crawler Tractors (with ripper)** | |
| | 1 | Crawler Tractor - D4 or equivalent |
| | 2 | Crawler Tractor - D5 or equivalent |
| | 3 | Crawler Tractor - D6 or equivalent |
| | 4 | Crawler Tractor with ripper - D4 or equivalent |
| | 5 | Crawler Tractor with ripper - D5 or equivalent |
| | 6 | Crawler Tractor with ripper - D6 or equivalent |
| வகுதி | உப விடய இல. | வாகனம் / இயந்திராதிகளின் விபரம் (இயக்குவர்கள் / டிவைர்கள் சகிதம்) |
| C | **Vibrating Rollers / Smooth Compaction Roller / Vibrating Rammers / Vibratory Plate Compactor** | |
| | 1 | Vibrating Roller - 01 Ton (Walk behind) |
| | 2 | Vibrating Roller - 03 Ton |
| | 3 | Vibrating Roller - 05 Ton |
| | 4 | Vibrating Roller - 07 Ton |
| | 5 | Pad Foot Roller - 10 / 24 Ton (Compactor with vibration & pad foot) |
| | 6 | Smooth Drum Roller – 10 / 24 Ton (Compactor with vibration & smooth drum) |
| | 7 | Sheep Foot Roller Attachment - 02 Ton |
| | 8 | Sheep Foot Roller Attachment - 05 Ton |
| | 9 | Vibrating Rammer (Wacker BS50 or equivalent) |
| | 10 | Vibrating Rammer (Wacker BS60 or equivalent) |
| | 11 | Vibrating Rammer (Wacker BS70 or equivalent) |
| | 12 | Vibratory Plate Compactor |
| D | **Loaders** | |
| | 1 | Front End Loader - 1 $m^3$ (Bucket Capacity) |
| | 2 | Backhoe Loader (JCB 3CX or equivalent) |
| | 3 | Skid Steer Loader |
| E | **Motor Graders** | |
| | 1 | Motor Grader – 10 feet (Blade width) |
| | 2 | Motor Grader – 12 feet (Blade width) |
| F | **Rear Dumpers** | |
| | 1 | Rear Dumper - 1 Cub |
| | 2 | Rear Dumper - 2 Cub |
| | 3 | Rear Dumper - 3 Cub |
| | 4 | Rear Dumper - 5 Cub |
| | 5 | Rear Dumper - 2 Cub (Boulder Transport) |
| | 6 | Rear Dumper - 3 Cub (Boulder Transport) |
| G | **Tractors (with Trailer) / Tractors (With Water Bowser)** | |
| | 1 | Tractor with Trailer - 0.75 Cub |
| | 2 | Tractor with Trailer - 0.9 Cub |
| | 3 | Tractor with Water Bowser (3000 Lts.) |
| | 4 | Tractor with Water Bowser (5000 Lts.) |
| H | **Lorries / Truck Mounted Water Bowsers / Boom Trucks / Cranes / Low Bed Trailer** | |
| | 1 | Lorry – 10 Ton (Half body) |
| | 2 | Lorry – 16 Ton (Half body) |
| | 3 | Truck Mounted Water Bowser (Minimum capacity 6,000 Lts.) |
| | 4 | Truck Mounted Water Bowser (Minimum capacity 8,000 Lts.) |
| | 5 | Truck Mounted Water Bowser (Minimum capacity 10,000 Lts.) |
| | 6 | Truck Mounted Water Bowser (Minimum capacity 13,200 Lts.) |
| | 7 | Boom Truck - 03 Ton |
| | 8 | Boom Truck - 05 Ton |
| | 9 | Mobile Crane 10 Ton |
| | 10 | Mobile Crane 25 Ton |
| | 11 | Low bed Trailer with Mover |
| வகுதி | உப விடய இல. | வாகனம் / இயந்திராதிகளின் விபரம் (இயக்குபவர்கள் / டிரைவர்கள் சகிதம்) |
| I | **Air Compressors** | |
| | 1 | Air Compressor CFM 90 with Hammer |
| | 2 | Air Compressor CFM 125 with Hammer |
| | 3 | Air Compressor CFM 250 with Hammer |
| J | **Water Pumps / Submersible Water Pumps (With required accessories)** | |
| | 1 | 2" Engine Operated Water Pump |
| | 2 | 3" Engine Operated Water Pump |
| | 3 | 4" Engine Operated Water Pump |
| | 4 | 6" Engine Operated Water Pump |
| | 5 | 2" Electrically Operated Water Pump |
| | 6 | 3" Electrically Operated Water Pump |
| | 7 | 4" Electrically Operated Water Pump |
| | 8 | 6" Electrically Operated Water Pump |
| | 9 | 2" Submersible Water Pump |
| | 10 | 4" Submersible Water Pump |
| | 11 | 6" Submersible Water Pump |
| K | **Concrete Mixers / Poker Vibrators / Generators** | |
| | 1 | Concrete Mixer – 7 / 10 |
| | 2 | Concrete Mixer – 10 / 14 |
| | 3 | Poker Vibrator - 1" |
| | 4 | Poker Vibrator - 1 1/2" |
| | 5 | Generator 2 kVA – Single phase |
| | 6 | Generator 5 kVA – Single phase |
| | 7 | Generator 2 kVA – Three phase |
| | 8 | Generator 5 kVA – Three phase |
| L | **Double Cab** | |
| | 1 | 4WD 5 Seater with A/C |
| M | **VAN** | |
| | 1 | 14 Seater with Dual A/C |

மேலதிக விபரங்கள் தேவையானால் நீர்ப்பாசனப் பணிப்பாளரிடம் (ஒப்பந்தம் மற்றும் பெறுகைகள்) 011-2582677 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**பொறி. K.D.N. சிறிவர்தன,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல: 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**

## வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் கிடங்குகளை நிர்மாணித்தல் உட்பட பாதுகாப்பு வேலைகள், வனங்களை மீள் பயிர்ச்செய்தல் மற்றும் வன வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022

1. 2022ஆம் வருடத்தில் தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம், பின்னவலை மிருகக்காட்சிச்சாலை மற்றும் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள் மற்றும் வேலை வழங்குநர்களாக தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்துடன் தம்மை பதிவு செய்வதற்கு விரும்பும் அரச திணைக்களங்கள், அரசுக்குச் சொந்தமான வர்த்தகப் பணிகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், புகழ்பெற்ற வழங்குநர்கள், உள்நாட்டு முகவர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு பதிவு செய்வதாயின் ஒவ்வொரு பிரிவுக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு அனைத்து விண்ணப்பங்களும் ஒரு கடித உறையில் அதன் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் - 2022" என்று குறிப்பிட்டு சமர்ப்பிக்கலாம்.
2. ஒவ்வொரு பிரிவுக்காகவும் 500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் அறவிடப்படும். கட்டணம் ரொக்கப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். சிறாப்பர் கருமபீடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பணப்பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப்படிவத்தை பின்வரும் ஏதேனும் ஓர் இடத்திற்கு அனுப்புதல் வேண்டும்.
3. விண்ணப்பத்துடன் இணைத்து அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்,
   a. இயைபுடைய துறையில் வர்த்தகப் பதிவின் உறுதி செய்யப்பட்ட பிரதி
   b. VAT பதிவின் உறுதி செய்யப்பட்ட பிரதி (பதிவு செய்யப்பட்டிருந்தால்)
   c. உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட முகவராயின் உற்பத்தியாளர்களின் அங்கீகாரம்
   d. (வேலைகளுக்காக) CIDA (ICTAD) பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி
   e. பஸ் வண்டிகளின் பதிவுச் சான்றிதழ் (16ஆம் இலக்க பிரிவிற்குப் பொருந்தும்)
4. 2022ஆம் வருடத்திற்காக பதிவு செய்யப்படும் வழங்குநர்கள் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் வசதி ஒன்றை வழங்க இணங்குதல் வேண்டும். குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் வசதியை வழங்காத அல்லது பணப்பற்றுச்சீட்டு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட பிரதிகள் இன்றி கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
5. வழங்குநர்கள் இதற்கு முன்னர் திணைக்களத்தின் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
6. பின்வரும் முகவரிகளிலிருந்து விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு குறிப்பாக பின்வரும் இடங்களுக்கு அருகில் இருக்கும் வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவுக்காக விண்ணப்பிப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.
   I. பிரதிப் பணிப்பாளர், தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலை, அநகாரிக்க தர்மபால மாவத்தை, தெஹிவளை தொ.பே. 0112712751
   II. பிரதிப் பணிப்பாளர், பின்னவலை யானைகள் சரணாலயம், பின்னவலை, ரம்புக்கன தொ.பே. 0352266116
   III. பிரதிப் பணிப்பாளர், பின்னவலை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை, ரம்புக்கன தொ.பே. 0352266641
   IV. பிரதிப் பணிப்பாளர், ரிதியகம வனப்பயணப் பூங்கா, ருஹுணு ரிதியகம, அம்பலந்தோட்டை தொ.பே. 0473620410
7. அனைத்து விண்ணப்பங்களும் 2022 டிசம்பர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
**தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்**
**அநகாரிக்க தர்மபால மாவத்த, தெஹிவளை**

| இல. | பிரிவு | விபரம் | தேவையான இடங்கள் |
|---|---|---|---|
| **1. பொருட்கள்** | | | |
| 01. | கட்டிடப் பொருட்கள் | மணல், செங்கல், கிரவல், தரையோடுகள், மெட்டல் ரபள், கூரைத்தகடுகள், உபகரணங்கள், கருவிகள், கம் மற்றும் குளு, பலகை, நிறப்பூச்சு, பாதுகாப்பு கருவிகள் மற்றும் அங்கிகள், ஹோஸ், வீல்பெரோ, வாளி, தும்புத்தடி, மண்வெட்டி, சவல், திருகி, சுத்தியல், வாள், இரும்பு சட்டம், GI குழாய், GI தகடுகள், இரும்பு கோள், வெல்டிங்கோள், ஆணி, திருகாணி, ஆணிகள் மற்றும் சுரைகள், பூட்டுகள், PVC குழாய் சொக்கட், பித்தளைப் பொருட்கள் மற்றும் சகல கனரகப் பொருட்கள். | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச் சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 02. | மருத்துவ வழங்கல்கள் | மருந்தாக்கங்கள், மருந்துகள், முதலுதவி வழங்கல்கள், உபகரணங்கள். கண்ணாடிப் பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் ஏனைய கருவிகள் போன்றன. | மேலுள்ளவாறு |
| 03. | காகிதாதிகள் | புகைப்படப் பிரதி தாள், நகல் தாள், தட்டச்சுதாள், காட்போட் கோவைகள், CR புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், ஊசி, கிளிப், ஸ்டெப்லர், ஸ்டெப்லர் பின், பேனை, பென்சில், மை அழுத்தி Pad ink, வைட்போர்ட் மார்கர், Permanent Marker, கம், குளு, கல்குலேட்டர், பஞ்சர், செலோடேப் அடிமட்டம், கட்டும் நூல், ஏனைய எழுது பொருட்கள். | தலைமையகம், தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 04. | டோனர்கள் | புகைப்படப் பிரதி இயந்திர டோனர், அச்சுப்பொறிகள் மற்றும் தொலைநகல் இயந்திரங்களுக்கான கார்ட்ரிஜ், ஸ்டென்சில் பிரின்டர் ரிப்பன், டுப்ளோ இயந்திரதிற்கான மை | மேலுள்ளவாறு |
| 05. | அச்சு வேலைகள் | கடிதத் தலைப்புகள், டிக்கெட்டுகள், புத்தகம், துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் போன்றன | மேலுள்ளவாறு |
| 06. | துணி, ஆடைகள் மற்றும் பாதணிகள் | ஆடைகளுக்கான துணிகள், டிசேர்ட் பாதணிகள் போன்றன | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 07. | சவர்க்காரம் மற்றும் அழுக்ககற்றி | சவர்க்காரம், T-Pole, டெட்டோல், கை கழுவும் திரவம், தொற்றுநீக்கி, கையுறைகள் போன்றன. | மேலுள்ளவாறு |
| 08. | துப்புரவு உபகரணங்கள் | தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் துடைப்பான் போன்றன | மேலுள்ளவாறு |
| 2. சேவைகள் மற்றும் திருத்தவேலைகள் | | | |
| 09. | இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வாடகைக்கு பெறல் | பெக்கோ லோடர், எஸ்கவேட்டர், லொறி, பூம்டிரக், டிரக்டர்கள், வைப்ரேட்டர்கள், கொம்பிரசர்கள், ஹைபிரசர்ஸ் நீர் பம்பி, வெல்டர்கள் சகிதம் வெல்டிங் பொறித்தொகுதிகள், கொங்கிறீட் கலவை மற்றும் JCB போன்றன | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 10. | வாகன சேவை வழங்கல், உதிரிப் பாகங்கள் மற்றும் திருத்தவேலைகள் | மோட்டார் உதிரிப்பாகங்கள், பெற்றரிகள், டயர்கள், டியூப், மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்த்தல், சேர்விஸ் மற்றும் உள்ளக சுத்திகரிப்பு போன்றன. | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச் சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 11. | ஏனைய வாகன சேவைகள் | வாகன கெனவி, குஷன் வேலை, கவர் மற்றும் கார்பட் செய்தல் போன்றன | மேலுள்ளவாறு |
| 12. | பொதுவான திருத்தவேலைகள் | இயந்திராதிகள், வளிச்சீராக்கிகள், தொடர்பாடல் உபகரணங்கள். மின்சாரப் பொருட்கள், புகைப்படப்பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனிகள் மற்றும் சார்ந்த உருப்படிகள் போன்றன. | மேலுள்ளவாறு |
| 13. | மரங்கள் மற்றும் மரக் கிளைகளை வெட்டுதல் | தேவையற்ற மரக்கிளைகளை வெட்டுதல் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 14. | குப்பை மற்றும் கழிவுநீர் அகற்றல் | குப்பைகளை அகற்றுதல், மிருகக்காட்சிச்சாலை கழிவுகள், மரங்களின் பாகங்கள் மற்றும் குற்றிகள் மற்றும் சாக்கடைகள் | மேலுள்ளவாறு |
| 15. | கட்டுமான இடிபாடுகளை அகற்றுதல் | இரும்பு, திண்மங்கள், கட்டிடப் பொருட்கள், பிளாஸ்டிக் போன்றன. | மேலுள்ளவாறு |
| 16. | மின்சார இணைப்புகள் | CFL மின்குமிழ் LED மின் குமிழ், சாதாரண மின்குமிழ், ஹோல்டர், வயர், பிளக், பிளக்பேஸ், ஆளி, டிரிப் சுவிட்ச், Contube இன்சுலேஷன் டேப் | மேலுள்ளவாறு |
| 17. | நிலச் சீராக்கம் மற்றும் தாவரங்கள் | நிலச் சீராக்கம் மற்றும் பூக்கள் மற்றும் ஏனைய தாவரங்களை வழங்குதல் | தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை, பின்வல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 18. | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல் | உருக்கியொட்டுபவர்கள். குழாய் வேலையாட்கள், மின்னியலாளர்கள், தச்சர்கள் மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 19. | பஸ் வண்டிகளை வாடகைக்கு பெறல் | வாடகை அடிப்படையில், 20 - 36 இருக்கை வசதியுள்ள காற்றுச் சீராக்கப்பட்ட பஸ்கள் | வனப்பயணப் பூங்கா, ஹம்பாந்தோட்டை |
| 3. வேலைகள் | | | |
| 20. | நிர்மாணங்கள் | சிறிய நிர்மாண வேலைகள் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை மற்றும் கோனபல பண்ணை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |

## சுற்றாடல் அமைச்சு
## வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு

# அறிவித்தல்

## 2022 ஆம் ஆண்டில் ஐதரோகுளோரோபுளோரோ காபன் (HCFCs) இறக்குமதிக்கான ஒதுக்கீட்டினை (Quota) பெற்றுக்கொள்வதற்காகப் பதிவுசெய்தல்

1989 ஆம் ஆண்டிலிருந்து ஓசோன் படையினைக் குறைக்கும் பதார்த்தங்கள் தொடர்பிலான மொன்றியல் உடன்படிக்கைக்கான ஒரு தரப்பாக இலங்கை உள்ளது. மொன்றியல் உடன்படிக்கையின் கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையில் தேசிய செயற்பாட்டு மையமாக சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு தொழிற்பட்டுவருகின்றது.

மொன்றியல் உடன்படிக்கைத் தரப்பினர்களின் 19 ஆம் கூட்டத்தின் XIX/6 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக ஒழுங்குமுறையாகவும் கட்டங்கட்டமாகப் படிப்படியாகவும் ஐதரோகுளோரோபுளோரோ காபன் (HCFCs) உற்பத்தியையும் நுகர்வையும் குறைப்பதற்கு மொன்றியல் உடன்படிக்கையின் சகல உறுப்பு நாடுகளும் இணங்கிக்கொண்டுள்ளன. அதற்கிணங்க, வருடாந்த நுகர்வுக்கான HCFCs இன் உச்சபட்சமாக அனுமதிக்கக்கூடிய எல்லைகளானவை ஒவ்வொரு உறுப்பு நாட்டினாலும் வரையறுக்கப்பட்டுள்ளன. மொன்றியல் உடன்படிக்கை ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, அடிப்படை அளவுகோலிலிருந்து (13.9 ODPT) HCFC நுகர்வின் 35% குறைப்பானது 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதிக்கான இறக்குமதி ஒதுக்கீட்டின் அளவானது இக்குறைப்பு இலக்கின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. அதிகாரிகள் குழுவொன்றினால் வகுக்கப்பட்ட முறைமையொன்றைப் பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் தகுதியான வியாபார நிறுவனங்களுக்கிடையே இவ்வருடாந்த HCFCs ஒதுக்கீட்டினை சுற்றாடல் அமைச்சு பகிர்ந்தளிக்கின்றது.

அதற்கிணங்க, கடந்த 05 வருடங்கள் (2017-2021) அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாக குளிர் பதனூட்டிகளின் (refrigerants) இறக்குமதியில் ஈடுபட்டுள்ள வியாபார நிறுவனங்கள் / அல்லது குளிர்சாதனப்பெட்டிகளை அல்லது காற்றுப்பதனாக்கிகளை (air conditioners) ஒன்று சேர்த்து பொருத்துதல், பராமரித்தல் அல்லது காலக்கிரமத்தில் பழுதுபார்த்தல் சேவை (servicing) தொடர்புபட்ட செயற்பாடுகளில் தமது ஈடுபாட்டை நிரூபிக்கக்கூடிய நிறுவனங்கள் என்பனவும் 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவையாகக் காணப்படும். 2022 ஆம் ஆண்டுக்கான HCFC ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள வியாபார நிறுவனங்களிடம் பின்வரும் வகுதிகளில் ஒன்றின் கீழ் சுற்றாடல் அமைச்சுக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்குமாறு இத்தால் கோரப்படுகின்றது:

1. கடந்த 05 வருட (2017-2021) காலப்பகுதியின் போது குளிரூட்டல் (refrigeration) மற்றும் காற்றுப்பதனாக்கல் (air-conditioning) துறையில் ஒன்று சேர்த்து பொருத்துதல், பராமரித்தல் மற்றும் காலக்கிரமத்தில் பழுதுபார்த்தல் சேவை என்பவற்றை வழங்கும் வியாபார நிறுவனங்கள்.
2. கடந்த 05 வருட (2017-2021) காலப்பகுதியின் போது ஐதரோகுளோரோபுளோரோ காபன் (HCFCs) குளிர் பதனூட்டிகளின் (refrigerants) இறக்குமதியில் மாத்திரம் ஈடுபட்டுள்ள வியாபார நிறுவனங்கள்.

பதிவிற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது கீழே குறிப்பிடப்பட்ட தகவல்களை வழங்குதல் கட்டாயம் என்று விண்ணப்பதாரிகளுக்கு அறியத்தரப்படுகின்றது:
1. நிறுவனத்தின் பெயர்:
2. உரிமையாளரின் பெயர்:
3. நிறுவனத்தின் முகவரி:
4. உரிமையாளரின் தனிப்பட்ட முகவரி:
5. தொலைபேசி இலக்கமும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியும்:
6. வியாபாரப் பதிவிலக்கமும் திகதியும்:
7. வியாபாரத்தின் தன்மை:
8. வருமான வரி இலக்கம் (ஏற்புடையதாயின்):
9. வரிசெலுத்துநர் அடையாள (TIN) இலக்கம் (ஏற்புடையதாயின்):
10. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) இலக்கம் (ஏற்புடையதாயின்):
11. ஐதரோகுளோரோபுளோரோ காபன்களின் (HCFCs) இறக்குமதியில் அல்லது HCFCs குளிர் பதனூட்டிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் பராமரித்தல், காலக்கிரம பழுதுபார்த்தல் சேவை (service) ஒன்றுசேர்த்துப் பொருத்துதல் நிறுவுதல் அல்லது என்பவற்றிலான அனுபவப் பதிவுகள்.
    (கடந்த 05 வருட (2017-2021) காலப்பகுதியின் போது இறக்குமதி செய்யப்பட்ட / நிறுவுதல், பராமரித்தல், வழங்கப்பட்ட காலக்கிரம பழுதுபார்த்தல் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட HCFCs குளிர் பதனூட்டி வகை மற்றும் அளவுகள்)
12. 2022 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்படும் HCFC குளிர் பதனூட்டிகளின் வகையும் அளவும் (கிலோ கிராம் (Kgs)):

மேற்போந்த தகவல்களை சரிபார்ப்பதற்கான துணை ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளானவை விண்ணப்பங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். துணை ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வழங்கப்பட்ட ஆவணங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் ஒவ்வொரு தகுதியான விண்ணப்பதாரிக்கும் ஒதுக்கீட்டுப் பகிர்வைப் பரிந்துரைப்பதற்குமென தொழில்நுட்ப அதிகாரிகள் குழுவொன்றினால் (அவசியப்படுமாயின்) நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். இச்செய்முறை தொடர்பில் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக இருக்க வேண்டும்.

ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து பதிவிற்கான விண்ணப்பங்களானவை 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று பி.ப. 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் பணிப்பாளர், வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு, சுற்றாடல் அமைச்சு, "சொபாதம் பியச", 416/சீ/1, ரொபேர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரியிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது noulanka@gmail.com இற்கு மின்னஞ்சல் மூலமோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 0112034221, 0112034218 எனும் இலக்கங்களுக்கூடாக தொலைபேசி வாயிலாக அல்லது noulanka@gmail.com இற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்**
**சுற்றாடல் அமைச்சு**
**பத்தரமுல்லை**

## வாகன, ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022

2022ஆம் ஆண்டிற்கான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022 என்று குறிப்பிட்டு 2021.12.31 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு கையோடு கொண்டு வந்து அமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் அல்லது பதிவுத் தபாலில் செயலாளர், வாகன ஒழுங்குறுத்துகைபேரூந்துப் போக்குவர்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு, இல. 01 டீ.ஆர். விஜேவர்தன மாவத்த, கொழும்பு -10 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தியிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு பிரதான உருப்படி வகுதிக்கும் வேறு வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதான உருப்படித் தொகுதிக்கும் பதவிக்காக ரூ. 1000/- மீளளிக்கப்படாத கட்டணம் அறவிடப்படும். இந்தத் தொகை செயலாளர், வாகன ஒழுங்குறுத்துகை பேரூந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு பெயரில் உள்ள இல. 7042656 இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்து அல்லது காசோலை அனுப்புவதன் மூலம் அல்லது அமைச்சிற்கு வருகைதந்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

வழங்குநராக பதிவு செய்வதற்காக குறித்த வியாபார பதிவுச் சான்றிதழை மற்றும் வகுதி இல. 5 இன் கீழ் பதிவு செய்வதற்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுச் சான்றிதழின் போட்டோப் பிரதியையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உங்களது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியொருவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| 1. **அலுவலக உபகரணங்கள் வழங்குதல்** | 4. **அலுவலக சேவைகளை வழங்குதல்** |
| 1.1 தளபாடங்கள் (மரம், பலகை, இரும்பு, பிளாஸ்டிக்) | 4.1 அச்சுவிடயங்கள், அறிவித்தல் பலகை மற்றும் பெயர் பலகை |
| 1.2 போட்டோப் பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், அச்சு இயந்திரம் | 4.2 சுத்திகரிப்பு விடயங்கள் (துணி, கார்பட், குஷன்) |
| 1.3 கணனி மற்றும் துணைப்பாகங்கள் | 4.3 அலுவலக உபகரணம் பழுது பார்த்தல் |
| 1.4 கெமரா வகைகள், புரொஜெக்டர் மற்றும் தொலைக்காட்சி | 4.4 மின் உபகரணங்கள் பழுது பார்த்தல் |
| 1.5 மின் உபகரணங்கள் வளிச் சீராக்கி இயந்திரங்கள் | 4.5 கணனி மற்றும் துணைப்பாகங்கள் பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| | 4.6 வளிச்சீராக்கி இயந்திரம் பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 2. **பாவனைப் பொருட்கள் வழங்குதல்** | |
| 2.1 சகல காகிதாதிகள் | 5. **கட்டிடப் பொருட்கள், தொழிலாளர்களை வழங்குதல் மற்றும் கட்டிட பழுது பார்த்தல்** |
| 2.2 டோனர், காட்ரிஜ், ரிபன் மற்றும் சீடி தட்டுகள் | 5.1 சகல கட்டிடப் பொருட்களையும் வழங்குதல் |
| 2.3 சகல துப்புறவேற்பாட்டு பொருட்கள் | 5.2 தீந்தை வகை வழங்குதல் |
| 2.4 ரப்பர் முத்திரை மற்றும் நாள் முத்திரை | 5.3 அலுவலக காணி ஒதுக்கும் விடயங்கள் |
| 2.5 குசன் உறை, மேசை துணி மற்றும் திரைச் சீலை | 5.4 சகல பயிற்சி மற்றும் பயிற்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல் |
| | 5.5 கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்கள் |
| 3. வாகன பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் | |
| 3.1 வாகனங்களை பழுது பார்த்தல் | |
| 3.2 வாகனங்களை சேர்விஸ் செய்தல் | |
| 3.3 வாகன வளிச்சீராக்கல், மின்சார சேவை மற்றும் கெமரா பொருத்துதல் | |
| 3.4 குசன் வேலை மற்றும் ஆசனங்கள் அமைத்தல் | |

### 2022ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் விண்ணப்பப்படிவம்

1. வர்த்தக நிறுவனத்தின் பெயர்:
2. முகவரி:
3. வியாபார பதிவுச் சான்றிதழ்:
4. வியாபாரத்தின் தன்மை: உற்பத்தியாளர்/ உள்ளூர் பிரதிநிதி/ விநியோகிப்பாளர்/விற்பனைப் பிரதிநிதி
5. தொடர்பு கொள்வதற்கான பெயர்:
6. தொ.பே. இலக்கம்: பெக்ஸ்: மின்னஞ்சல்:
7. விண்ணப்பிக்கும் பிரதான வகுதி மற்றும் உருப்படி மற்றும் இலக்கம் மற்றும் விபரம்"

மேற்படி தகவல்கள் சரியானவை எனவும் பதிவுச் சான்றிதழை இதனோடு இணைத்து காசோலை/பற்றுச் சீட்டுடன் சமர்ப்பிக்கப்படுவதாக உறுதி செய்கிறேன்.

திகதி:.................... **கையொப்பம்**..................
**உத்தியோகபூர்வ முத்திரை**

**செயலாளர்**
**வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும்**
**புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**
**இலக்கம் 01, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, மருதானை, கொழும்பு -10.**
**தொடர்பு தொ. பே. இல. (கணக்குப் பிரிவின் தொ.பே. இல. 011 2690479)**



# ஆஷஸ்: மாலன்- ரூட்டின் இணைப்பாட்டத்துடன் வலுவான நிலையில் இங்கிலாந்து அணி

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின், முதல் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி, நேற்யை மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 220 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆட்டநேர முடிவில், டாவிட் மாலன் 80 ஓட்டங்களுடனும் ஜோ ரூட் 86 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இங்கிலாந்துக் அணி 58 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

கடந்த (புதன்கிழமை) பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 147 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜோஸ் பட்லர் 39 ஓட்டங்களையும் ஒல்லி போப் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பெட் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளையும் மிட்செல் ஸ்டாக் மற்றும் ஜோஸ் ஹெசில்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கிறீன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி, 425 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ட்ராவிஸ் ஹெட் 152 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 94 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ரொபின்சன் மற்றும் மார்க்வுட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டுகளையும் ஜெக் லீச் மற்றும் ஜோ ரூட் ஆகியோர் தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 278 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 220 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.




இதன்போது இங்கிலாந்து அணி சார்பில், ஹசீப் அஹமட் 27 ஓட்டங்களுடனும் ரொறி பர்ன்ஸ் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் மற்றும் பெட் கம்மின்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இன்னமும் 8 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் நான்காவது நாள் ஆட்டத்தை இங்கிலாந்து கிரிக்கெட் அணி, இன்று தொடரவுள்ளது.

43rd OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021
SLTMOBITEL The Connection

## 43வது ஒப்சவர் SLT-மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..............................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..............................
வாக்களித்தவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
மொபைல் இல. : ..............................

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT- மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-12-2021 இல. 10




## Vernost Marketing Technology Solutions யின் பங்கஜ் திரிபதி லங்கா பிரீமியர் லீக் இன் கண்டி உரிமையை பொறுப்பேற்பு

லங்கா பிரீமியர் லீக் கண்டியைத் தளமாகக் கொண்ட உரிமையாளர்களான Vernost Marketing Technology Solutions இன் பிரதமநிறைவேற்று அதிகாரி பங்கஜ் திரிபதி மற்றும் Safexpaya யின் நிறுவுனரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி குப்தா ஆகியோர் கடந்த 5ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரைநடைபெறவிருக்கும் நாட்டின் முதன்மையான ரி 20போட்டித் தொடரின் எதிர்வரும் 2ஆவது சீசனில் இணை–உரிமையாளர்களாக முன்வந்துள்ளனர்.

கடந்த ஆண் டு LPL இல் Kandy Tuskers என பெயரிடப்பட்டிருந்த கண்டி உரிமையானது இம்முறை Kandy Warriors எனபெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பங்கஜ் திரிபதி கருத்து தெரிவிக்கையில்,

'லங்காபிரீமியர் லீக் இல் கண்டி வொரியர்ஸ் இன் இணை உரிமையாளராக அங்கம் வகிப்பதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். எல்பிஎல் உலகெங்கிலுமுள்ள கிரிக்கட் இரசிகர்களின் கற்பனையை கவர்ந்துள்ளது. மெலும் எதிர்வரவிருக்கும் சீசன்களில் இந்த அற்புதமான போட்டியில் பங்குதாரர்களாக இருக்கவும் விரும்புகின்றோம்.நாம் இரசிகர்களுடன் இணைந்திருக்கவும் சிறந்தபோட்டித் தொடரினைக் காணவும் ஆவலுடன் எதிர்ப்பார்ப்பதுக் காத்திருக்கின்றோம்.' எனத் தெரிவித்தார்.



## மலையக வீராங்கனைக்கு இராணுவ விளையாட்டு போட்டியில் இரு பதக்கங்கள்




இலங்கை இராணுப் படையணிகளுக்கிடையில் வருடந்தோறும் நடைபெறும் தேசி விளையாட்டுப் போட்டி அண்மையில் சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது இராவணத்தின் பொது சேவைப் படையணியைப் (பொது சேவா பலக்காய) பிரதிநிதித்துவப்படுத்தி மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொண்ட பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஸ்பிரிங்வெளி தோட்டத்தின் மேமலைப் பிரிவைப் பிறப்பிடமாகக் கொண்ட மூர்த்தி தமிழ்ச்செல்வி என்ற வீராங்கனை இரு வெண்கலப் பதக்கங்களை வெற்றிக் கொண்டு மலையக மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரது குழு 4× 400 அஞ்சல் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளதோடு, 10 கிலோமீற்றர் போட்டி நடைப் போட்டியில் 3ஆம் இடத்தை பெற்றுள்ளார்.

ஸ்பிரிங்வெளி, மேமலைப் பிரிவில் இயங்கும் மலைக்குயில் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட வீராங்கனையாக இவர் மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் வெளிப்படுத்தி திறமையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை இராணுவ கரப்பந்தாட்ட அணிக்கு உள்வாங்கப்பட்டார்.

மெய்வல்லுநர் போட்டிகளில் உள்ள ஈடுபாட்டின் காரணமாக குறித்தப் போட்டிகளில் பங்குபற்றி பதங்களை வென்றுள்ளார்.

இவ்வீராங்கனை வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலய அதிபரும், உடற்கல்விப் பயிற்றுவிப்பாளருமான சுந்தராஜிடம் கரப்பந்தாட்டப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'ஒரு வீட்டுக்கு ஒரு மரம்' விசேட மர நடுகை வேலைத்திட்டம்



**பாலமுனை விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை அல்-நஜா விளையாட்டுக் கழக உறுப்பினர்களின் வீடுகளில் பயன் தரும் மரங்களை நடும்பொருட்டு, அக்கழகம் ஒரு வீட்டுக்கு ஒரு மரம் எனும் தொனிப்பொருளில் விசேட மர நடுகை வேலைத்திட்டமொன்றினை முன்னெடுத்துள்ளது.

குறித்த மர நடுகை வேலைத்திட்டத்திற்கமைவாக, கழக உறுப்பினர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு கழகத்தின் முகாமையாளர் ஏ.எல்.றிம்சான் தலைமையில் (21) அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ், கழகத்தின் ஆலோசகரும், ஊடகவியலாளருமான ஏ.எல்.றியாஸ், உபதலைவர் எஸ்.எல்.முசம்மில், பொருளாளர் ஏ.எல்.றிம்சான், கழகத்தின் சிரேஷ்ட வீரர்கள் பலரும் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வழங்கி வைத்தனர். இதன்போது அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் 100 உறுப்பினர்களுக்கு மரக்கன்றுகளுடன் சேதனப் பசளையும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சவளக்கடை பொது விளையாட்டு மைதானம் அபிவிருத்தி

**சவளக்கடை குறூப் நிருபர்**

ஜனாதிபதின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடத்திற்கமைய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் கிராமிய பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் பொது விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்திற்கமைய சவளக்கடை பொது விளையாட்டு மைதானம் 50 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான பணிகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டீ.வீரசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், நாவிதன்வெளி பிரதேச சபை உப தவிசாளர் ஏ.கே.ஏ.சமட், சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சீன் பக்கீர், நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் எம்.அப்துல் றகீம், பிரதேச சபை உறுப்பினர்களான ரீ.யோகநாயகம், ஏ.பீ.சுபைதீன், எம்.ஜஹான், எஸ்.கிருபைமலர், ஆர்.யோகஸ்வரி, விளையாட்டு வீரர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 11ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.